

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதஹோபிலமடம் 40-வது பட்டத்தையலங்கரித்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்
பூர்வாச்ரமத்தில் அருளிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகையின்,


தமிழ்க்கருத்தாக்கமான
சொக்கனூர் வித்வான் Dr. எஸ். வி. நரஸிம்ஹாச்சார்யர், M. A., Ph. D. இயற்றிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த தீபிகை

**மூன்றாவது அத்தியாயம்**

*1989*





ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதஹோபிலமடம் 40-வது பட்டத்தையலங்கரித்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்
பூர்வாச்ரமத்தில் அருளிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகையின்,

தமிழ்க்கருத்தாக்கமான
சொக்கனூர் வித்வான் Dr. எஸ். வி. நரஸிம்ஹாச்சார்யர், M. A., Ph. D. இயற்றிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த தீபிகை

**மூன்றாவது அத்தியாயம்**

1989

This Book was published with the financial assistance of Tirumalai Tirupathi Devasthanam's TIRUPATHI AID TO AUTHORS SCHEME.

ஸ்ரீ வாணீ விலாஸ் ப்ரஸ், ஸ்ரீரங்கம். போன் ; 85-2287

5. அணுச்ச என்ற அதிகரணத்தில் ப்ராணனின் ஸூக்ஷ்மத்வமும்.

6. ஜ்யோதிராத்யதிகரணத்தில் - அக்ன்யாதி தேவதைகளின் வாகாதி அதிஷ்டானத்தில் பகவத் பார தந்த்ர்யமும்.

7. த இந்த்ரியானி என்ற அதிகரணத்தில் ப்ராணனுக்கு அநிந்த்ரியத்வமும்.

8. ஸம்ஜ்ஞாமூர்த்யதிகரணத்தில் – தன் நாபியில் தோன்றிய சதுர்முக சரீரகனுய் ஆத்யனுய் பஞ்சீகரண கர்த்தாவான பரமபுருஷனிடம் பஹு விதமான சித் அசித் என்னும் வ்யஷ்டி நாமரூப உத்பத்தியும் என்பவை எட்டு அதிகரணங்களிலே விளக்கப்பட்டன.

இதி ஸ்ரீரங்க சடஜித் காரிஜாதகடாக்ஷத: ।
பாஷ்யார்த்ததீபிகாபூர்வபாக: பூர்ணேஹரேர்முதே ॥

சுபம்

# மூன்றும் அத்தியாயம்

ஸர்வாசார்யான் ஹ்ருதா த்யாத்வா நமஸ்க்ருத பதாம்புஜஹ ।
பாஷ்யார்த்த தீபிகா க்ரந்தேத்ருதீ யாத்யாயமாரபே ॥

முன் இரண்டத்யாயங்களில் குத்ருஷ்டிகளின் கோணல் யுக்திகளால் அசைக்கவொண்ணுத ஸமஸ்த ஜகதேக காரணத்வத்துடன் அகில ஹேய ப்ரத்யனீகனுய் ஸித்தவஸ்துவாய் உள்ள பரமபுருஷனை ச்ரிய: பதியைப் பற்றி விசாரித்து, பின் இரண்டத்யாயங்களாலே - சேதனன் செய்யத்தக்க பரம புருஷன் திருவடிகள் விஷயத்தில் பக்தி - ப்ரபத்தி என்ற ஸாத்யோபாயங்களையும் அதன் பலமான பரமபுருஷ பரிபூர்ணனுபவஜனித கைங்கர்யங்களையும் விசாரிக்கிருர் என்று த்விக ஸங்கதி.

மூன்றும் அத்யாயத்தில் மூன்றும் பாதத்தில் விசாரிக்கப்போகும் ஸாத்யோபாய ரூபமான பக்திக்கு அதிகாரம் ஸித்திக்க வேண்டி ஐச்வர்யம் கைவல்யம் முதலியவற்றில் வைராக்யம் தோன்றக் காரணமான ஸம்ஸார தோஷத்தை முதல் பாதத்தில் நிரூபிக்கிருரென்று ஸங்கதி.

இம்மூன்றும் அத்யாயம் முதல் இரண்டு பாதங்களாலே வைராக்யமும் உபயலிங்கமும் (அகிலஹேயப்ரயனீகத்வமும், ஸமஸ்தகல்யாண குணுகரத்வமும்) பின் இரு பாதங்களாலே அங்கஸஹிதமான ப்ரஹ்ம வித்யையும் பற்றி ஸூத்ரகாரர் காட்டுகிருர்,

முதல் வைராக்யபாதத்தில் ஐச்வர்யாதிகளில் வைராக்யமுண்டாகும் ப்ரகாரத்தைக் காட்டுகிருர் என்று த்விக ஸங்கதி.

முன் அதிகரணத்தில் ஸம்ஜ்ஞா மூர்த்திக்லுப்தி: என்று மூர்த்தியின் ப்ரஸ்தாவம் வந்ததால் இங்கு அது தொடர்புள்ள வேறு மூர்த்தி விசாரிக்கப்படுகிறதென்று ஸங்கதி.

## 284 (ஸூ) ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரச்ன நிரூபணாப்யாம் (1)

இங்கு ஒருவர் கேட்கிருர் : முக்தி நம்மால் சாதிக்கத்தக்கதா - அன்ரு? ஸாதிக்க முடியாததென்ருல், சாதனுத்யாயத்திற்கு ப்பலமில்லாததால் அதை ஆரம்பிப்பது வீண். அதற்காக முக்தி சாதிக்கத்தக்கதேயென்ருல் ஸ்வர்க்காதி பலன்கள் போல் அதுவும் அழிவுள்ளதாகும். ஆகையால் முக்தியை நித்யை எனக்கூறமுடியாது. இந்த விஷயத்தில் என்ன வழி என்று கேட்கிருர். அதற்கு விடையாவது, உபயவிபூதி விசிஷ்டனை ப்ரஹ்மத்தை அனுபவிப்பதென்னும் முக்தியானது முன்பில்லாதது, உபாஸகனுலே சாதிக்கப்படுவதேயாதலின் - முக்யர்த்தம் ஸாதனுத்யாயம் தொடங்குவதில் தவறில்லை. அவ்வாருயில் முக்தி அந்த்யமாகுமேயென்பதற்கு விடையாதெனின், கூறுவோம். அபாவம் என்பது ஓர் பாவமே என்பது நம் ஸித்தாந்தம். (பவாந்தரா பாவபக்ஷம்) ஸம்ஸாரதசையிலுள்ள ஜ்ஞானஸங்கோச தசைக்கு த்வம்ஸமே (அழிவே) முக்தி-விசிஷ்டப்ரஹ்மானுபவரூபமது. தார்க்கிகா மதத்தின்படி த்வம்ஸத்திற்கு பூர்வாவதி (தொடக்கம்) உண்டாம். உத்தராவதி - முடிவு இல்லை. ஆதலின், நித்யத்வம் சித்தமாகிறது. ஆனுல், ஜ்ஞானத்துக்கு, ஸ்வபாவஸித்தமான விகாஸம் (மலர்ச்சி) ஸம்ஸாரதசையில் கர்ம ரூப உபாதிவசத்தால் ஸங்குசிதம் (சுருங்கியது) ஆகியிருக்கையில் - பகவதுபாஸனத்தால் ஸங்கோசம் விலகவே ஸ்வாபாவிகமான ஜ்ஞானவிகாஸம் ஏற்படுகிறது. இதைவிட்டு "நசபுனராவர்த்ததே" என்று கூறிய நித்யத்வமும், ஸசாநந்த்யாய கல்பதே என்று முக்திதசையில் வரக்கூடும் ஜ்ஞான வியாப்தியைக் கூறும் ச்ருதியால் நேரில் கூறப்பட்டது. ஆதலால் இந்த சாதனுத்யாயம் ஆரம்பிப்பதில் தவறில்லை என்ற கருத்து ஸ்வாமி தேசிகனுல் அருளப்பட்டது.

இந்த தேஹியானவன் இந்த மனித சரீரத்தைவிட்டு வேறு சரீரத்தையடையும்போது சரீர காரணங்களான பூதஸூக்ஷ்மங்களுடன் சேர்ந்து செல்கிருனு? அல்லது தனியே செல்கிருனு என்பது சம்சயம். பூதஸூக்ஷ்மங்களுடன் கூடப் போகவில்லை என்பது பூர்வபக்ஷம். போகுமிடங்களில் பூதஸூக்ஷ்மங்கள் ஸுலபமுமாயிருப்பதாலே உடன் கொண்டு செல்வதில்லையென்று பூர்வபக்ஷம். இதை நிரஸிக்கிருர்.

## ததந்தா ...... நிரூபணாப்யாம்

முன் அதிகரணத்தில் 'ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்தி' என்ற ஸூத்ரத்தில் உள்ள மூர்த்தி சப்தத்துக்குப் பொருளான சரீரத்தை இங்கு தத்-சப்தம் குறிக்கிறது. ***ததந்தரம்*** - மனுஷ்யாதிதேஹவ்யதிரிக்தமான தேவாதிதேஹம் அதன் ***ப்ரதிபத்தௌ*** அடைகையில், ***ஸம்பரிஷ்வக்த:*** முன்தேஹத்தில் கடைந்தெடுத்த பூதஸூக்ஷ்மங்களுடன் கூடியவனான ஜீவன், ரம்ஹதி-தேவலோகத்திற்குச் செல்கிறார். ***ப்ரச்ன நிரூபணாப்யாம்*** பஞ்சாக்னிவித்யையிலுள்ள கேள்வி பதில்களால் அவ்வாறே தோன்றுகிறது.

பஞ்சாக்னிவித்யையானது - சாந்தோக்யத்தில் - ச்வேதகேதுர்ஹாருணேய: பாஞ்சாலாநாம் ஸமிதிமேயாய எனத் தொடங்கி விவரிக்கப்படுகிறது. உத்தாலகபுத்ரனாய் ஸத்வித்யையில் சிஷ்யனான ச்வேதகேது என்ற ரிஷி ப்ரவாஹணரென்னும் பாஞ்சால மன்னனின் ஸபையை அடைந்தார். அந்த ச்வேத கேதுவைக் குறித்து அம்மன்னன் ஐந்து கேள்விகளைக் கேட்டார். அதிலொன்று - ஐந்தாவது ஆஹுதியில் தீர்த்தம் புருஷனெனப் பெயர் பெறுவதை அறிவீரா? என்பது. இங்கு ஜலம் என்பது த்ரிவிருத்கரணத்தால் ப்ருதிவ்யாதிகளோடு கூடின அப்பு (ஜலம்) அக்னியாக நிரூபிக்கப்பட்ட ஸ்வர்க்கலோகம், மேகம், ப்ருதிவீ புருஷன் என்னும் நான்கு (அக்னிகளில்) இடங்களில் ஜீவனுடன் ப்ரவேசித்து, பின் ஐந்தாவது ஆஹுதியான ஸ்த்ரீயின் யோனிப்ரவேசத்தின் பின் புருஷனென்று பெயரைப் பெறுகின்றன என்று வினாவாக்கியத்தின் பொருள். இதையறியாத ச்வேதகேது தன் பிதாவிடம் வந்து கேட்டார். அவரும் அதனையறியாமல் ப்ரவாஹணனென்னும் அரசனையணுகி ப்ரச்னத்திற்கு உத்தரம் வேண்டிப் பிரார்த்தித்தார். பஞ்சாக்னிவித்யாநிஷ்டனான ராஜாவும் உத்தாலகருக்கு அவ்வித்யையை உபதேசித்து - இதிது பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸ: பவந்திஎன்று பதிலளித்தார். ஆகையால், இந்த கேள்வி பதில்களால் ஸூக்ஷ்ம தேஹத்துடன் ஜீவன் தேவலோகத்துக்குச் செல்கிறான் என்று ஸித்தம்.

ஆமாம்; ஆப: புருஷவசஸ: என்னுமிடத்தில் அப்சப்தத்தால் ப்ருதிவீ முதலிய வேறு பூதங்களுக்கும் எப்படி வ்யவஹாரம் ஏற்படும் என்றால் அந்த சங்கையைப்பரிஹரிக்கிறார்.

## 285 (ஸூ) த்ர்யாத்மகத்வாத்தூயஸ்த்வாத் (2)

து சப்தம் சங்கையை நிவர்த்திக்கிறது. ***த்ர்யாத்மகத்வாத்*** - அப்புகள் த்ரிவ்ருத்கரணத்தால் ப்ருதிவீ, அப் தேஜோரூபமாயிருக்கையாலே. அவற்றுள் அப் பெரும் குதியாதலின்; அப் என்பது பூதஸூக்ஷ்மத்தைக் குறிக்கிறது.

த்ரிவ்ருத்கரணமாவது ப்ருதிவீ - அப் தேஜஸ்ஸுக்கள் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாகப்பிரித்து அதில் தத்தம் அம்சங்களை வைத்து - அதைத் தவிர்த்து இரண்டின் அரையம்சங்களை இரண்டு இரண்டு பங்காக்கி ப்ருதிவீயின் காலம்சம் ஜலத்திலும், மற்றுமொரு காலம்சத்தைச் தேஜஸிலுமாகவும் அப்பின் காலம்சத்தைவ் ப்ருதிவீயிலும் மற்ரெரு காலம்சத்தைத் தேஜஸ் களிலும் இப்படியே தேஜஸ்ஸில் காலம்சத்தை ப்ருதிவீயிலும் மற்ரெரு காலம்சத்தை அப்பிலுமாகச் சேர்த்துக் கலப்பதுதான் த்ரிவ்ருத்கரணம், இவ்விதமே பஞ்சீகரணப்ரக்ரியையும் காணத்தக்கது.

## 286 (ஸூ) ப்ராணகதேச்ச (3)

தமுத்க்ராமந்தம் ப்ராணேனுத்க்ராமதி ப்ராணமனூத்க்ராமந்தம் ஸர்வேப்ராணு அனூத்க்ராமந்தி என்று ப்ராணன் எனப்படும் இந்த்ரியங்கள் ஜீவனுடன் செல்வதால் அவ்விந்த்ரியங்களுக்கு உறைவிடமான ஸூக்ஷ்ம தேஹமும் ஜீவனுடன் கூடியே செல்வதாகத் தெரிகிறது. தமுத்க்ராமந்தம் முதலியச்ருதிக்கு ஸ்தூல சரீரத்தைவிட்டுப் போகும் ஜீவனை ப்ராணன் பின் பற்றுகிறதென்றே அன்வயம். ப்ராணவாயு கூடவே போகிறது. அந்த ஜீவனைப் பின் தொடரும் ப்ராணவாயுவை சக்ஷுஸ் (கண்) முதலிய அனைத்து இந்திரியங் களும் பின் தொடர்கின்றன என்றே பொருள்.

## (ஸூ) ஸ்மர்யதேச (4)

"மனஷ்ஷஷ்டானீந்த்ரியானி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி" என்றபடி கீதையும் ஸ்மரிக்கிறது.

## 287 (ஸூ) அக்ன்யாதிகதிச்ருதேரிதிசேந்ந பாக்தத்வாத் (4)

யத்ராஸ்ய புருஷஸ்ய ம்ருதஸ்ய அக்னிம் வாகப்யேதி வாதம் ப்ராண: சக்ஷுராதித்யம் (மரணமடைபவனின் வாக்கு அக்னியையும், ப்ராண வாயு- வாயுவையும், கண் சூர்யனையும் அடைகின்றன) என்ற மரணதசையில் வாகாதி இந்த்ரியங்களுக்கு *அக்ன்யாதி கதிச்ருதே:* அக்னி, வாயு, ஸூர்யன் முதலிய அதிஷ்டான தேவதைகளிடம் லயம் சொல்கையால்-இந்திரியங்களுக்கு ஜீவனுடன் கதியைச் சொன்ன ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு முக்கிய மற்ற, (உபசார மான) பொருளே சொல்ல வேண்டும் என்றால், அது தவறு. ஏனெனில்- *பாக்தத்வாத்* ஒஷதிகளை ரோமங்களும் கேசங்கள் வனஸ்பதிகளையும் அடை கின்றன என்பதுடன் கூடப்படிப்பதால் - அக்னியை வாக்கு அடைகிறது என்பது முதலிய வாக்கியங்களும் அமுக்யார்த்தங்களாகவே கொள்ளவேண்டும் மரணமடையும் ஜீவனின் வாக்ப்ராணன் சக்ஷுஸ் என்பவற்றின் செயல்கள் அக்ன்யாதி தேவதைகளிடம் லயிக்கின்றன என்று பொருள். வாகாதிஸ்வ-

ரூபங்களுக்கு லயம் என்றால் ரோம கேசாதிகளுக்கும் லயம் ஏற்க நேரிடும். ஆகையால் இந்திரியங்களுக்கு ஜீ வ னு ட ன் செல்லுகை பற்றியச்ருதியை முக்கியார்த்த முள்ளதாகவே நிர்வஹிக்க வேண்டுமென்பது கருத்து.

## 288 (ஸூ) ப்ரதமேZச்ரவணாதிசேந்ந தாஏவஹ்யுபபத்தே: [5]

***ப்ரதமே*** பஞ்சாக்னிவித்யையில் முதலான தேவலோகரூபமான அக்னி ஹோமத்தில் ***அச்ரவணாத்:*** அப்புக்கள் ஹோமம் செய்யத் தக்கனவாகக் கூறப்படாமையால் பிற பூதங்களுடன் சேர்ந்து அப்புகள் செல்கின்றன வென்பது தகாது. " தஸ்மின் ஏ த ஸ் மி ன் அக்னௌ தேவா: *ச்ரத்தாம்* ஜுஹ்வதி" என்று ச்ரத்தையைத்தான் ஹோமம் செய்வதாகக் கூறுகிறது என்றால், தேவா:- ப்ராணங்கள் இந்த த்யுலோகமாகிற அக்னியில் ச்ரத்தா வஸ்தையையடைந்த பூதஸூக்ஷ்யுக்தனான ஜீவனைச் சேர்க்கிறார்கள் என்றே பொருள். ஆபோகச்சந்தி (நீர்செல்கிறது) என்பது எப்படிப் பொருந்தும் என்றால், அந்த அப்புக்களேச்ரத்தா என்று கூறப்படுகின்றன. " ச்ரத்தாவா ஆப:" என்று ச்ருதியில் கூறப்பட்டுள்ளது. **உபபத்தே:** விடைக்கு வினாவுடன் பொருத்தமிருப்பதால்; கேள்வியிலும் நீர் ஐந்தாம் ஆஹுதியில் புருஷனெனப் படுவதைப் யறிவீரா என்றும், விடையில் இந்த தேவலோகமென்னும் அக்னியில் ப்ராணங்கள் ச்ரத்தையை ஹோமம் செய்கின்றன என்றும் கூறுவதால் ச்ரத்தை என்பது அப்பையே குறிக்கும்.

## 289 (ஸூ) அச்ருதத்வாதிதி சேந்ந இஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே: [6]

ஆப: புருஷவசஸோ பவந்தி - ச் ர த் தா ம் ஜுஹ்வதி எ ன் று த்யுலோகாக்ன்யாதிகளிலே அப்பே ஹோமம் செய்யத்தக்கதாகக் கூறப் படுகிறதேயன்றி ஜீவன் அவ்வாறு சொல்லப்படவில்லை. ஆ த லி ன், பூத ஸூக்ஷ்மங்களுடன் கலந்த ஜீவன் செல்கிறானென்பது தவறு என்பது பிழை. ***இஷ்டாதிகாரிணாம்:*** இதே ச்ருதியில் மேலே அதய இமேக்ராமே இஷ்டாபூர்த்தே தத்தமித்யுபாஸதே தே தூமமபிஸம்பவந்தி எனத் தொடங்கி " ஆகாசாத் சந்த்ரமஸம் ஏஷஸோமோ ராஜா ஸம்பவதி " இது போன்ற வாக்கியங்களால் க்ராமத்திலிருந்து இஷ்டாபூர்த்தங்களை அனுஷ்டிக்கும் ஜீவன்கள் ஸ்வர்க்கம் சென்று சந்திரனைப் போல் அம்ருதமயமான சரீரத்தைப் பெறுகிறார்கள் என்று சொல்வதால், தேவா: ச்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமோராஜா ஸம்பவதி என்று முதல் ஹோம வாக்யத்தில் கூறிய ஸோம ராஜன் என்னும் சப்தத்தின் அடையாளத்தால் அச்சப்தம் பூதஸூக்ஷ்ம யுக்தனான ஜீவனையே சொல்கிறது என்று தோன்றுகிறது.

ஆம்: மேல்வாக்யங்களில் - ஏஷஸோமோ ராஜா தம் தேவாபக்ஷயந்தி என்று தூமாதிமார்க்கத்தாலே ஸ்வர்க்கத்தை அடைந்தவனுக்கு தேவர்களின்

உணவுநிலே (பக்ஷ்யத்வம்) கூடாமையாலே இஷ்டாதிகாரிவாக்யத்தில் ஜீவன் சொல்லப்படவில்லையென்ற சங்கையைப் பரிஹரிக்கிறூர்.

## 290 (ஸூ-๑) பாக்தம் வாZநாத்ம வித்த்வாத்ததாஹி தர்சயதி [7]

இங்கு 'வா' சப்தம் சங்கையை விலக்குவது' *பாக்தம்து:* இஷ்டாதி காரிகளான ஜீவர்களுக்கு தேவ பக்ஷயத்வம் கூறப்படுவது அமுக்யார்த்தம் - உபசார வழக்கு. அநாத்மவித்த்வாத் - ஸ்வர்க்காதிகளையுத்தேசித்து யஜ்ஞாதிகளைப் பண்ணும் ஜீவர்கள் பரமாத்ம வித்துக்களல்லாமையால் தேவர்கள் கூறியதைச் செய்வர் என்ற அபிப்பிராயத்தாலே தேவாபக்ஷயந்தி என்று சொல்லியது. *ததாஹிதர்சயதி* - அநாத்ம வித்துக்களான த்ரைவணிகர் இந்த்ராதி தேவர்களேயடைந்து அவர்களுக்கு உபகாரிகளாக இருப்பார்கள் என்று காட்டும் ச்ருதி. இவர்கள் தேவர்களுக்குப் (பசு, காளே) போன்றவர்கள் என்பதாம். காளேபோல் இவன் தேவதைகளுக்கு உபகாரியாயிருப்பானென்பது பொருள்.

ஆகையால் பூதஸூக்ஷ்மங்களுடன் சேர்ந்தே ஸ்வர்க்கத்திற்குப் போகிறுன் என்று சித்தமாகிறது. இந்த பஞ்சாக்னி வித்யையில் ப்ரக்ருதியை விட வேறுபட்ட பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தை ப்ரஹ்மாத்மகமாக உபாஸிக்க வேண்டுமென்பது கருத்து. இவ்வித்யைக்குப்பலம் ஸ்வாத்மாவலோகனத்துடன் கூடிய பரிபூரணப்ரஹ்மானுபவம். மதுவித்யாநிஷ்டனுக்கு வஸ்வாதி பதப்ராப்தி இடைப்பட்ட பலமானது போலவே இப்பஞ்சாக்நி வித்யா நிஷ்டனுக்கு ஸ்வாத்மானுபவம் அவாந்தரபலமென்பது திருவுள்ளம். இங்கு தேசிகன், தேவலோகம், மேகம், ப்ருதிவீ, புருஷன், ஸ்திரீ என்று ஐந்து அக்னிகளைக்கல்பித்து அவற்றில் ச்ரத்தையென்னும் பூதஸூக்ஷ்மம் க்ரமமாகப் பரிணமமடைந்து ஸோமன், மழை, அன்னம், ரேதஸ் என்ற ஹவிஸ்ஸை ஜீவனுடன் தேகத்திலுள்ள ப்ராணன்கள் ஹோமம் செய்கின்றன என்பதே பஞ்சாக்னி வித்யையென அருளிச்செய்கிறுர் ("த்யௌ: பர்ஜன்யோZத ப்ருதிவீஜ"ஹ்வதீதி ப்ரவீதி) என்ற ச்லோகத்தால் இங்கு த்யௌ: பர்ஜன்ய: ப்ருதிவீ, புருஷன், ஸ்த்ரீ, என்ற ஐந்து அக்னிகள் பரிகரங்களுடன் கூடியவையாகக் கூறப்பட்டன. இவ்வக்னிகளில் ஹோமம் செய்யத்தக்க பொருட்களாக ச்ரத்தை ஸோமன் வர்ஷம், அன்னம், ரேதஸ் என்ற ஐந்து கூறப்பட்டன. முதலில் கூறிய ச்ரத்தையென்னும் ஜீவனுடன் கூடிய பூதஸூக்ஷ்மமானது ஸ்வர்க்கமென்னும் அக்னியில் ஹோமம் செய்யப்பட்டு ஸோமமென்னும் அம்ருத தேஹமாய்ப் பரிணமிக்கிறது. அது மேகமென்னும் அக்னியில் ஹுதமாகி மழையாக ப்ருதிவீரூபாக்னியில் ஹுதமாகி அன்னரூபமாகி புருஷனென்னும் அக்னியில் ஹுதமாகிறது. அது ரேதோ ரூபமாய் மாறி ஸ்த்ரீரூப அக்னியில் ஹுதமாகி புருஷனெனப் பெயரையும் உருவத்தையும்

பெறுகிறது. இப்படியான ஹோமத்ரவ்யங்களை ஜீவஸஹிதமாக தேஹத்தைத் தரிக்கும் வாயுக்கள் ஹோதாக்களாய் நின்று ஹோமம் செய்கின்றனவென்று தாத்பர்யம்.

## க்ருதாத்யயாதிகரணம்

### 291 (ஸூ-ெ) க்ருதாத்யயே Zனுசயவான் த்ருஷ்ட ஸ்ம்ருதிப்யாம் யதேதமனேவஞ்ச [8]

முன் அதிகரணத்திலே சரீரமுள்ளவரை ஸம்பந்தத்தைச் சாதித்தது. இவ்வதிகரணத்தில் கர்மஸம்பந்த நியமத்தைச் சாதிக்கிறுரென ஸங்கதி.

தூமாதி மார்க்கத்தாலே ஸ்வர்க்கம் சென்ற இஷ்டாதிகாரி ஜீவர்கள் மறுபடி மனிதவுலகிற்குத் திரும்பிவரும்போது அங்கு அனுபவித்ததுபோக மிஞ்சிய கர்மாக்களுடன் கூட வருகிருரா இல்லையா என்று சம்சயம். யாவத்ஸம்பாதம் உஷித்வா (கர்மாதொலேயும் வரை வசித்து) ப்ராப்யாந்தம் கர்மணஸ்தஸ்ய (கர்மா முடியும் நிலையைப்பெற்று) என்றெல்லாம் ச்ருதி சொல்வதாலே எல்லாக் கர்மங்களும் அனுபவிக்கப்பட்டு விடுகின்றனவென்று தெரிவதால் கர்மாவின் மிச்சத்தோடு அவன் திரும்புவதில்லையென்று பூர்வ பக்ஷம். இதை நிரஸனம் செய்கிருர்.

***க்ருதாத்யயே அனுசயவான்***: ஸ்வக்ருதமான புண்யகர்மாக்கள் பலானுபவத்தால் அழிந்தபிறகு அனுபவித்ததுபோக எஞ்சிய கர்மாவுடன் (அனுசயத்துடன்) பூமியில் ஜனிக்கிருர். ஏனெனில் ***த்ருஷ்டச்ருதிப்யாம்*** ச்ருதி ஸ்ம்ருதிகளால் என்றபடி; ச்ருதியாவது – தத்ய இஹரமணீயசரணு: அப்யாசோ ஹயத்தே ரமணீயாம் யோநிமாபத்யேரன் ப்ராஹ்மணயோநிம் இத்யாதி - (நல்ல நடத்தையுள்ளவர் — புண்யகர்மாக்களைச் செய்தவர் நல்ல ப்ராஹ்மணுதி ஜன்மங்களேடைவர் என்பதாம்.)

ஸ்ம்ருதியாவது : தத: பரிவ்ருத்தெள கர்ம பலசேஷேண ஜாதிம் ரூபம் முதலியது. அந்த ஸ்வர்க்கத்திலிருந்து திரும்புகையில் அவ்வனுபவத்திற்கு ஹேதுவான கர்மத்தின் சேஷத்தோடு கூட நல்ல ரூபத்தையும் ஜாதியையும் அடைவார்கள் என்பது அதன் பொருள். ***யதேதம்*** : ஸ்வர்க்கத்திற்குச் சென்ற வழிப்படியேயும் ***அநேவஞ்ச***: வேறு வழியிலும் திரும்புகிருன் என்பதாம். சந்திரனிலிருந்து ஆகாசம் செல்வது யதேதம் என்பது. வாயுமேக அப்ராதிகளை அடைகையால் அனேவஞ்ச என்பதாம். நீரைத்தாங்கி நிற்கும் நிலையை அப்ரம் என்றும் பொழியும் நிலையை மேகம் என்றும் கூறுவதால் கூறியது கூறல் எனும் குற்றத்திற்கு இடமில்லையாம்.

***போகும் வழி:*** தூமம், ராத்ரி, க்ருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம், பித்ருலோகம், **ஆகாசம்**, **சந்த்ரன்** என்ற முறை திரும்புவதோ சந்திரன்-**ஆகா**யம், வாயு, தூமம், அப்ரம், மேகம், தான்யங்கள் புருஷன் ரேதஸ்-ஸ்த்ரீயின் கர்ப்பம் என்ற வழியில் வருகிறான் என்று ஸ்வாமி தேசிகன் அருளினார்.

## 292 (ஸூ) சரணாதிதி சேந்ந தது'பலக்ஷணார்த்தேதி கார்ஷ்ணாஜினி: [9]

***சரணாத்:*** ரமணீய சரணா: என்னும் ச்ருதியில் ரமணீயம் என ஸ்ப்ருதியால் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனாத்யாசாரங்களால் ப்ராஹ்மணாதிப் பிறப்பையடைவர் என்று சொல்வதால், அனுபவித்து மிஞ்சிய கர்மத்தால் நல்ல கெட்ட பிறப்புக்கள் என்பது இல்லை. **இதி சேந்ந**-என்பது தவறு. அந்த ஆசாரச்ருதி உபலக்ஷணமாகக் கர்மாக்களை குறிப்பதென்பது கார்ஷ்ணாஜினியின் கருத்து. ஸந்த்யாவந்தனாதிகளை அங்கங்களாகக் கொண்ட யஜ்ஞாதி புண்ய கர்மாக்களாலேயே ஸ்வர்க்கப்ராப்தி என்று அவர் கருத்து.

இதையே மேலும் காட்டுகிறார்.

## 293 (ஸூ) ஆநர்த்தக்யமிதிசேந்ந ததபேக்ஷத்வாத் [10]

ஸ்ம்ருதி விஹிதமான ஆசாரம் சுகத்தின் சாதனையில்லையெனில், **ஆநர்த்தக்யம்** - பயனற்ற தன்மை ஏற்படும் என்பதில்லை. ***ததபேக்ஷத்வாத்*** அவ்வாசாரத்தை அங்கமாக அபேக்ஷித்துத்தான் புண்யகர்மம் சுகத்தைச் சாதிக்கும். ஸ்ம்ருதி - ஸந்தியாஹீனன் ஸர்வகர்மாக்களுக்கும் அர்ஹதையற்றவன் என்றல்லவோ கூறுகிறது என்பது கார்ஷ்ணாஜினிமதம்.

## 294 (ஸூ) ஸுக்ருத துஷ்க்ருதே ஏவேதி து பாதரி: (11)

**து**சப்தம் முன்பக்ஷத்தை நிவ்ருத்தி செய்வது. ரமணீயசரணா: கபூய சரணா: என்னும் ச்ருதியில் புண்ய கர்மாவை ஆசரிக்கிறான், பாபகர்மாவை ஆசரிக்கிறான் என்ற ப்ரயோகம் போல் சரணசப்தத்தால் ஸுக்ருதம், துஷ்க்ருதமென்னும் கர்மங்களே குறிக்கப்படுகின்றன. அதுதவிர **சதாசார துராசாரங்கள்** குறிக்கப்படவில்லை என்பது பாதரிமுனிவர் மதம். இதுவே ஸூத்ரகாரருக்கும் திருவுள்ளம். கர்மங்கள் ஆசாரத்தையபேக்ஷிப்பவையென்ற கார்ஷ்ணாஜினியின் கருத்தும் ஸூத்ரகாரர் உடன்படுவதே.

## அநிஷ்டாதி கார்யதிகரணம்

அடுத்து வெறும் இஷ்டாபூர்த்ததத்த காரிகளான புண்யவான்கள் சந்த்ரனையடைந்து கர்மசேஷத்துடன் திரும்புகின்றனர் என்று முன்பு

கூறப்பட்டது. இதில் விதித்ததை அனுஷ்டிக்காத அநிஷ்டாதிகாரிகளும் யமயாதனையை அனுபவித்து சந்திரனை அடைந்து மறுபடி திரும்புகின்றனரா இல்லையா என்று சம்சயம். யேவைகே சாஸ்மால் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தேஸர்வே கச்சந்தி என்னும் ச்ருதியிலே இல்லோகத்தில் இருந்தும் தேஹத்தை விட்டுப் போகும் ஜீவர்கள் (புண்யவான்களும் பாபிகளும்) சந்திரனையடைகிறார்களென்று கூறுவதால் என்றபடி. இந்த பூர்வ பக்ஷத்தை ஐந்து ஸூத்ரங்களாலே விளக்குகிறார்.

## 295 (ஸூ) அநிஷ்டாதிகாரிணாமபிச ச்ருதம் [12]

புண்யத்தைவிட்டு அனிஷ்டங்களையே செய்யும் பாபிகளுக்கு சந்த்ர லோக கமனம் உண்டென்பது 'யேவைகேச' முதலிய ச்ருதிகளில் பிரசித்தம்.

## 296 (ஸூ) ஸம்யமனே த்வனுபூயே தரேஷா மாரோஹாவரோஹௌ தத்கதி தர்சனாத் [13]

துசப்தம் - புண்யசாலி - பாபிகளுக்கு ஒரு வேறுபாட்டைக் காட்டுகிறது. *இதரேஷாம் ஸம்யமனே அனுபூய ஆரோஹாவரோஹௌ பவத:* பாபிகளுக்கு யமனின் ஆட்சியில் பாபத்தின் பயனையனுபவித்துப்பின் சந்திரனையடைந்து பின் அங்கிருந்து இறக்கம் ஏற்படுகிறது. *தத்கதிதர்சனாத்:* பாபிகளுக்கு யம லோகம் செல்வதாகச் சொல்லப்படுவதால், "வைவஸ்வதம் ஸங்கமனம் ஜனானாம் யமம் ராஜானம்" என்னும் ச்ருதியில் யமனையடைவதாகக் கூறப் பட்டுள்ளது.

## 297 (ஸூ) ஸ்மரந்திச [14]

"ஸர்வே சைதே வசம் யாந்தி யமஸ்யபகவன்கில" என்று பராசர ஸ்ம்ருதி போன்றவையும் அதையே கூறுகின்றன.

## 298 (ஸூ) அபிஸப்த [15]

ரௌரவம் முதலிய ஏழு நரகங்களும் பாபிகள் செல்லவேண்டியவை யென்று ரிஷிகள் ஸ்மரிக்கின்றனர்.

## 299 (ஸூ) தத்ராபி தத்வ்யாபாராத விரோத: [16]

*தத்ராபி* = அவ்வேழு நரகங்களிலும், *தத்வ்யாபாராத்* அந்த யமனின் உத்தரவால்தான் செல்லுதல் என்பதால், அவிரோத: முன்கூறிய யமவசமாதல் என்பதற்கு விரோதமில்லை. ஆதலின், பாபிகள் யமலோக யாதனைகளை

யனுபவித்தே சந்திரலோகம் ஏறுவதும், இறங்குவதும் தவிர்க்கமுடியாதவை என்ற பூர்வபக்ஷத்தை நிரஸனம் செய்கிறார்.

## 300 (ஸூ) வித்யாகர்மணோரிதிதுப்ரக்ருதத்வாத் [17]

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது, பாபிகளுக்கு அர்ச்சிராதி மார்க்கத்தால் எவ்வாறு ப்ரஹ்மப்ராப்தி என்பதில்லையோ, அப்படியே தூமாதி மார்க்கத்தால் சந்திர ப்ராப்தியுமில்லை; வித்யா கர்மணோ: அந்த ப்ரஹ்மத்தையும், சந்திரனையடைதலும் - ப்ரஹ்மவித்யைக்கும், புண்யகர்மத்திற்கும் பலமாயிருப்பதால் என்றபடி; இதிதுப்ரக்ருதத்வாத்: இப்படி ப்ரக்ருதமாயிருக்கையால் என்றவாறு. தத்ய இத்தம் விது: யேசேமே அரண்யே ச்ரத்தாதப இத்யுபாஸதே - தேஞர்ச்சிஷமபிஸம்பவந்தி. முதலிய வாக்யங்களில் தொடங்கி குளம் குட்டை வெட்டுதல், தான தர்மாதிகளைச் செய்தல் முதலியவற்றால் தூமாதி மார்க்கத்தைப் பின்பற்றுகிறார்கள். என்று கூறி பின் பஞ்சாக்னி வித்தையில் வித்யாகர்மாக்களை எடுத்து அதன் பலங்களாக அர்ச்சிராதி கதியையும் – தூமாதிகதியையும் விளக்கியதால்: தேஹேந்த்ரியாதி விலக்ஷணனை பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைப் பரமபுருஷாத்மகமாக உபாஸிக்கும் பஞ்சாக்னிவித்யாநிஷ்டர்கள், வனத்தில் ஸந்யாஸித்து - பரமம் யோ மஹத்தப: எனப் போற்றப்படும் தபஸ் எனப்படும் பரமபுருஷனை ஜீவசரீரகனை உபாஸிக்கும் ஸத்வித்யா தஹரவித்யா நிஷ்டர்கள் என்ற இருவிதமான பகவத் பக்தர்களும், அர்ச்சிராதிமார்க்கத்தால் பரமபதத்தையடைவார்கள். பரமபுருஷனை யனுபவிப்பார்கள். கிராமத்திலிருந்து தேவாலயம், தடாகாதிகளை நிர்மாணிப்பது, யாகம், தானம் முதலியன செய்பவர் தூமாதிமார்க்கத்தாலே ஸ்வர்க்கத்தையடைந்து மறுபடி திரும்புவர் என்பது ச்ருதியின் பொருள்.

இங்கோர் ஐயம் எழுகிறது. பஞ்சம்யாம் ஆஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி (ஐந்தாவது ஆஹுதியில் ஜலம் - புருஷன் என்ற பெயரைப் பெறுகிறது) என்ற ச்ருதியில் ஸ்த்ரீயின் கருவில் சம்பந்தத்தால் சரீரம் தோன்றுவதாகக் கூறுவதால் அந்த ஐந்தாம் ஆஹுதியும் சந்த்ரனையடைந்தே ஏற்படும் என்பதால், பாபிகளுக்கும் தேஹம் ஏற்பட சந்திரனையடைதல் அவசியம் நேருமே என்று இந்த சங்கையை நீக்குகிறார்.

## 301 (ஸூ) நத்ருதீயே ததோபலப்தே: [18]

*நத்ருதீயே* = வித்யாநிஷ்டர் கர்மநிஷ்டர் தவிர்த்த மூன்றுவதான பாபிகள் தரப்பில் தேஹம் தொடங்குவதற்காக ஐந்தாம் ஆஹுதி தேவையில்லை *ததா உபலப்தே:* அவ்வாறுச்ருதியில் காணப்படுவதால்,

பஞ்சாக்னிவித்யையில் - பாஞ்சாலமன்னன் " வேத்தயத் இதோZதிப்ர ஜாப்ரயந்தி " முதலிய வாக்கியங்களால் ஐந்து வகையான ப்ரச்னம் செய்தார் அதன் கருத்தாவது :

1. இந்த லோகத்திலிருந்து பரலோகம் செல்லும் முறையையறிவீரா?

2. அங்கிருந்து இங்கு திரும்பும் முறையை யறிவீரா?

3. தேவயானம் - பித்ருயானம் இவற்றிற்கு வேறுபாடு தெரியுமா?

4. ஸ்வர்க்கலோகம் பூர்ணமாகாமைக்குக்காரணம் தெரியுமா?

5. பஞ்சாக்னிவித்யையில் அப்பு (ஜலம்) புருஷனைகப்பரிணமிக்கும் முறை தெரியுமா? இந்தப்ரச்னங்களுக்கு அந்தப்பாஞ்சால மன்னனே பதில் கூறினன். இவற்றுள் நான்காவது வினவான - யாரால் ஸ்வர்க்க லோகம் பூர்த்தியாவதில்லே? என்பதற்குப் பதிலாக அவர் கூறுவது, அற்பமாய் அடிக்கடி திரும்பி வரும் பூதங்கள், பிறந்தும் - இறந்தும் தவிப்பவையான பாபிகள். இவர்களால் ஸ்வர்க்கலோகம் பூர்த்தி பெறுவதில்லே என்கிருர். அவர்களே மூன்ருமிடம் த்ருதீயம் ஸ்தானம் என்றும் - அவர்கள் தேவயான பித்ருயான மார்க்கங்களே விட்டு நரகங்களேயனுபவித்து அடிக்கடி ஜனன மரணங்களேயடைந்து தவிக்கின்றனர் என்கிருர். அதனுல் அந்த பாபிகளுக்குப்பஞ்சமாஹுதியின் அபேக்ஷையில்லே என்று தெரிகிறது.

## 302 (௩௦௨) ஸ்மர்யதேZபிசலோகே [19]

இந்த மனிதலோகத்திலும் த்ரௌபதி, திருஷ்டத்யும்னன் முதலான புண்யகர்மிகள் பெண்ணின் கருத்தொடர்பின்றியே அக்னியிலிருந்து தோன்றியதாக பாரதத்தில் கூறப்படுகிறது.

## 303 (௩௦௩) த்ர்சஞச்ச [20]

பூதங்களுக்கு மூன்றே வகை தோற்றம் உள்ளது. அண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம், என்ற இம்மூன்றில் அண்டஜத்திற்கும் உத்பிஜ்ஜத்திற்கும் கருவின் தொடர்பு இன்மையால் ஐந்தாம் ஆஹுதி தேவையில்லேயென்று கூறப்படுகிறது. கொசு முதலியவை ஸ்வேதஜம்; செடி கொடி மரம் முதலியன உத்பிஜ்ஜம்; மனுஷ்யர் போன்ருேர் ஜீவஜரெனப்படுவர். இந்த ச்ருதியில் பேன் முதலிய ஸ்வேதஜங்களுக்கு எப்படியடக்கம் என்ற சந்தேஹம் வர நிவர்த்திக்கிருர்.

## 304 (ஸூ) த்ருதீய சப்தாவரோத: ஸம்சோகஜஸ்ய [21]

உத்பிஜ்ஜம் என்ற மூன்றும் சொல்லாலே ஸம்சோகஜமான ஸ்வேதத்திற்கும் *அவரோத*: க்ரஹணம்: பொருள் கொள்ளப்படுகிறது. அதனால் பாபிகள் சந்திரமண்டலம் செல்வதோ - திரும்பிவருவதோ கிடையாதென்பது ஸித்தம்.

### தத்ஸ்வாபாவ்யாபத்தி — அதிகரணம்

## 305 (ஸூ) தத்ஸ்வாபாவ்யாபத்திருபபத்தே: [22]

தூமாதி மார்க்கத்தால் சந்திரனையடைந்த புண்ய கர்மனுக்குத் திரும்பி வரும் வழி கூறப்படுகிறது. யதேத்தம் - சென்ற வழிப்படியே; ஆகாசம், வாயு தூமம், பரவிய மேகம் (அப்ரம்). பின் மழைபொழியும் மேகம் என்ற முறையைக் கூறும் ச்ருதியில் கூறப்படும் ஆகாசாதித்தன்மை, - தேவத்தன்மை, மனுஷ்யத்தன்மை முதலியனபோல ஆகாசாதிகளைச் சரீரமாகக்கொண்டு ஜனனம் என்னும் தன்மையதா? அன்றி ஆகாசாதிகளுக்குச் சமத்வம் பெறலா என்று சம்சயம். ஆகாசாதி சரீரகத்வ ரூபமே என்று பூர்வபக்ஷம் ஏனெனில், ச்ரத்தையை (நீரை) ஹோமம் செய்கின்றனர். அந்த ஆஹுதியால் ஸோமராஜன் ஆகிறான் என்பது போல் ஆகாசபாவம் சொல்லப்படுகிறது. ஸோமபாவம் என்பது சந்திரனுக்கு ஸமமான சரீரங்கொண்டிருத்தல். அவ்வாறே ஆகாசாதி சரீரத்வம் என்ற பக்ஷத்தைக் கண்டிக்கிறார்.

### (ஸூ) தத்ஸ்வாபாவ்யாபத்தி: உபபத்தே:

வேறு உலகத்திலிருந்து இறங்கிவரும் ஜீவனுக்கு ஆகாசவாயு தூமாதி பாவம் என்பது, *தத்ஸ்வாபாவ்யாபத்தி*: ஆகாசாதிகளுக்குச் சமத்வத்தையடைதலே ஆகாசாதி சரீரகத்வமில்லை. ஏனெனில், உபபத்தே:-ஸுக துக்கானுபவங்களின் அபாவத்திற்கு (இன்மை) பொருத்தம் இருப்பதால்; ஸோமாதிபாவத்தால் உண்டாகும் சுகதுக்காதிகளின் அனுபவம் ஆகாசாதிபாவத்தில் இல்லாமையால் ஆகாசாதிகளுடன் ஸாம்யம் வரும் என்று கருத்து.

## 306 (ஸூ) நாதிசிரேணவிசேஷாத் [23]

ஆகாசம், வாயு முதலிய இடங்களையடையும் ஜீவன் ஆங்காங்கு நீண்ட காலம் தங்கியிருக்கிறானா அல்லது விரைவிலேயே திரும்பியிறங்கி வருகிறானா? என்று சம்சயம். நீண்டகாலம் ஆகாசாதிகளுடனே கூட இருக்கிறான் என்று பூர்வபக்ஷம், ஏனெனில், விசேஷமான வசனமில்லாமையால் என்ற பக்ஷத்தை நிரஸனம் செய்கிறார்.

மேலே வ்ரீஹ்யாதி பாவம் கூறியவிடத்தில் " அதோ வை துர்நிஷ்ப்ர பதரம் என்ற வாக்யத்தால் இந்த வ்ரீஹ்யாதிகளிலிருந்து மிக்க துக்கத்துடன் இறங்குகிறுனென்று சொல்வதால், அந்த வ்ரீஹ்யாதி பாவத்திற்கு நீண்ட காலம் கமனம் குறிப்பிடப்படுகிறது. ஆதலின், ஆகாசம் தொடங்கி வர்ஷம் வரை ஜீவன் விரைவில் வெளியேறுவதாகவே தோன்றுகிறது.

## அந்யாதிஷ்டிதாதிகரணம்

## 307 (ஸூ) அந்யாதிஷ்டிதே பூர்வவதபிலாபாத் [24]

ஸ்வர்க்கத்திலிருந்து இறங்கும் ஜீவர்களுக்கு தான்யம் முதலிய ரூபத்தைப்பெறும் நிலை ச்ருதியில் கூறப்பட்டுள்ளது. அது தேவபாவம் மனுஷ்யபாவம் முதலியவற்றைப்போல் தான்யாதிகளைச் சரீரமாகக் கொண்ட தன்மையா? அல்லது ஸம்பந்தம் மட்டுமா? என்று சங்கை தோன்றுகிறது. ஆகாசாதிக்ரமப்படி இறங்கும் ஜீவர்கள் வ்ரீஹி (நெல்) முதலிய சரீரங் கொண்டு தோன்றுகின்றனரா? அன்றி பிற ஜீவன்களால் அதிஷ்டிதமான வ்ரீஹி முதலியவற்றுடன் சம்பந்திக்கிறுர்களா என்று சம்சயம். மேகமாகப் பொழிகிறுன். பின் அவன் நெல், சாமை, பச்சிலை, வனஸ்பதிகள், எள் உளுந்து என்பனவாக மாறுகிறுன் என்று சொல்வதால் வ்ரீஹி முதலிய ஜன்மங்களையடைகிறுன் என்பதே பொருந்தும் என்று பூர்வபக்ஷம். இதனைக் கண்டிக்கிறுர்.

## 308 (ஸூ) அந்யாதிஷ்டிதே பூர்வவதபிலாபாத்

வேறு ஜீவர்களாலே நிர்வஹிக்கப்படும் வ்ரீஹி முதலியவற்றில் இறங்கும் ஜீவர்களுக்கு ஸம்பந்தம் மட்டுமே. ஏனெனில், *பூர்வவத் அபிலாபாத்* ஆகாசாதி பாவம் போலே வ்ரீஹ்யாதி பாவம் சொல்கையால் அதற்குக் காரணமான கர்மாவைச் சொல்லாமையால், ப்ராஹ்மணாதி சரீரபாவத் திலல்லவா - ரமணீய சரணர்கள் - கபூய சரணர்கள் என்று ஜன்மத்தின் காரணமான புண்ய பாபரூபமான கர்மம் கூறப்படுகிறது; உண்டாகின்றன என்ற சொல் உபசார வழக்கு.

## 309 (ஸூ) அசுத்த மிதிசேந்ந சப்தாத் [25]

" வ்ரீஹி முதலிய தன்மைகளுடன் தோன்றுகிறுர்கள் " என்னும் ச்ருதியில் பிறப்பின் காரணமான கர்மா குறிப்பிடப்படவில்லை, ஆயினும், முன் ஸ்வர்க்காதிபலந்தருவதாய்க் காட்டிய யாகாதிகர்மாக்கள் ஹிம்ஸை நிறைந்த மையால் அசுத்தமாகும். சுத்தாம்சத்தின் பலமான ஸ்வர்க்காதி பலங்களை யனுபவித்தபிறகு அசுத்தாம்சமான ஹிம்ஸையின் பலமாக வ்ரீஹ்யதி ஸ்வரூபம் வருகிறது என்றுல், அதுவல்ல: சப்தாத்=பசுவை யாகத்தில்

பயன்படுத்துவது ஹிம்ஸையேயில்லையென்றும், அந்தப்பசுவிற்குப்பொன்மயமான சரீரத்துடன் ஸ்வர்க்கலோககமனமும் பலமாகச்சொல்லப்பட்டிருப்பதால் யாகாதிகளில் ஏதும் அசுத்தமான அம்சமில்லை யென்பதாம்.

## 310 (ஸூ) ரேதஸ்ஸிக் யோகோZத (26)

*அத*-வ்ரீஹ்யாதித் தன்மையடைந்தபின்பு, *ரேதஸ்ஸிக்யோக*: ச்ருயதே: தான்யாதிகளை உண்டவன் இந்த்ரியத்தையுடைய புருஷனாக மாறுகிறான். ஆஹுதி செய்யப்பட்டு மழையாய் வந்த நீர் தான்யமாகி மனிதன் உடலில் உணவாகியபின் இந்த்ரியமாக மாறுகிறது. இதனால், புருஷ சரீர ஸம்பந்தம் கூறுவதால் வ்ரீஹ்யாதிபாவத்திலும் ஸம்பந்தம் மட்டுமே ஸித்திக்கிறது.

## 311 (ஸூ) யோநே: சரீரம (27)

பெண்ணுறுப்பையடைந்தபிறகே சரீரம் தோன்றுகிறது. அங்குதான் சுக துக்கானுபவங்கள் உண்டாகின்றன இதனால் ஆகாசாதிகளில் அனுபவித்து எஞ்சிய கர்மாக்களையுடையவனுக்கு ஸம்பந்தம் மட்டுமே கூறப்படுகிறது என்பதாம்.

இந்த பாதத்தில் ஜீவனுக்கு ஸம்ஸாரபந்தம் உண்மையானதென்று கூறுவதால் ஸாங்கியர் - மித்யாவாதிகள் மதங்கள் ஒதுக்கப்பட்டவையாகின்றன.

## இப்பாதத்தின் ஆறு அதிகரணங்களின் பொருள் வருமாறு ஸ்வாமியால் அருளப்படுகிறது

1. ததந்தரப்ரதிபத்த்யதிகரணத்தில் தேகத்தை விடும் ஜீவன் பூதஸூக்ஷமங்களுடன் போகிறான் என்றும்.
2. க்ருதாத்யயாதிகரணத்தில் ஸ்வர்க்கத்தையனுபவித்த ஜீவன் போன வழியிலும் வேறு வழியிலும் திரும்புகிறான் என்றும்.
3. அநிஷ்டாதிகார்யதிகரணத்தில் நரகமடைந்தவர்கட்கு சந்த்ரப்ராப்தியில்லை யென்றும்,
4. தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணத்தில் ஆகாசாதிகளுடன் ஸாம்யமே தவிர ஆகாசாதிகளாக ஜன்மமில்லையென்றும்,
5. நாதிசிரேண என்ற அதிகரணத்தில் ஆகாசாதிகளிலிருந்து சீக்கிரம் இறங்குகிறானென்றும்,
6. அன்யாதிஷ்டிதாதிகரணத்தில் பரசரீரபூதமான வ்ரீஹ்யாதிகளில் ஸம்பந்த மாத்ரமே என்றும் விளக்கப்பட்டது.

மூன்றும் அத்யாயம் முதல் பாதம் முற்றிற்று.

## மூன்றும் அத்யாயம் இரண்டாம் பாதம் - முதல் அதிகரணம்
## உபயலிங்கபாதம் ஸந்த்யாதிகரணம்

இந்தப் பாதமே ஆரம்பிப்பது வீண் என்று சங்கித்து விடை தருகிறுர். ஸ்வாமி. கீழ் இரண்டு அத்யாயங்களால் ப்ரஹ்மம் தனக்குரிய ஸ்வபாவத்துடனேயே விளக்கப்பட்டிருக்க, இந்த ஸாதனுத்யாய நடுவில் அதே ப்ரஹ்மம் உபயலிங்கபாதத்தில் மறுபடி இழுத்து விசாரிக்கப்படுவானேன்? எனில், அறிய வேண்டும் ப்ரஹ்மத்தின் குணபேதத்தால் வித்யாபேதம் சொல்லுகையாலும் ப்ரஹ்மமே ஸித்தோபாயமாகையாலும், அதன்பால் மிக்க ஆர்த்தி (ஆசை) யிருக்க வேண்டுமென்பதற்காக இவ்விடம் ப்ரஹ்மம் பற்றிப் பேசுவதில் விரோதமில்லை என்பதாம்.

அடுத்தபடி இந்தப்பாதத்தின் நடுவில், ஜீவனின் ஸ்வப்னுதி அவஸ்தைகளைப் பற்றிப் பேசுவது எப்படிப் பொருந்தும்? எனில், ஸ்வப்னபதார்த்தங்கள் யாவும், பரமாத்மாதீனமாகையாலும், ஜீவனுக்கு முக்திதசையிலும், ' மிக்க பரவசமானவன் நான் ' என்னும் ஜ்ஞானம் உதிக்கைக்காகவும் வைராக்ய பாதத்தில் கூருமல் இங்கு சொல்வதில் விரோதமில்லை.

இதற்குமுன் கர்மத்திற்கேற்றவாறு போக்குவரத்து, பிறப்பு முதலியவை சேருவதால் விழித்திருக்கும் ஜீவனுக்குத் துக்கம் உண்டெனச் சொல்லப்பட்டது. இப்போது ஸ்வப்னுவஸ்தை விசாரிக்கப்படுகிறதென்று ஸங்கதி.

### 312 (௩-௨-௧) ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹஹி [1]

ஸ்வப்னம்பற்றி ச்ருதி கூறுகிறது. கனவில் ரதங்களோ, குதிரைகளோ நல்ல விதிகளோ இல்லை. அப்போது ரதம் முதலியவற்றையும் நீர்மிக்க, தடாகம் முதலியவற்றுடன் படைக்கின்ருனே - அவனே கர்த்தா என்று கூறிய இடத்தில் கனவில் பொருட்களைப்படைத்தவன், ஜீவனு பரமாத்மாவா என்று சம்சயம். ஜீவன்தான்; ஏனெனில், கனவுகாணும் ஜீவன் ப்ரகரணத்தில் (அவ்விடம்) இருப்பதால் - ஸ: - என்று குறிப்பிடத்தக்கவனுயிருப்பதாலும், ப்ரஜாபதி வாக்யத்தில் ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: என்று ஸத்ய ஸங்கல்பத்வம் சொல்லப்படுவதாலும் என்று பூர்வபக்ஷம். இந்த பூர்வபக்ஷம் மேல்வரும் இரண்டு ஸூத்திரங்களால் விளக்கப்படுகிறது.

### (௩-௨) ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹஹி

ஸந்த்யே - ஸ்வப்னத்தில், ஸ்ருஷ்டி: - ரதாதிகளின் ஸ்ருஷ்டியானது ஆஹஹி - ஸ்வப்னம்காணும் ஜீவனுல் செய்யப்படுவதாக வேதம் கூறுகிற

தன்றோ ''ஸஹி கர்த்தா'' என்று ஜீவனையே கர்த்தாவாக வேதம் பேசுகிற தென்பதாம்.

## 313 (ஸூ) நிர்மாதாரஞ்சைகே புத்ராதயச்ச [2]

ஏகே - சில வேதாந்திகள்: நிர்மாதாரஞ்ச - ஜீவாத்மாவையே ஸ்வப்னப் பொருட்களைப் படைப்பவனென்றும் - சொல்கின்றனர். அதெப்படியென்றால் ''யஏஷு ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:'' என்ற வாக்யத்தில் காம சப்தத்தால் புத்ர பௌத்ராதிகளும் சொல்லப்படு கின்றனர். அவர்களை ஜீவனே படைப்பவனுதல் கூடும் என்பது கருத்து. இந்த பூர்வபக்ஷத்தைக் கண்டிக்கிறார்.

## 314 (ஸூ) மாயாமாத்ரந்து கார்த்ஸ்ன்யேன அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத் [3]

துசப்தம் பூர்வபக்ஷத்தைக் விலக்குவது. ஸ்வப்னத்தில் காணும் ரதம் முதலியவை ஜீவனால் படைக்கப்பட்டவையல்ல. பரமபுருஷனால் படைக்கப் பட்டவையே. மாயாமாத்ரம்-ஸ்வப்னங்கள், காண்பவனுல்மட்டும் அனுபவிக் கத்தக்கவையாய், மற்றோர்க்குப் பயன்படாதவையாய், அந்தக்காலத்திலேயே அழிவதாயும் ஆச்சர்ய ரூபமாயும் உள்ளன. இவை ஜீவனால் படைக்கக் கூடாதவை - ஏனெனில், ஜீவனுக்கு ஸத்யஸங்கல்பத்வம் ஸம்ஸாரதசையில் முற்றிலும் வெளிப்படாத நிலையிலிருப்பதால் சங்கல்பமாத்ரத்தால் படைப்பது என்பது பொருந்தாது. காமம் காமம்புருஷோ நிர்மிமாண: என்ற ச்ருதி பரம புருஷனையே ஸ்ருஷ்டிகர்த்தாவென்கிறது. தொடக்கத்தில் இவர்கள் அனைவரும் உறங்குகையில் அவன் விழித்திருக்கிறான் என்றும். முடிவில் அவனிடமே இந்த உலகங்கள் அனைத்தும் ஆச்ரயித்திருக்கின்றன, அவனை யாரும் மீற முடியாது என்றும், பரமபுருஷனுக்கே உரிய தர்மங்கள் சொல்லப் பட்டிருப்பதால் - [ஸஹிகர்த்தா - என்ற தத் சப்தமும் ப்ரகரணத்தோடு பொருந்தப்] புருஷோத்தமனையே புலப்படுத்துகிறது.
(காமம் காமம் - ஸங்கல்பித்து ஸங்கல்பித்து)

ஜீவனின் ஸத்ய ஸங்கல்பத்வம் ஸம்ஸார தசையில் ஏன் புலப்பட வில்லையென்ற வினவிற்கு விடையருளுகிறார்.

ஜீவனின் ஸத்ய ஸங்கல்பத்வம் ஸம்ஸார தசையில் ஏன் புலப்பட வில்லையென்ற வினவிற்கு விடையருளுகிறார்.

## 315 (ஸூ) பராபித்யாநாத்து திரோஹிதம் ததோஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ [4]

து சப்தம் சங்கையை விலக்குகிறது. பராபித்யாநாத் பரமாத்மாவின் ஸங்கல்பத்தால், அஸ்ய - இந்த ஜீவனின், ஸ்வாபாவிகமான ரூபம் திரோஹிதம் - மறைந்துள்ளது. ததோஹி - அந்த ஸங்கல்பத்தாலேயே, அஸ்ய பந்த விபர்யயௌ: இந்த ஜீவனுக்கு ஸம்ஸாரமும் மோக்ஷமும் உண்டாகின்றன. கோஹ்யேவாந்யாத்க: ப்ராண்யாத் - யதேஷ ஆகாச ஆநந்தோ நஸ்யாத்: ஏஷஹ்யேவாநந்தயாதி, பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே முதலிய ச்ருதிகளால் பரமாத்மாவின் மூலமே ஜீவனின் ஸுக துக்கங்களைப் பறைசாற்றுகின்றன; ஸத்திய ஸங்கல்பம் மறையும் காரணத்தைக் கூறுகிறார்.

## 316 (ஸூ) தேஹயோகாத்வாஸோபி [5]

'வா' என்பது விகல்பமென்னும் பொருளுள்ளது (வ்யவஸ்தித விகல்பம்) ஸோபி=ஸங்கல்பத்தின் மறைவும், ஸ்ருஷ்டி தசையில் தேவ மனுஷ்யாதி சரீர சம்பந்தத்தாலும் (அசித் சம்பந்தத்தாலும்) ப்ரளய காலத்தில் நாமரூப விபாகங்களற்ற ஸூக்ஷ்ம தசையிலுள்ள அசித்துடன் ஸம்பந்தத்தாலும் உண்டாகிறது. ஆகையால், மறைந்த ஸங்கல்பமுள்ள ஜீவன் ஸ்வப்ன பதார்த்தங்களைப் படைப்பவனல்லன்.

## 317 (ஸூ) ஸூசகச்சஹிச்ருதேராசக்ஷதேசதத்வித: [6]

எக்காரணத்தால் ஸ்வப்னம் எதிர்காலத்திய சுபாசுபங்களுக்கு ஸூசகம் என்று ச்ருதியில் கூறப்படுகிறதோ - தத்வித: ஸ்வப்னத்யாயம் பற்றி அறிந்தவர்களும் - ஆசக்ஷதே=ஸூசகமென்று கூறுகிறார்களோ அக்காரணத்தால் ஸ்வப்ன பதார்த்தங்கள் ஜீவனால் படைக்கப்படுபவையல்ல. அவை ஜீவனுக்கு வசப்பட்டிருப்பின் - நல்லவற்றையே படைப்பன். தீயவற்றைப் படைக்கவே மாட்டான். காம்யமான கார்யங்கள் நிறைவேற வேண்டுபவன் கனவில் அழகிய ஸ்திரீயைக்கண்டால் ஜயமும், கருத்தபல்லும், கருத்த நிறமும், உள்ள மனிதனைக் கண்டால் தோல்வியையுமடைகிறான் என்று ச்ருதி பலவற்றைக் காட்டுகிறது.

## 76. ததபாவாதிகரணம்

முன் அதிகரணத்தில் ஸ்வப்னம் நிரூபிக்கப்பட்டது. தற்போது ஸுஷுப்தி தசைபற்றி விசாரிக்கப்படுகிறது.

## 318 (ஸூ) தத்பாவோ நாடீஷு தச்ச்ருதே ராத்மனிச [7]

நாடிகள், புரீதத், ப்ரஹ்மம் இம்மூன்றும் ஸுஷுப்தி காலத்தில் ஜீவனுக்கு ஸ்தானமாகச்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றன இம்மூன்றில் ஒன்று அல்லது மூன்றுமே ஸ்தானமா என்று சம்சயம். விகல்பமாயிருக்கலா மென்று பூர்வபக்ஷம். இம்மூன்றும் ஒன்றேடொன்று அபேக்ஷையின்றியே ஸ்தானமாக ச்ருதியில் தோன்றுவதால் ஒவ்வொன்றும் தனித்தனியே ஸ்தானமாகலாமென்று பூர்வபக்ஷம். அதை இந்த ஸூத்ரத்தால் நிரஸனம் செய்கிறர்.

நாடிகளிலும் பரமாத்மாவினிடமும் (சகாரத்தால்) புரீதத்திலும் தங்குகிறன். தச்ச்ருதே: மூன்றிடங்களையும் ஸுஷுப்தி ஸ்தானமாக ச்ருதி கூறுவதால், நாடீ, புரீதத் - ப்ரஹ்மம் என்ற மூன்றும் - மாடி மீது கட்டில், அதன் மீது படுக்கை என்ற முறையில் ஸுஷுப்திகால ஸ்தானங்களாவதில் தடையில்லையென்பதாம், ப்ரஹ்மமே ஸாக்ஷாத்தாக படுக்கை ஸ்தானத்தில் இருப்பதால் மூன்றுமே சேர்ந்து ஸ்தானமாகும். விகல்பம் பொருந்தா தென்பதாம்.

## 319 (ஸூ) அத: ப்ரபோதோऽஸ்மாத் [8]

***அஸ்மாத்:*** இந்த ப்ரஹ்மத்திடமிருந்து, ப்ரபோத: விழித்-தெழுவதாக ச்ருதி, அத: = இக்காரணத்தாலேயே பொருந்துகிறது. ச்ருதியில் ஸத்திடமிருந்து (ப்ரஹ்மத்திடமிருந்து) வருபவன் அங்கிருந்து வருகிறேனென்று உணர்வதில்லை என்று கூறப்படுகிறது.

## 77. கர்மானுஸ்ம்ருதிசப்தவித்யதிகரணம்

## 320 (ஸூ) ஸ ஏவ து கர்மானுஸ்ம்ருதி சப்த விதிப்ய: [9]

ஸுஷுப்தனை ஜீவனே விழித்ததும் எழுந்து கொள்கிறனு? அல்லது வேறு யாராவதா என்று சம்சயம். ஸுஷுப்தனும் எல்லா உபாதிகளி-லிருந்தும் விடுபட்டவனும் ப்ரஹ்ம ஸம்பத்தியுள்ளவனுமான ஜீவன் முக்தன் போன்றவனுதலால், பழம்கர்ம சம்பந்தமின்மையால் உறங்கியவனைவிட்டு வேறுன ஜீவனே எழுந்து கொள்கிறனென்று பூர்வபக்ஷம்.

### ஸித்தாந்தம்

உறங்கியவனுக்கு கர்மாவையழிக்கவல்ல ப்ரஹ்ம ஜ்ஞானமில்லாமை யாலும், தன் பூர்வகர்மம் தன்னுல் அனுபவிக்கப்பட வேண்டியிருப்பதாலும் நானே உறங்கி எழுந்தேன் என்ற நினைவிருப்பதாலும், முன்பிருந்தபடியே

புலியோ - காடியோ, சிங்கமோ எப்படியிருந்தனவோ அப்படியே ஆகின்றன என்ற சப்தத்தாலும் முக்தி சாதனத்தையனுஷ்டிக்க விதிக்கும் விதிகள் வீணாகிவிடுமென்பதாலும், உறங்கியவனே எழுந்து கொள்கிறுனென்று ஸித்தாந்தம்.

## 78 முக்தாதிகரணம்

### 321 (ஸூ) முக்தேSர்த்த ஸம்பத்தி: பரிசேஷாத் [10]

இதுவரை ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி தசைகளை விசாரித்து ஸுஷுப்திக்குச் சமமான மூர்ச்சை நிலை விசாரிக்கப்படுகிறது. முதலிரண்டு தசைகள் ஜ்ஞானமுள்ளவை. பின்னிரண்டுதசைகளும் ஜ்ஞானம்லோபமடைந்தவையாதலின், ஸுஷுப்தியின்பின் மூர்ச்சைநிலை விசாரிக்கப்படுகிறது.

மூர்ச்சையும், மரணமும் ஒன்று—வெவ்வேறனவையா? என்று சங்கை எல்லா இந்த்ரிய வ்யாபாரங்களும் ஒய்ந்துவிடுவதால் இரண்டுமொன்றே யென்பது பூர்வபக்ஷம். அதனைக்கண்டிப்பது இந்த ஸூத்திரம்.

முக்தே= மூர்ச்சையடைந்தவனிடம் உள்ள நிலை, அர்த்தஸம்பத்தி: அரைமரணமடைந்தநிலையே; பரிசேஷாத் = ப்ராணுதி ஸர்வ வ்யாபாரமுமில்லாமையாலே ஸ்வாபமுமில்லை. ப்ராணன் காணப்படாமையால் ஜாகராவஸ்தையுமில்லை. மறுபடி பிழைத்தெழுவதால் மரண நிலையுமில்லை. தோற்றத்தின் வேறுபாட்டால் ப்ராணன் சூக்ஷ்மமாயிருப்பது தெரிவதாலும் மூர்ச்சை அரைமரண நிலையேயாம்.

இந்த நான்கு அதிகரணங்களும் சேர்ந்து ஒரு பெட்டி. இப்பெட்டியில் ஜீவனுக்கு நான்கு நிலைகளிலும் உண்டாகும் துக்கம் காட்டப்படுகிறது. பிறகு ப்ரஹ்மம் ஜாக்ரதாதிகளான எந்த நிலையிலிருந்தாலும் தோஷமற்றதென்றும்தானே நிர்த்தோஷமான கல்யாண குணம் மிக்கதென்றும் நான்குந அதிகரணங்களாலும் விளக்கப்பட்டது.

## 79. உபயலிங்காதிகரணம்

### 322 (ஸூ) நஸ்தானதோSபிபரஸ்ய உபயலிங்கம் ஸர்வத்ரஹி [11]

ஸம்ஸாரி ஜீவனுக்கு மிகுந்த வைராக்யம் சித்திப்பதற்காக மரணுவஸ்தையை நிரூபித்து பரமபுருஷார்த்தத்தில் ஆர்வம் மிகுவதற்காகப் பகவானுக்கு உபயலிங்கத்வம் இங்கு ஸ்தாபிக்கப்படுகிறது.

ஜீவனைப்போல அவனுடைய அந்தர்யாமியான பரப்ரஹ்மத்துக்கும் ஜாக்ரத்தசையில் ஸ்தானம் முதலியவற்றுல் தோஷங்கள் ஸம்பவிக்குமா? ஸம்பவிக்காவா? என்று சம்சயம்.

*ய: ப்ருதிவ்யாம் திஷ்டன், ய ஆத்மனி திஷ்டன்* முதலிய வாக்கியங்களின் படி ஜீவனுக்குப்போல் பரப்ரஹ்மத்துக்கும், ஸர்வாவஸ்தையிலும் ஸ்திதி சொல்லப்படுகையால் ஸ்வதந்த்ரனாயிருப்பினும் ஸ்வேச்சையாலும், இரத்தாதிகளில் மூழ்கல் அபுருஷார்த்தமாகையாலும், ஸர்வதோஷங்களும் ஸம்பவிக்கும் என்பது பூர்வ பக்ஷம். அதை நிராகரிக்கிறார். *ஸ்தானதோऽபி*-ப்ருதிவீ முதலியவற்றில் அந்தர்யாமியாக இருப்பினும் *பரஸ்ய*=ப்ரஹ்மத்திற்கு *ந*=முன்கூறிய தோஷங்கள் வருவதில்லை. ஸ்தான ப்ரயுக்தமான தோஷம் ஜீவனுக்கு வருவது போல் ப்ரஹ்மத்திற்கில்லை. *ஸர்வத்ரஹி உபயலிங்கம்:* ச்ருதிஸ்ம்ருத்யாதிகள் எங்கும் நிகிலதோஷங்களுமற்றவன் என்றும், கல்யாண குணங்களுக்கு உறைவிடமானவன் என்றும் உபயலிங்கமாக (இரண்டு அடையாளமுள்ளதாக) பரப்ரஹ்மம் பேசப்படுகிறது. ஆதலின், தோஷம் ஸம்பவிக்க மாட்டாது என்பதாம். அபஹதபாப்மா விஜர:, யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் என்பன போன்றச்ருதிகளும் யோமாமஜமநாதிஞ்ச, பர: பராணாம் முதலிய ஸ்ம்ருதிகளும் இங்கு காட்டப்படுகின்றன.

*பேதாதிதி சேத்*=இயற்கையில் பாபமற்ற ஜீவனுக்கு சரீர ஸம்பந்தத்தாலேற்படும் அவஸ்தாபேதத்தால் தோஷங்கள் ஏற்படுவது போல் பரமாத்மாவுக்கும், ப்ருதிவீ முதலிய சரீர ஸம்பந்தமென்னும் அவஸ்தா-பேதத்தால் அத்தகைய தோஷங்கள் ஸம்பவிக்கலாம் என்றால், அப்படியில்லை. *ப்ரத்யேகம் அதத்வசனாத்*=ஒவ்வொரு பர்யாயத்திலும் - ஏஷ ஆத்மாந்தர்யாமியம்ருத: என்று தோஷமற்றவன் என்று சொல்வதால், சரீர ஸம்பந்தம் மட்டும் தோஷத்திற்குக் காரணமாகாது. ஜீவனுக்கோ ''பராபித்யாணுத்து திரோஹிதம்'' என்றபடி பரமாத்ம ஸங்கல்பத்தாலே கர்மாதீனமான ஜ்ஞானஸங்கோசத்திற்குக் காரணமான சரீரஸம்பந்தம் ஏற்படுவதால் தோஷங்கள் உண்டாகின்றனவென்பதாம்.

## 323 (ஸூ) அபிசைவமேகே [13]

*அபிச* மேலும், ஏகே - சில வேதாந்திகள்; ஏவம்: ஒரே சரீரத்தினுள்ளிருக்கும் ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் - தோஷத்தையும், அதில்லாமையையும் முறையே கூறி, நியமனம், ஐச்வர்யம், பிரகாசம் முதலியவற்றைப்பிரஹ்மத்திற்கு வெளிப்படையாக ஸ்தாபிக்கின்றனர். ச்ருதியும் 'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா' என்றபடி மனுஷ்யாதி சரீரங்களில் ப்ரவேசத்தால் நாமரூபஸம்பந்தம், ப்ராஹ்மணன் யாகம் செய்யவேண்டும் என்பது போன்ற விதிகளுக்கு வசமாதல், கர்மவச்யத்வம்; இவ்விரண்டுக்கும் மூலமான சரீர ஸம்பந்தம் இரு ஆத்மாக்களுக்கும் பொதுவாயிருந்தாலும் ப்ரஹ்மத்துக்கு மட்டும் கர்ம பலத்தை யனுபவியாமை என்ற சிறப்பு எப்படிக் கூறக் கூடியது என்ற ஆக்ஷேபத்திற்கு விடையளிக்கிறார்.

## 324 (ஸூ) அரூபவதேவஹி தத்ப்ரதானத்வாத் [14]

தத் அரூபவதேவஹி=மனுஷ்யாதி சரீரங்களுள் புகுந்து நாமரூபங்களை யடைந்துள்ள ப்ரஹ்மம் ப்ராஹ்மணாதி சப்தங்களால் குறிப்பிடப்படுவதாய் இருந்தாலும், ரூபமற்றதேயென்று தீர்மானிக்கப்படுகிறது. ஜீவனைப்போலே சரீரித்வ நிபந்தனமான விதிவச்யத்வம் என்னும் கர்மவச்யத்வும் இல்லாமை யால் அரூபத்வம் என்பது கருத்து. ஏனெனில், ப்ரதானத்வாத் – நிர்வாஹகன் என்ற முறையில் ப்ரஹ்மமே ப்ரதானம் ஆதலின்; இதனால் ஸ்வதந்த்ரன் எனப் பட்டதாகிறது. ஆகாசோஹவை நாமரூபயோ: நிர்வஹிதா தேயதந்தரா என்று நாமரூபகார்யங்களான துக்காதிகளில் ஸ்பர்சம் இல்லாமையால் நிர்வாஹகன் என்று மட்டுமே கூறப்படுகிறான். இதனால் ப்ரஹ்மத்துக்கு எவ்வாறு விதிவச் யத்வம் நீக்கப்படுகிறதென்றால் கூறுவோம்;

விதி இரண்டுவிதம்; அறியாததையறிவிப்பதென்றும் ஒன்றில் ஈடு- படாதவனை யீடுபடுத்துவதென்றுமாம். ஈச்வரன் ஸர்வஜ்ஞனாபடியால் அவனறியாததை யறிவிப்பதென்பது பொருந்ாது. அனைத்தையும் ஆள்பவன் ஆதலின், இவ்வாறு செய்யாதேயென்று கட்டளையிடத்தக்க- வனுமிலன். உலகில் அறியாதவனையும், பரவசனானவனையும் ஹிதமறிந்த- மனிதன் இதைச்செய்; இதைச்செய்யாதேயென்று உத்தரவிடக்காண்கிறோம். ஆதலின், அஜ்ஞானமோ, பராதீனத்தன்மையோ இல்லாத ப்ரஹ்மத்திடம் விதிகள் தம் சக்தியையிழந்து அவனுக்கு விசேஷணமான ஜீவனிடத்தில் பயனுள்ளவையாகின்றன. ஆதலின், ப்ரஹ்மம் உபயலிங்கமே.

அடுத்து - ஸத்யம் ஜ்ஞானம் என்னும் ச்ருதியில் ஒரு விசேஷமுமற்ற ப்ரகாசமாத்ரஸ்வரூபமான ப்ரஹ்மமே விளக்கப்படுவதால் எப்படி ‘உபய- லிங்கம்’ என்று கூறலாம்? என்ற சங்கைக்கு விடையளிக்கிறார்.

## 325 (ஸூ) ப்ரகாசவச்சாவையர்த்யாத [15]

ஸத்யம் ஜ்ஞானம் என்ற வாக்யம் ஸபலமாகவேண்டுமென்றும், விபல மாகக்கூடாதென்றும் கருதி ப்ரகாசமே ஸ்வரூபம் என்று ஏற்றுக்கொண்டது போல ‘‘ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்’’ என்ற வாக்யம் ஸபலமாக ப்ரஹ்ம- ஸ்வரூபம் கல்யாணகுணபூர்ணம் என்று ஏற்கவேண்டும். ஆதலின், உபய- லிங்கமே ப்ரஹ்மம்.

## 326 (ஸூ) ஆஹசதந்மாத்ரம் [16]

ஸத்யம் ஜ்ஞானம் என்னும் வாக்யம் ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞானம் ஸ்வரூபம் என்றதே தவிர கல்யாண குணாகரத்வத்தைத் தடுக்கவில்லை,

### 327 (ஸூ) தர்சயதிசாதோ அபிலப்யதே [17]

அதோ என்ற சொல் முற்றிலும் என்ற பொருளது. முழு வேதாந்தமும் நிரஸ்தநிகல தோஷனாய், கல்யாண குணாகரனாயுள்ள உபய (இரு) லக்ஷணங்களையும் காட்டுகிறது.

"நிஷ்க்ரியம் நிஷ்களம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம்" முதலிய-ச்ருதிகளும்

"தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்.
"யோ மாமஜமநாதிஞ்ச வேத்தி லோக மஹேச்வரம்"
அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா.
"மத்த: பரதரம் நாத்யத்"

முதலிய ஸ்ம்ருதிகள் இவ்விதம் காட்டுகின்றன

### 328 (ஸூ) அத ஏவ சோபமா ஸூர்யகாதிவத் [18]

ப்ருதிவீ முதலிய ஸ்தானங்களாலேற்படும் தோஷம் உபயலிங்கமான ப்ரஹ்மத்திடம் ஏற்படாத காரணத்தாலேயே சாஸ்த்ரங்களில் ஜலத்தில் காணும் ஸூர்யன் முதலியன உதாரணமாகக் காட்டப்படுகின்றன. "ஒரே ஆகாசம் எவ்வாறு குடம் முதலியவற்றில் வெவ்வேறாகத் தோன்றுகிறதோ, ஒரே சூர்யன் எவ்வாறு நீர்நிலைகளில் வெவ்வேறாகத் தோன்றுகிறானோ அவ்வாறே, ஆத்மாவும் பற்பல இடங்களிலிருந்தாலும் ஒருவனேயென்று கூறுமிடத்தில் ஸ்தான ப்ரயுக்தமான சுருக்கமோ விரிவோ இல்லை (தோஷங்களில்லை) என்பது ஜலாதார ஸூர்யாதித்ருஷ்டாந்தத்தாலே கிடைக்கிறது.

### 329 (ஸூ) அம்புவதக்ரஹணாத்து நததாத்வம் [19]

இங்கு பூர்வபக்ஷத்தைக் காட்டுகிறது 'து' சப்தம், *அம்புவத் அக்ரஹணாத்* தண்ணீரினால் உண்மையாக சூர்யன் க்ரஹிக்கப்படாததுபோல் ப்ருதிவீ முதலியவற்றிலும் ப்ரஹ்மம் க்ரஹிக்கப்படுவதில்லையாதலின்; *நததாத்வம்;* ஸூர்யனிடம் ஜலகத தோஷம் ஒட்டாததுபோலே பரமாத்மாவிடம் ப்ருதிவ்யாதிகத தோஷம் இல்லையெனவொண்ணாது. அவற்றில் உண்மையாக பரமாத்மா இருப்பதால் என்று பூர்வபக்ஷம், இதனையடுத்தபடி மறுக்கிறார்.

### 330 (ஸூ) வ்ருத்திஹ்ராஸ பாக்த்வம் அந்தர்ப்பாவாத் உபயஸாமஞ்ஜஸ்யாத் ஏவம் தர்சனாச்ச

*வ்ருத்திஹ்ராஸ பாக்த்வம் அந்தர்ப்பாவாத்:* ப்ருதிவி முதலிய விஷமமான ஸ்தானங்களிலுள்ள பரமாத்மாவுக்கு - அவற்றுள் தங்கியிருப்பதால் ***வ்ருத்திஹ்ராஸ பாக்த்வம்:*** (நீர்நிலைகளில் ஸூர்யனை உவமானமாகக் காட்டி

யமையால்) சுருக்கமும் விரிவும் விலக்கப்படுகின்றன. இது எவ்வாறு தோன்றுகிறதென்றால் - *உபய ஸாமஞ்ஜஸ்யாதேவம்* இரண்டு உதாரணங்களும் அப்போதே பொருந்துவனவாகும். குடம் முதலியவற்றிலுள்ள ஆகாசத்தையும், நீர் நிலேகளில் உண்மையில்லாத சூர்யனையும் காட்டியது பரமாத்மாவுக்கு ப்ருதிவீ முதலியவற்றின் தோஷம் ஒட்டாதென்றும் ஸ்பர்சம் கிடையாதென்றும் காட்டுவதாம். இரண்டு உதாரணங்கள் கொடுத்து ஓர் அம்சம் ஒத்திருப்பதைக் காட்டுவது. இம்மாணவன் சிங்கம் என்றால், க்ரூரத்தன்மை முதலிய வற்றில் ஒன்றை மட்டும் ஒப்புமையால் காட்டுவது போலாகும். உவமையில் ஏதேனும் ஒரு அம்சத்தில்தான் ஒற்றுமை காணப்படும்.

ஓர் சங்கை - அதாதோநேதிநேதி முதலியவாக்யங்களால் மூர்த்தம் - அமூர்த்தம் என்ற ரூபம் கொண்ட ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்ம ரூபத்வம் தடுக்கப் படுகிறது. ஆதலின் ப்ரபஞ்சமற்ற கேவலம் ஸத்தே ப்ரஹ்மம். உபயலிங்க மன்று எனத்தோன்றுகிறது.

இதற்கு விடை தருகிறார்.

## 331 (ஸூ) ப்ரக்ருதை தாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோப்ரவீதிசபூய: [21]

ஹி என்பது ஹேதுவைக்காட்டுகிறது. ப்ரஹ்மத்திற்கு மூர்த்தமென்றும் அமூர்த்தம் என்றும் (அசேதனம் - சேதனம்) இருவகை ரூபங்களுள்ளன. என்பது ப்ரமாணங்களாலறியாதது இங்கு அறிவிக்கப்படுகிறது. ஆதலால், அதை நிஷேதம் செய்யக்கூடாது. பின்னென்னில், *ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி*—முன் தொடக்கப்பட்ட ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ப்ரபஞ்சம் மட்டும் ப்ரஹ்மத்தின் ரூபமன்று என அதாத ஆதேசோநேதிநேதி என்ற ச்ருதியில் விளக்கப்படுகிறது. *ததோ ப்ரவீதிசபூய:* முன் சொன்னதைக் காட்டிலும் பூயஸ்த்வத்தை (பெருமையை) வாக்யசேஷம் சொல்கிறது. நஹ்யேதஸ்மாதிதிநேத்யன்யத் பரமஸ்தி - அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் என்றும் ப்ராணாவை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம் என்பது ப்ரகாரத்தைக்குறிக்கும்; *இதி ந*-முன்சொன்ன ப்ரகாரமன்று ப்ரஹ்மம், நேதி நேதி என்று குறிப்பிடப்பட்ட ப்ரஹ்மத்தை விட்டு *அன்யத் நஹ்யஸ்தி* வஸ்துஸ்வரூபத்தாலும் குணத்தாலும் உயர்ந்தது வேறில்லே என்று பொருள். ஸத்யம் என்பது ப்ரஹ்மத்தின் பெயர். ஏன் அப்பெயர் வந்தது எனில், ப்ராணனுடன் கூடவே ஸஞ்சரிப்பதாலும், ஆகாசாதிகள்போல் ஸ்வரூப விகாரம் பெறுததாலும், ஜீவனே ஸத்யம் என்கிறோம். ஸ்வரூப விகாரமும் ஜ்ஞான ஸங்கோச ரூபமான ஸ்வபாவ விகாரமும் இல்லாமையால் - ப்ரஹ்மம் *தேப்ய:* அந்த ஜீவர்களேக் காட்டிலும் ஸத்யன். ஆகையால், வேறு ப்ரமாணங்

களால் அறியாத ப்ரஹ்மத்திற்கு மூர்த்தா மூர்த்த ரூபமான ப்ரபஞ்சத்தை ப்ரகாரமாக உபதேசிக்கையால் உபயலிங்கமே ப்ரஹ்மம். ஆகவே திரும்பத் திரும்ப ப்ரகார விசேஷமே உபதேசிக்கப்படுகையால் நேதி நேதி என்பதன் மூலம் முன் ப்ரக்ருதமான இயத்தை (அளவு) மட்டும் நிஷேதிக்க (மறுக்க)ப் படுகிறது.

மேல் ஒரு **ஆசங்கை:** உண்மையில் ப்ரத்யக்ஷத்தால் நிர்விசேஷ சின்மாத்ரமே க்ரஹிக்கப்படுகிறது. அதற்கு வேறுபட்டதும் ப்ராந்தியால் ஏற்படுவதுமான விசேஷ ரூபத்தை "நேதி நேதி" என்பது மறுக்கிறது என்று கொள்ளலாமே? இதற்கு மறுப்புக்கூறுகிறார்.

## 332 (ஸூ) ததவ்யக்தமாஹஹி [22]

**தத்** அந்தப்ரஹ்மம் ***அவ்யக்தம்***-சப்தம் தவிர்த்த எந்தப்ரமாணத்தாலும் புலப்படுவதன்று, ***ஆஹஹி*** ச்ருதியவ்வாறே சொல்லுகிறது "ந ஸந்த்ருசே திஷ்டதி ரூபமஸ்ய" (இவனுருவம் கண்களுக்குப் புலனாகாதது) முதலியவை. ஆதலின் குடம் முதலியவை போல் ப்ரஹ்மம ப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கப் படுவதில்லை.

## 333 (ஸூ) அபிஸம்ராதனே ப்ரத்யக்ஷாநுமானாப்யாம் [23]

அபிச – மேலும், ***ஸம்ராதனே*** - மிகவும் ப்ரீதிகரமான உபாஸனமிருந் தால், பகவானின் ஸாக்ஷாத்காரம் ஸம்பவிக்கும் வேறு ப்ரகாரங்களால் ஸம்பவிக்காது என்பதாம். ப்ரத்யக்ஷாநு மானுப்யாம் ச்ருதி ஸ்ம்ருதிகள் இருக்கிறபடியால் என்றபடி நாயமாத்மா ப்ரவசனேன லப்ய: என்றும். நாஹம் வேதை: ந தபஸா என்றும் ச்ருதியும் ஸ்ம்ருதியும் பக்திமிக்க உபாஸனத்தாலேயே ஸாக்ஷாத்காரம் ஸம்பவிக்கும் என்பதால், ப்ரஹ்மம் வேறு ப்ரமாணங்களால் புலப்படாததாதலின். "த்வே வாவப்ரஹ்மணோ ரூபே முதலியவற்றால் ப்ரஹ்மத்துக்கு ப்ரகாரமாகச் சொல்லப்பட்ட ஜகத்தின் நச்வரத்தன்மை தடுக்கப்படவில்லை. ப்ரக்ருத ஏதாவத்த்வமே-அளவே தடுக்கப்படுகிறது.

## 334 (ஸூ) ப்ரகாசாதிவச்சாவைசேஷ்யம் ப்ரகாசச்ச கர்மண்யப்யாஸாத் [24]

இதனாலும் மூர்த்தாமூர்த்த ரூபத்துடன் கூடியமை தடுக்கப்படவில்லை. வாமதேவமுனிவர் கூறினர். நானே மனுவாயிருந்தேன் - பின் சூர்யனும் ஆனேன் என்று. அத்தகையவர்க்கு பக்தி யோகம் என்னும் கர்மாவின் அப்யாஸத்தால்-***ப்ரகாசாதிவச்ச***-தர்சனம் முதலியன உண்டாயினவோ - அவர்

களின் ப்ரஹ்ம ஸ்வரூபம் குணம் இவை பற்றிய தர்சனத்தில், ஜ்ஞானம்-ஆனந்தம் முதலிய ஸ்வரூபம் போலவே மூர்த்தம் அமூர்த்தம் என்னும் ரூபமும் விசேஷமின்றி இடம் பெற்றதே ஜகத் நச்வரத்தன்மைக்கு மட்டும் ப்ரஹ்ம குணத்வம் தடுக்கப்படுகிறதென்ற விசேஷ மேதும் இல்லை. ஆகவே மூர்த்தாமூர்த்த ரூபவிசிஷ்டம் ப்ரஹ்மம் என்பதற்குத்தடையில்லை என்பதாம்.

## 335 (ஸூ) அதோ Zநந்தேந ததாஹி லிங்கம் [25]

**அநந்தேந** - எல்லையில்லாத கல்யாண குணகணங்களுடன் ஸம்பந்தம் **அத:**-கூறிய காரணங்களால் நிலையாயிற்று. **ததாஹி** அப்படியிருந்தாலே, **லிங்கம்** உபயலிங்கம் ப்ரஹ்மம் என்பது பொருந்தும். இந்த உபயலிங்காதிகரணத்திலே அகில ஹேயப்ரத்யனீகத்வம், கல்யாண குணாகரத்வம் என்ற இரண்டும் உபயலிங்கம் எனப்படுகிறது. உத்ஸர்காபவாத ந்யாயம் (பொது விதியும் சிறப்பு விதியும்) விரோதாதிகரணந்யாயம். இவற்றைக் கொண்டு இது விளக்கத்தக்கது. இதில் அபச்சேதாதிகரணத்திற்கு இடமில்லையென்றும் கூறவேண்டும்.

உத்ஸர்காபவாத நியாயமாவது - பொது விதிக்குச் சிறப்பு விதியால் விரோதம் தோன்ற அதனைப் பரிஹரிக்கச் சிறப்பு விதிக்குரிய இடத்தை விட்டு ஏனைய இடங்களில் பொது விதி செல்லும் என்று வகுத்துக் கூறுவது (உ.ம்) பிராணிகளை ஹிம்ஸிக்கலாகாது என்பது பொது விதி. அக்னீஷோமீய யாகத்தில் பசுவை ஹிம்ஸிக்கலாமென்பது சிறப்பு விதி. இந்த சிறப்பு விதியை விட்டு வேறு தன் இச்சையால் செய்யும் ஹிம்ஸைகளைத் தடை செய்வதாகக் கொள்ளுதலே உத்ஸர்க-அபவாதந்யாயம் எனப்படுவது. அதுபோலவே நிர்குணம், நிரஞ்ஜனம், அத்ரேச்யம் முதலியவை உத்ஸர்க்க (பொது) விதிகள், ஸர்வஜ்ஞன் ஸ்வாபாவிகமான ஜ்ஞானம், பலம் ஸம்ருத்தி களையுடையவன் என்பன அபவாதங்கள் (சிறப்பானவை) இவ்வபவாதங்களால் சித்தமான விசேஷ குணங்களைவிட்டு வேறான விரஜோவிம்ருத்யு: விசோகோ, விஜிகத்ஸோ, Sபிபாஸ: என்று சிறப்பாய் நிஷேதிக்கப்பட்ட ஹேய (தீய) குணங்கள் இல்லையென்பதையே நிர்குணம் நிரஞ்ஜனம் என்று பொதுவாகச் சொல்வதா. நிர்குண - ஸகுணச்ருதிகளுக்கு ஹேய ப்ரத்யனீகத்வம், கல்யாணகுணாகரத்வம் என்று விஷயம் வேறுபடுவதால் விரோதமில்லை. விதி நிஷேதங்களுக்கும் இவ்வாறு விரோதம் சாந்தமாகிறது. இங்கு அபச்சேதாதிகரணந்யாயத்திற்கு இடமில்லை. அதாவது, ஒரு யாக விசேஷத்தில் ஐந்து ரித்விக்குகள் ஒருவருக்கொருவர் கச்சத்தைப்பற்றிப் பின் செல்வர். அத்வர்யுவை - ப்ரஸ்தோதாவும் அவரை ப்ரதிஹர்த்தாவும், அவரை உத்காதாவும், அவரை ப்ரஹ்மாவும் தொட்டுக்கொண்டே பின்

செல்லவேண்டும். இவர்களின் அன்வாரம்பணத்திற்கு (தொட்டுப்பின் செல்லுதல்) தடை ஏற்பட்டால் பிராயச்சித்தம் செய்யுமாறு விதிக்கப்படுகிறது. 1. உத்காதா - விட்டால் தக்ஷிணையின்றி யாகத்தை முடித்து மறுபடி யவனைக்கொண்டு யாகம் செய்யவேண்டும். 2. ப்ரதிஹர்த்தாவால் அபச்சேதம் வந்தால் ஸர்வஸ்வத்தையும் தானம் செய்யவேண்டும்.

இந்த இடத்தில் உத்காதாவின் அபச்சேத நிமித்தமான ப்ராயச்சித்த புத்தி-ப்ரதிஹர்த்தாவின் அபச்சேத நிமித்தமான ப்ராயச்சித்த புத்தியாலே பாதிக்கப்படுகிறதென்பது அபச்சேத ந்யாயம். இந்த ந்யாயத்தால் அத்வைதிகள் நிர்க்குண சாஸ்திரம் குணப்ராப்தியை எதிர்பார்ப்பதால் ப்ரபலமானது, பரமானது ஆதலின், இதனுல் ஸகுண சாஸ்த்ரம் பாதிக்கப் படுவதால். ப்ரஹ்மம் நிர்குணம் என்றே தேறும் என்று கூறுகின்றனர். அது அனுசிதமானது ஏனெனில், உத்காதாவின் அபச்சேதம் ஏற்படுகையில் ப்ரதிஹர்த்தாவின் அபச்சேதம் உண்டாக வேண்டுமென்ற நியமமில்லை. இரண்டும் முறையே (க்ரமமாக) ஏற்பட வேண்டுமென்பதுமில்லை. க்ரமமாக ஏற்பட்டாலும் - உத்காதாவின் அபச்சேதம் முதலிலும், அடுத்தது அடுத்தபடி ஏற்படுவதாயுமிருக்கட்டும். அதுவே மாறியுமிருக்கட்டும். பூர்வாபூர்வ க்ரமம் நியதமில்லாமையால், விரோதத்திற்கோ, க்ரமத்திற்கோ எங்கு நியமம் உள்ளதோ அங்கு அபச்சேதந்யாயம் வராது. *அதிலும் அபச்சேதந்யாயம் சொன்னல்.* எப்போதும் பூர்வ சாஸ்த்ரத்திற்கு அப்ராமாண்யம் வந்து தீரும். அதை ஆசார்யர்களும் அருளினர்கள். எங்கு பௌர்வாபர்யம், விரோதம். முந்தையதற்கு அப்ராமாண்யம் இவை நியதமாயில்லையோ அங்கு அபச்சேத ந்யாயம் பொருந்தும் என்றனர். பௌர்வாபர்யம் விரோதச்ச பூர்வா ப்ராமாண்யமேவச நியமாந்நாஸ்தி தத்ராஸௌ அபச்சேத நயோ பவேத்.

ஆகவே, அபச்சேதந்யாயத்தைக் கொண்டு நியதபரமான நிர்குண சாஸ்த்ரம் கொண்டு ஸகுண சாஸ்திரத்தைப் பாதிக்க வியலாது. நிர்குண சாஸ்த்ரம் நியதபரமாகையால் இதையபேக்ஷித்து *உபக்ரமாதிகரண ந்யாயப்படி* ஸகுண சாஸ்த்ரமே ப்ரபலம். அதாவது.

"ப்ரஜாபதி: வருணுய அச்வம் அநயத்" என்ற இடத்தில் அச்வத்தைப் பிரதி க்ரஹிக்க இஷ்டி கூறப்படுகிறது. இது உபக்ரமம் (தொடக்கம்) தான் தோன்றும்போது விரோதி தோன்ருததாலே அஸஞ்ஜாத விரோதி எனப்படும். இது ப்ரபலம். இந்த இஷ்டி செய்வது தாதாவுக்கா - ப்ரதி க்ரஹீதாவுக்கா என்று சந்தேகம் ஏற்பட்டால், உபக்ரம வாக்யத்தை யனுஸரித்து தாதாவுக்கா - ப்ரதி க்ரஹீதாவுக்கா என்று சந்தேகம் ஏற்பட்டால் உபக்ரம வாக்யத்தை யனுஸரித்து தாதாவுக்கே என்று தீர்மானிக்

கப்பட்டுள்ளது. இந்த ந்யாயத்தைக்கொண்டு ஸகுண நிர்க்குண வாக்கியங்களை ஆராய்ந்தால் ஸகுணவிதி பூர்வபாவியென்றும் நிர்குணவிதி பரமானதென்றும் அவர்களின் கூற்றுப்படி உபக்ரமமான குணசாஸ்த்ரத்தை விட பரமான (உபஸம்ஹாரமான) நிர்க்குணசாஸ்த்ரம் துர்ப்பலமென்றும் தேறுகிறது, ஆதலின், பரத்தைக்கொண்டு பூர்வத்தைப்பாதிக்கவியலாது அப்படிப்பாதிக்கும் என்றால் மாத்யமிகளின் ஸர்வ சூன்ய வாதம் பிரமம் ஆதலின் அவன்மதமே வெற்றிபெறும்.

## 80 அஹிகுண்டலாதிகரணம் 6

முன் அதிகரணத்தில் ப்ரஹ்மத்துக்கு நிர்த்தோஷத்வம் ஸாதிக்கப் பட்டது. அதை நிலைநாட்ட அசித்வஸ்துவும் ப்ரஹ்மத்தின் ரூபமே என்பதை ஸாதிக்கவேண்டும். அசித்து ப்ரஹ்மத்தின் ரூபம் என்பது அஹிகுண்டல ந்யாயத்தால் சித்திக்குமா? ப்ரபையும் விளக்கு அல்லது சூர்யனும் போன்ற ந்யாயத்தால் ஒரே ஜாதி என்ற முறையில் சித்திப்பதா? அன்றி விசேஷண விசேஷ்ய பாவத்தால் சித்திக்குமா என்ற சம்சயத்தால் இவ்வதிகரணம் தோன்றுகிறது.

### 336 (ஸூ) உபயவ்யபதேசாத்து அஹிகுண்டலவத் [26]

ப்ரஹ்மத்திற்கு மூர்த்தம், அமூர்த்தம் என்று இரு ரூபங்களாக சேதனா சேதனங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் அசேதனம் ப்ரஹ்மத்தின் ரூபம் என்பது. ப்ரஹ்மஸ்வரூபமே அசித்ரூபமாகப் பரிணமிப்பதாலேயேற்படுவதா? அல்லது ப்ரஹ்மமும் அசேதனமும் ஒரே ஜாதி என்பதால் ஏற்படுவதா அல்லது ஜீவனைப் போல் சரீரம் என்பதால் ப்ரஹ்மத்தில் விசேஷணம் என்பதாலா என்று சம்சயம்.

இந்த ஸூத்திரத்தில் துசப்தம் ஏவ என்பது போல் அவதாரணப் பொருளைக் காட்டுவது. ஸர்ப்பத்திற்கு குண்டலபாவமும், நேரான தன்மையும் போலவே ப்ரஹ்மம் அசித்ரூபமாகிறது எனலாம். ஏனெனில் உபயவ்யபதேசாத்: பேதமாயும் அபேதமாயும் வழங்கப்படுவதால் இப்பிரபஞ்சமெல்லாம் ப்ரஹ்மம்; என்று அபேதமும், இந்த ஜீவனைத்துணை கொண்டு யாவற்றிலும் உடன் நுழைந்து நாம ரூபங்களை அமைக்கிறேன் என்று ஸங்கல்பிக்கும் போது 'பேதமும் 'பேசப்படுகின்றது. இவை ஸர்ப்பத்தின் வெவ்வேறு தன்மைபோல (ருஜுபாவமும் வக்ரபாவமும்) பொருந்தலாம் என்பது ஓர் பூர்வ பக்ஷம்.

### 337 (ஸூ) ப்ரகாசாச்ரயவத்வா தேஜஸ்த்வாத் [27]

வா என்பது முன் பக்ஷத்தை விலக்குவது. ஒளியும் ஒளியுள்ள தீபாதிகளும் எப்படி தேஜஸ்த்வம் என்ற ஒரே ஜாதியில் சேர்க்கையால்

ஸ்வரூபக்கில் பேதமிருப்பினும் அபேதம் பேசப்படுகிறதோ அப்படி அசித்தான ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் கூடும் ( அசித்திற்கு ப்ரஹ்ம ரூபத்வம் கூடும் ) முன்கூறிய ப்ரகாரத்தில் ப்ரஹ்மத்திற்கு நிர்த்தோஷத்வம் அபரிணாமித்வம் சொல்லும் ச்ருதிகளுடன் விரோதம் வரும். இந்த பக்ஷத்தில் அவ்விரோதம் வராதென்று கருத்து

இந்த பக்ஷத்தை ஏற்றாலும், ப்ரஹ்மமே ஸர்வமும் என்று அபேதமும் ஸர்வ சப்தவாச்யத்வம் சொல்வதால் அசேதனரூபம் இல்லாமல் போகட்டும். ஒரு பசு கண்டம், முண்டம், பூர்ணச்ருங்கம் என்று கூறப்படமுடியாது அல்லவா எனும் அஸ்வாரஸ்யத்தால் சித்தாந்தம் கூறுகிறார்.

## 338 (ஸூ) பூர்வவத்வா [28]

வாசப்தம் இரு பூர்வபக்ஷங்களையும் விலக்கவல்லது. *பூர்வவத்வா* அம்சாதிகரணத்தில் பேதாபேதவ்யபதேசங்கள் பொருந்துவதற்கும், ப்ரஹ்மம் நிர்த்தோஷம் என்று சாதிக்கவும், ஜீவன், ப்ரகாச குண ஜாத்யாதிகளைப் போல் விட்டுப் பிரிக்க இயலாத விசேஷணமாதலின், ப்ரஹ்மத்திற்கு அம்சமேயென்று சொல்லியதேபோல், அசித்தும் விசேஷமாதலின், ப்ரஹ்மத்திற்கு அம்சமாகலாம் இதனால் 'அசித்' என்ற சொல்லும் அத்துடன் கூடிய ப்ரஹ்மத்தைச் சொல்லும், ஆகவே இவையாவும் ப்ரஹ்மமேயென்று அபேதமாகப் பேசுவது பொருத்தமே. விசிஷ்டத்தில் விசேஷணம் ஏகதேச மென்பதால் அபேதம் முக்கிய வழக்கே ஸ்வரூப ஸ்வபாவங்களில் பேதத்தாலே இரண்டிற்கும் பேத வழக்கும் முக்கியமேயாம். இதனால் ப்ரஹ்மம் நிர்த்தோஷம் என்று சித்தம்.

## 339 (ஸூ) ப்ரதிஷேதாச்ச [29]

ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா அஜரோஅமர; நாஸ்யஜரயா ஏதத் ஜீர்யதே'' முதலியச்ருதிகளாலே ப்ரஹ்மத்திற்கு அசித்தின் தர்மம் தடுக்கப் பட்டுள்ளமையால் விசேஷணவிசேஷ்ய பாவத்தாலேயே அம்சாம்சிபாவம் என்று ஸித்தமாகிறது

## 81 பராதிகரணம் 7

## 340 (ஸூ) பரமதஸ்ஸேதுன்மான ஸம்பந்த பேதவ்யபதேசேப்ய: [30]

ப்ரஹ்மம் உபயலிங்கம் என்று நிலைநாட்டப்பட்டது. இப்போது முன் கூறிய — ஜகத்திற்கெல்லாம் நிமித்தமாயும் உபாதானமுமாயுள்ள ப்ரஹ்மத்தை விடச்சிறந்ததோர், தத்துவமிருக்கிறது என்று சில போலி ஹேதுக்களாலே சங்கித்து கண்டிக்கப்படுகிறதென்பது ஸங்கதி.

யதோவா இமாநிபூதானி முதலிய வாக்கியங்களால் ஜகத்தில் ஜன்மாதிகளுக்குக் காரணமான ப்ரஹ்மத்தைவிட வேருன பரதத்வம் இருக்கிறதா இல்லையா என்று சம்சயம். அதய ஆத்மா ஸஹேது என்று குறிப்பதாலும், ஏதம ஸேதும் தீர்த்த்வா என்று ப்ரஹ்மத்தைத் தாண்டிச் செல்ல வேண்டிய ஸேதுவாகக் குறித்தாலும் இதற்கு மேலும் உயர்ந்த தத்வம் உள்ளதென்று பூர்வபக்ஷம். ஸேது என்ருல் சேர்ப்பது என்று கருத்து சேர்ப்பது ஒன்று என்ருல் சேரவேண்டியதொன்று இருக்க வேண்டும் (ப்ராபகம் - ப்ராப்யம் என்பதுபோல்) இந்த பூர்வபக்ஷத்தை இந்த ஸூத்ரம் காட்டுகிறது.

*அத*: இதுவரை ஸர்வகாரணமாயும்— உபயலிங்கமாயும் கூறப்பட்டுள்ள ப்ரஹ்மத்தைவிட, *பரம்*; உயர்ந்த தத்வம் உள்ளது. ஏனெனில் *ஸேதூன் மானஸம்பந்த பேத வ்யபதேசேப்ய*: வ்யபதேசம் என்பது ஸேது, உன்மானம் முதலிய ஒவ்வொன்றுடனும் சேர்கிறது.

1. ஸேதுவ்யபதேசத்தால் அடையப்படும் பொருள் வேறென்று புலனுகிறது.
2. சதுஷ்பாத் ப்ரஹ்ம ஷோடசகலம் என்று *உன்மானவ்யபதேசத்தால்* (உன்மானம் - அளவு) நான்கு பாதங்கள். பதினுறு கலைகள் என்று அளவிட்டதைவிட அளவில்லாத வேறு தத்வமிருக்கவேண்டும் என்று கருத்து.
3. *ஸம்பந்தவ்யபதேசத்தால்*: அம்ருதஸ்யபரம் ஸேதும் என்றபடி ப்ராப்யம் ப்ராபகம் என்ற ஸம்பந்தத்தைச் சொல்வதால். அம்ருதம் என்றும் அடையவேண்டிய தத்வம் ஸேதுவைவிட வேருனதென்று புலப் படுகிறதாம்.
4. ***பேதவ்யபதேசத்தால் :*** பராத்பரம் புருஷமுபைதி ததோயதுத்தரதரம் என்றெல்லாம் புருஷனென்றும்-பரப்ரஹ்மத்தைவிட மேலான தத்வமுள்ள தென்று தோன்றுகிறது என்று பூர்வபக்ஷம். இதைக் கண்டிக்கிருர்.

## 341 (ஸூ) **ஸாமான்யாத்து [ 31 ]**

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது. இங்கு ஸேது என்று கூறியது ஓர்ப்ராப்யத்தையடைவிப்பதென்ற விசேஷப் பொருளில் இல்லை. *ஸாமாந்யாத்*- ஜகத்தை ஒன்ருேடொன்று கலவாமல் தாங்குவது என்பதால் ஸேதுவின் ஒப்புமைபற்றிக் கூறியது. இவ்வாறு ச்ருதியே ''அதய ஆத்மா ஸஸேது: வித்ருதி ரேஷாம் லோகாநாம் அஸம்பேதாய'' என்று கூறிற்று. உலகங்கள் தத்தம்ஸ்வபாவங்களில் ஸாங்கர்யம் (கலப்பு) ஏற்படாமலிருக்க - பரம புருஷனே ஸேது போலே தரிக்கிருன் என்று ச்ருதியின் பொருள். ஸிநோதி

(கட்டுகிறது) என்பதால் ஸேது என்று காரணப்பெயருமாகிறது. ஆதலின் வேறு ப்ராப்யம் இங்கு தோன்றவில்லை, ஏதம் ஸேதும் தீர்த்வா என்ற இடத்தில் அடைந்து என்று பொருள் வேதாந்தம் தரதி என்பது போல் ப்ராபகப்ராப்யங்களுக்கு அபேதத்தைச் சொல்லுகிறது.

## 342 (ஸூ) புத்த்யர்த்த: பாதவத [32]

இதனால் இரண்டாவது ஹேதுவிற்கு விடைகூறுகிறார். ப்ரஹ்மத்தை அளவிட்டுக் கூறியது உன்மானம் - ஏனென்றால், *புத்த்யர்த்த:* அனுஸந்தானம் செய்ய வசதிக்காக *பாதவத*-வாக்பாத: சக்ஷுஷ்பாத: என்றெல்லாம் ப்ரஹ்மத்துக்கு வாகாதிகளைப்பாதங்களாகச் சொல்வது உபாஸனத்திற்கானது - அது போலவே இதுவும் ப்ரஹ்மம் பரிமாணமுள்ளதென்பதைக் காட்டுவதல்ல.

உபாஸனார்த்தமாயினும் பரிமாணம் ப்ரஹ்மத்துக்கு எவ்விதம் பொருந்தும் என்பதற்கு விடைத்தருகிறார்.

## 343 (ஸூ) ஸ்தான விசேஷாத் ப்ரகாசாதிவத் [33]

நாமறியும் வாகாதி ஸ்தான ரூபமான உபாதி பேதத்தால் அத்துடன் ஸம்பந்தமுள்ளதால் அளவுள்ளதென்று அனுஸந்திக்கக்கூடும். எப்படியென்னில், *ப்ரகாசாதிவத்* - எங்கும் பரவும் ப்ரகாசத்திற்கு ஜன்னல் குடம் முதலிய உபாதிகளைக் கொண்டு அளவிட்டு அனுஸந்தானம் ஏற்படுவது போலவே மிகவும் பொருந்தும் என்பதாம்.

மூன்றாவது ஹேதுவையடுத்தபடி நிரஸனம் செய்கிறார்.

## 344 (ஸூ) உபபத்தேச்ச [34]

ப்ராப்யனான பரமபுருஷனுக்கு ஸ்வப்ராப்தியில் தனக்கே உபாயத்வம் பொருந்துவதால் ப்ராபகமேப்ராப்யமுமாவதால் வேறுப்ராப்யம் என்று கூறுவது பொருந்ாது. யமேவைஷவ்ருணுதே தேநலப்ய: என்றபடி வேறு உபாயமுமில்லையென்பது பெறப்படும்.

நான்காவது ஹேதுவை நிரஸிக்கிறார்:

## 345 (ஸூ) ததாந்யப்ரதிஷேதாத் [35]

ததோயதுத்தரதரம், அக்ஷராத் பரத: பர: முதலிய பேதச்ருதிகளாலே அதிகமான ஒருதத்வம் உண்டென்பது தவறு ததா அவ்விடத்திலேயே அன்ய ப்ரதிஷேதாத் -அன்யனான பரன் தடுக்கப்படுவதால், "யஸ்மாத் பரம் நாபர

மஸ்திகிஞ்சித்'' என்றும் நஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி என்றும், பரப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு தத்வம் இல்லையென்று கூறப்படுகிறது. பரமபுருஷனைவிட வேறு யார்க்கும் பரத்வம் தடுக்கப்படுகிறது. புருஷதத்வமே மிகவுயர்ந்தது. ஆதலின், அந்தப் புருஷ தத்வம் ரூபமும், தோஷமுமற்றது. அவன் அம்ருதமானவன். அவனை அறிந்தவன், மரணத்தை-ஸம்ஸாரத்தைக் கடக்கிறான் என்று புருஷனையறிவதைவிட வேறு முக்திக்கான உபாயமில்லை யென்று உபஸம்ஹரிக்கப்படுகிறது. ச்ருத்யந்தரங்கள் இந்த அர்த்தத்தையே கூறுகின்றன.

## 345 (ஸூ) அனேன ஸர்வகதத்வம் ஆயாம சப்தாதிப்ய: [36]

***அனேன***; இந்தப்ரஹ்மத்தால், ***ஸர்வகதத்வம்***; ஜகத்தெங்கும் வ்யாபித்திருத்தல், ***ஆயாம சப்தாதிப்ய;*** எங்கும் வ்யாபித்திருப்பதாய்ச் சொல்லும் சப்தங்களால் அறிவிக்கப்படுகிறது. இதனால் இப்ரஹ்மத்தைவிடச் சிறந்தது ஏதுமில்லையென்று நிச்சயிக்கப்படுகிறது. "தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்,'' ''வ்யாப்ய நாராயண: ஸ்தித:'' "நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் முதலிய ஆயாம சப்தங்கள் வ்யாப்தியைக்குறிப்பன. அதனால், யதோவா இமானி முதலியவைகளால் கூறப்படும் ஜகந்நிமித்தோபாதான பூதமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான தத்வம் கிடையாதென்று ஸித்தம்.

## 82 பலாதிகரணம்

## 347 (ஸூ) பலமத உபபத்தே: [37]

பரத்வமும், பலப்ரதத்வமும் உபாஸிப்பதற்குத் தேவையான குணங்களாக உலகில் கண்டிருக்கிறோமாதலால், பின்னால் சொல்லவிருக்கும் உபாஸ்யத்வத்தின் ஸித்திக்காக முன் பரத்வம் சொல்லப்பட்டது. இவ்வதிகரணத்தில பலப்ரதன என்ற முறையில் ஔதார்யம் கூறப்படுகிறது.

வேதங்களில் கூறப்பட்ட யாகாதிகளும், அபூர்வத்தின் மூலமாக பலத்தை தருகின்றனவா? அல்லது அந்தந்த ஆராதனாதிகளாலே ப்ரீதனான பரமபுருஷன்தான் பலமளிப்பவனா? என்று சம்சயம். கர்மமே பலன்தருவது என்று பூர்வபக்ஷம். உலகில் விவசாயம் போன்ற வேலைகள் தாமே பயனைத் தருவது கண்கூடு. வேதத்திலும் ஸ்வர்க்கம், வேண்டுபவன் யாகம் செய்க, ஆத்மாவையே உலகமாக உபாஸிக்கவும், என்று விரும்புபவர்களுக்குச் செய்யவேண்டியவையாக விதிக்கப்பட்டும், அந்தந்த பலங்களுக்கும் சாதனமாகவும் கூறப்பட்டுள்ள கர்மாக்கள் க்ஷணிகமாயிருந்தாலும், அபூர்வத்தை இடையில் கொண்டு போகாபவர்க்க ரூபபலங்களைக் கொடுக்கின்றன. இந்த பூர்வபக்ஷத்திற்கான ஸித்தாந்தத்தை முதலில் கூறுகிறார்.

பல அத: உபபத்தே: இந்த பரமபுருஷனிடமிருந்தே செய்யும் அனைத்து கர்மாக்களுக்கும் பலன் ஏற்படுகிறது. கர்மம் க்ஷணிகமாதலின், பிற்காலத்திய பலத்துக்கு ஹேதுவாகாது. பரமபுருஷனே ஸர்வக்ஞத்வமும் ஸர்வசக்தியு-முடையவன், காருண்யம் ஔதார்யம், கொண்டவன், ஆதியும், அந்தமுமில்லாதவன். ஆதலின், தன் ஆராதன ரூபமான கர்மத்தால் ப்ரீதனாகி பலன் தருகிறான் என்பது யுக்திக்குப் பொருந்துவது.

## 348 (ஸூ) ச்ருதத்வாச்ச [38]

ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மான்னாதோ வஸுதாந: ஏஷஹ்யேவாநந்தயாதி என்னும் ச்ருதிகளால் போகாபவர்க பலங்களை இவனே கொடுக்கிறான். என்று சொல்லப்படுவதால். முன்ஸூத்ரத்தில் அசேதனமான கர்மத்திற்கு பலப்ரதத்வம் கூடாதாதலின் பகவானுக்குப் பலப்ரதத்வம் கூறப்பட்டது. இந்த ஸூத்ரத்தில் பலப்ரதத்வம் வெளிப்படையாகக் கூறப்படுகிறது.

இங்கு பூர்வபக்ஷத்தைக் காட்டுகிறார்

## 349 (ஸூ) தர்மம் ஜைமினிரத ஏவ [39]

யாகம், உபாஸன ரூபமான கர்மமே பலப்ரதம் என்று ஜைமினிமஹர்ஷி கூறுகிறார். அதஏவ= அதற்குகற்பமேவ ச்ருத்யுப பத்திகளுமுள்ளன என்கிறார் இவை முன்னரே காட்டப்பட்டன

## 350 (ஸூ) பூர்வந்து பாதராயணோ ஹேதுவ்யபதேசாத் [40]

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குகிறது. பூர்வம் து பரமபுருஷனுக்கே பலப்ரதத்வம் உறுதியானது என்பதாக முன கூறியதே சரி என்று வ்யாஸர் கருதுகிறார். ஏனெனில், ஹேதுவ்யபதேசாத் யஜேத என்ற இடங்களில் ' யஜ தேவபூஜாயாம் என்ற தாதுவினால் பகவதாராதனமேயாக மெனப்படுவதா-லும் ஐச்வர்யகாமன் வாயுதேவதாகமான யஜுத்தைச் செய்க என்று வாயுரூபமான பரமாத்மாவிற்கே, பூஜையாகச் சொல்வதாலும். பரமாத்மாவே பலப்ரதன் என்று அவரது கருத்து. அவன் வாயு முதலிய ரூபத்தில் நின்று பலன் தருவது எங்ஙனமென்றால், இஷ்டாபூர்த்தம் பஹுதா ஜாதம் ஜாயமாநம். விச்வம்பிபர்த்தி புவநஸ்யநாபி: தமேவாக்நிஸ் தத்வாயு: தத்ஸூர்ய: தது சந்த்ரமா: என்றும் ஸதயாச்ரத்தயா யுக்த: தஸ்யாராதன மீஹதே லபதேச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான். அஹம் ஹி ஸர்வய-ஜ்ஞானாம் போக்தாச ப்ரபு ரேவச என்னும பலச்ருதி ஸ்ம்ருதிகளால் பரமபுருஷனை காயங்களாலும், உபாஸனங்களாலும ஆராதிதனாகி நேராகவும்,

அக்னிவாயு முதலிய தேவதைகளின் மூலமாகவும் பலப்ரதனைகிறனென்று சித்திக்கிறது. இத்தைவிட்டு அபூர்வம் பலனைத்தருவதென்றால் ச்ருதியில் கூறியதைவிட்டுக் கூறாததைக் கல்பனை செய்தல் என்ற குற்றம் வரும். விதி வாக்யத்தில் அபேக்ஷிக்கும் பல சாதனம் யார் என்பது "ஸ ஏவைனம் பூதிம் கமயதி" என்பது போன்ற வாக்யசேஷத்தால் அறியப்படும் விஷயத்தில் அபூர்வம் பல சாதனம் என்று கூறுவது நியாயம்கூடியதல்ல. ராத்ரி ஸத்ரம் முதலியவற்றில் வாக்யசேஷத்தால் தக்க அதிகாரி கிடைக்கும்போது எப்படி அவரைக் கல்பிக்கவில்லையோ அப்படியே யென்று கருத்து. யாக தானாதி-களால் பகவத் ப்ரீதியே ஸாதிக்கப்படுகிறது. அதுவே தர்மமெனப்படுவது. ஆராதிக்கப்படும் இந்த்ராதி தேவர் இல்லாத போதும் பலன்தர ப்ரஹ்மம் உள்ளது. இங்கு நம் ஆசார்யர்கள் அருளுவது.

ஸர்வஜ்ஞனை பகவானிடம் யாசித்தல், விண்ணப்பித்தல் முதலிய வற்றால் அந்தந்த மனோரதத்தைப் பூர்த்தி செய்து தரவேண்டுமென்ற ப்ரீதியே நம்மால் பகவானிடம் சாதிக்கப்படுகிறதென்றும் தத்வமறிந்தவர்கட்கு விதியினைக் காட்டப்பட்ட அபூர்வமான அந்த பகவானே ஆராதிக்கப்படும் இந்திராதிகள் மறைந்தாலும் பலமளிக்கக் காத்திருக்கிறான் என்றும் தாத்பர் யமாம்.

அடுத்த பாதத்தில் வித்யா பேதங்களில் வெவ்வேறான குணங்களைக் காட்டப்போகிறார் - அதன்முன் இந்த பாதத்தில் கூறியவற்றைச் சுருக்கிக் காட்டுகிறார் - ஸ்வாமி தேசிகன்.

1. ஸந்த்யாதிகரணத்தில் சர்வேச்வரனே ஸ்வப்ன பதார்த்தங்களைப் படைப்பவனென்றார்.
2. ததபாவாதிகரணத்தில் - அவனே ஸுஷுப்திதசையிலும் ஆதார-மென்றார்.
3. கர்மானுஸ்ம்ருதி அதிகரணத்தில் உறங்கி விழிப்பவனுமவனே யென்றார்.
4. முக்தாதிகரணத்தில் மூர்ச்சையயடைந்தவனை யெழுப்புபவ னென்றும் சில சமயங்களில் மரணத்திற்கும் காரணமென்றும் கூறினார்.
5. உபயலிங்காதிகரணத்தில் நிர்த்தோஷன் கல்யாண குணாகர னென்கிறார்.
6. அஹிகுண்டலாதிகரணத்தில் தனி சரீரமான அசித்துக்களை அம்சமாகக் கொண்டவன் என்றார்.

7. பராதிகரணத்திலெல்லாவற்றையும்விட இவனே சிறந்தவனென்றார்.

8. பலாதிகரணத்தில் ஸர்வகர்ம உபாஸனங்களுக்கும் இவனே பலப்ரதன் என்றருளினர்.

இந்த குணங்களைக் கூறியது ப்ரஹ்ம வித்யாரூபத்தில் பக்தி ஸித்திப்பதற்காக; யதார்த்தமான குணங்களைக்கொண்டு எம்பெருமானை உபாஸிக்கையில் ரூப பேதங்கள் சொல்லவேண்டியிருப்பதால் அவற்றைப் பிற மதத்தவர்போல் வ்யாவஹாரிகங்கள் என்று சொல்வது பொருந்தாதென்பது ஸூத்ரகாரரின் திருவுள்ளம்.

மூன்றும் அத்யாயம் இரண்டாம் பாதம் முற்றியது.

## மூன்றும் அத்தியாயம்—மூன்றும் பாதம்

## 83 ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம் 1

இதுவரை பத்து பாதங்களாலே மோக்ஷத்திற்கான தத்வஜ்ஞானம் உறுதி செய்யப்பட்டது. மேல்வரும் ஆறு பாதங்களாலே பரப்ரஹ்ம ப்ராப்தி என்னும் பலத்துடன் அதற்கு ஹேதுவான உபாஸனம் விளக்கப்படவிருக்கிறது.

ப்ரஹ்மோபாஸனத்தில் இச்சை ஏற்பட, ப்ரஹ்மமே பலந்தருவது என்பதுவரை கூறப்பட்டது. இப்போது அந்த உபாஸன விஷயத்தில் ஓரிடத்தில் கூறப்பட்ட குணவிசேஷங்களை மற்றோர் வித்யையிலும் அனுஸந்தானம் செய்ய ஏற்றுக்கொள்வதாகிற குணோபஸம்ஹாரத்தையும், கூறப்பட்ட குணங்களை அதே வித்யையில் மட்டும் அனுஸந்தானம் செய்வது என்னும் விகல்பத்தையும் தீர்மானிக்க, பேதாபேத சிந்தை செய்யப்படுகிறது. வித்யைகள், ஒன்றுக்கொன்று வேறுபடாதவையென்றால் குணங்களை உபஸம்ஹாரம் செய்யலாம். வித்யைகளுக்குள் பேதமுண்டெனில் விகல்பம் தான் என்று கருத்து. இந்த பேதாபேதங்கள் இப்பாதத்தில் ஒத்தவையல்ல. ஆயினும், அவை குணோபஸம்ஹாரத்திற்கு நிமித்தங்களே. இந்தப் பாதத்தில் குணோபஸம்ஹாரம் உண்டா இல்லையா என்பதை விசாரிக்கப்படுவதால் குணோபஸம்ஹாரபாதம் எனப்படுகிறது.

## 351 (ஸூ) ஸர்வவேதாந்தப்ரத்யயம் சோதநாத்யவிசேஷாத் [1]

ஸர்வவேதாந்தங்களிலும் சொல்லப்பட்ட தஹரவித்யை ஒன்றா வேறானதா என்று சம்சயம்.

ஸமிதோ யஜதி - தனூனபாதம் யஜதி என்றதுபோல் விசேஷமின்றி மறுபடியும் ஒரே சொல் வருவதும், ப்ரகரணம் மாறுவதும், பேதத்திற்கு ஹேதுவென்று பூர்வமீமாம்ஸையில் கூறப்பட்டுள்ளது. ஆதலின், தஹர-வித்யை வெவ்வேறுதான் என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸனம் செய்கிறார்.

*ஸர்வவேதாந்த ப்ரத்யயம்:* எல்லா வேதாந்தங்களிலும் விளக்கப்படும் உபாஸனம் ஒன்றே. ஏனெனில், *சோதனாத்யவிசேஷாத்*=விதிவாக்யம், பலஸம்யோகம் உபாஸன விஷய குணங்களென்னும் ரூபங்கள் கர்மாவின் பெயர் இவற்றில் பேதமில்லாமையால் என்றவாறு. விசேஷம் இன்றி மறுபடி ச்ரவணம் என்பதும்-ப்ரகரணபேதமும்-அதைப்பற்றிய ப்ரதிபத்தி (ஜ்ஞானம்) வேறுபடாமையால் பயன்பட்டுவிடுகின்றனவாதலின், அவை வித்யையை பின்னமாக்கா. மீமாம்ஸையில் சாகாந்தராதிகரணத்தில் ஐக்கிய ஹேது வாகக் கூறப்பட்ட விதி முதலியவைகள் இங்கும் பயன்படுபவையாதலின், வித்யைகளுள் அபேதம் ஸித்தமாகிறது என்று கருத்து.

## 352 (ஸூ) பேதாந்நேதிசேத்தேகஸ்யாமபி [2]

விசேஷமின்றி புந: ச்ரவணம் அர்த்தமுள்ளதாதலின், வித்யா பேதத்தினை அது ஸ்தாபிக்காது.

ஆதர்வணிகர்களுக்கு சிரோவ்ரதம் வித்யோபதேசத்தில் நியதமான அங்கம் என்று நிச்சயிப்பதால் மற்றவர்களுக்கு அதில்லையென்னும் அர்த்தத்தால் வித்யை பின்னை (வேறானது) தான், வித்யை ஒன்றேயென்றால், சிரோவ்ரதம் ஆதர்வணிகர்களுக்கேயென்னும் நியமம் இல்லாது போகட்டும் என்பது சங்கை-இதற்கு உத்தரம் கூறுகிறார்.

## 353 (ஸூ) ஸ்வாத்யாயஸ்ய ததாத்வேஹி ஸமாசாரேऽதிகாராச்சஸவவச்ச தந்நியம: [3]

சிரோவ்ரதம் வித்யைக்கு அங்கமல்ல: *ஸ்வாத்யாயஸ்ய ததாத்வேஹி:* வேதத்திற்கு-அதனால் ஸம்ஸ்கார்யத்வம் உண்டாவதற்காக. *தந்நியம:* சிரோவ்ரதம் உபதேசிக்கவேண்டிய நியமம். அது வித்யைக்கு அங்கமல்ல; ஏனெனில், நைதத் அசீர்ணவ்ரதோऽதீயீத என்று அத்யயனஸம்பந்தமே யிதற்குண்டு. *ஸமாசாரேऽதிகாராச்ச* - ஸமாசாரம் என்னும் க்ரந்தத்தில் வேதவ்ரதம் என்று கூறியிருப்பதால் தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் என்றவிடத்தில் வேதவித்யை என்று பொருள். *ஸவவச்சதந்நியம:* ஸப்த-ஸூர்யாதிகளாய் சதௌதனம் வரையான பல ஸவ ஹோமங்களும் ஆதர்வணிகர்களான ஏகாக்னிகளையே சார்ந்தவையென்று ச்ருதியிலுள்ளது.

அவை அவ்வேதாத்யாயி கவிர பிற வேகத்தைச் சார்ந்தோருக்கில்லை த்ரேதாக்னிகளுக்கல்ல. அப்படியே சிரோவ்ரதமும் ஆதர்வணிகர்கட்கு அங்கமென்று தீர்மானிக்கப்படுகிறது.

## 354 (ஸூ) தர்சயதிச [4]

ச்ருதியானது, 'உபாஸனம் ஸர்வவேதாந்தங்களிலும் விதிக்கப்படுகிறது' எனக் காட்டுகிறது. சாந்தோக்யத்தில் தஹரவித்யையில் தஸ்மின்யதந்த: ததன்வேஷ்டவ்யம் என்று பொதுவாகச் சொல்லி ப்ரச்னத்துடன் விசேஷமாக அன்வேஷ்டவ்யம் (தேடத்தக்கது) என்று சொன்ன அபஹத பாப்மத்வம் முதலிய குணங்கள் தைத்திரீயத்தில் விசேஷியாமல் தஸ்மின்யதந்த: தது பாஸிதவ்யம் என்று மட்டும் கூறப்பட்டது. இரு வித்யைகளும் ஒன்றே-யென்று சொல்லாவிட்டால் முன்சொன்ன சொல் பொருந்தாததாகிவிடும்.

## 355 (ஸூ) உபஸம்ஹாரோऽர்த்தாபேதாத் விதிசேஷவத் ஸமானேச [5]

இப்படி வித்யைக்கு ஐக்கியம் நிலைபெற்றால் கிட்டும் பயனைக் கூறுகிறார். ச என்பது அவதாரணப்பொருளது. ஏவ என்று பொருள் *ஸமானே:* = எல்லா வேதாந்தங்களிலும் தஹராதியுபாஸனம் ஸமானமாக இருக்கும்போது, *உபஸம்ஹார:* = ஒரு வித்யையில் சொன்ன குணங்களுக்கு மறுவித்யையிலும் உபஸம்ஹாரம் (அனுஸந்தானம்) செய்யத்தக்கது. *அர்த்தாபேதாத்;* வித்யையின் அங்கமாகையால் வித்யைக்கு உபகாரம் செய்வதில் ஏதும் பேதமில்லாமையால். *விதிசேஷவத்;* (விதி வித்யை) ஒரு வேதாந்தத்தில் வைச்வானரவித்யைக்கு விசேஷணமாக விதிக்கப்பட்ட குணமானது அந்த வித்யையின் உபகாரத்திற்காக உபஸம்ஹரிக்கப்படுவதுபோல் இவ்வாறே உபஸம்ஹாரம் செய்யவேண்டும் என்பதாம்.

இங்கு இதனையுணரவேண்டும்; ரூப ஐக்கியத்தால் வித்யையில் ஐக்கியம் சொல்லும்போது. எதை உபஸம்ஹாரம் செய்வது? ரூபைக்யத்தைத்தான் என்றால் ரூபைக்யத்தால் வித்யைக்யம், வித்யைக்யத்தால் ரூபைக்யம் என்று அன்யோன்யாச்ரய தோஷம்வரும். ஆகையால், உபஸம்ஹார்யகுணம் எது என்றால், அறியவேண்டிய ஆகாரத்தின் ஐக்கியம் வித்யையில் ஐக்கியத்தைக் குறிக்கிறது. இந்த வேத்யாகார ஐக்கியம் வித்யையில் ஐக்கியத்தைக் குறிக்கிறது. இந்த வேத்யாகார ஐக்கியம் பூர்வமே ஸித்தமாகையால் அது உபஸம்ஹார்யமன்று. அதனால் அன்யோன்யாச்ரயாதிகளில்லை. வேத்யாகார ஐக்கியத்தால்வித்யைக்யம் ஸித்தித்தால் வேத்யாகாரத்தைவிட்டு வேறு ஒரு அங்கம் ஆகர்ஷிக்கப்படுகிறது. அந்த அங்கம் எல்லா இடங்களிலும் ச்ருதமானால் உபஸம்ஹார்யமன்று. சில இடங்களில் மட்டும் ச்ருதமென்றால்

கர்மைக்யத்தாலும் சாகாந்தரத்திலும் உபஸம்ஹறிக்கத்தக்கதென்பது உபஸம்ஹறிக்கத்தக்கதென்பது ஆசார்யர்களின் திருவுள்ளம்.

## 84 அன்யதாத்வாதிகரணம்

இவ்வாறு விதி முதலியவற்றில் பேதமின்மையால் வித்தையின் ஐக்கியம் ஸித்தம். வித்தை ஏகமாகில், குணம் உபஸம்ஹறிக்கதக்கதென்று கூறப்பட்டது. இப்போதுசில வித்தைகளை யுத்தேசித்து ஐக்கிய ஹேதுக்களான விதி முதலியவற்றில் அபேதம் உள்ளதா இல்லையா என்று விசாரிக்கப் படுகிறதென்று ஸங்கதி.

### 356 (ஸூ) அன்யதாத்வம் சப்தாதிதி சேந்நாவிசேஷாத் [26]

இது பூர்வபக்ஷ ஸூத்ரம். *சப்தாத் அன்யதாத்வம்;* அதஹயஏவாயம் என்ற வாக்கியத்தில் ஒரு பக்கம் உத்கீதத்தில் ப்ராணத்ருஷ்டி செய்யவும், மற்றொரு பக்கம் உத்காதாவிடம் ப்ராணதிருஷ்டி செய்யவும் சப்தத்தால் ரூபபேதம் ஏற்படுகிறதேயென்றால்; ***இதி சேந்ந*** - அதல்ல. அவிசேஷாத்-தொடக்கத்தில் இரண்டிடத்திலும் விசேஷமன்றிக்கே உத்கீதத்துக்கே உபாஸ்யத்வம் சொல்லியிருப்பதால் ரூபபேதமில்லை. எனவே வித்யாபேதம் ஸித்தியாது என்று கருத்து. ஆனால் த்வம் ந உத்காயேதி - ததேதி தேப்ய: ப்ராணஉதகாயத் என்று வாக்யத்தால் - உத்காதாவிடம் ப்ராணத்ருஷ்டி ரூபமான வேறுபாடு தோன்றுவதால் அதற்கு என்ன கதியென்றால் உத்கானகர்மாவான உத்கீதத்தில் கர்த்தாவின் தன்மை உபசாரவழக்கால் கூறப்படுகிறது. ஆதலின் அபேதம் ஸித்தம் என்ற பக்ஷத்தை நிரஸிக்கிறார்.

### 357 (ஸூ) நவா ப்ரகரண பேதாத் பரோவரீயஸ்த்வாதிவத் [7]

*நவா* - ரூபைக்யத்தால் வித்யைக்யம் சொன்னது கூடாது. ***ப்ரகரண பேதாத்;*** சாந்தோக்யத்தில் ப்ரணவத்தை உத்கீதாவயவமாக உபாஸிக்க வேண்டும் என்று தொடங்கி. அந்தப்ரணவமே உத்கீதமெனப்படுகிறது என்று கூறுவதாகத்தெரிகிறது.

வாஜஸனேயகத்தில் விசேஷமாக முழு உத்கீதமும் உபாஸ்யமாகத் தொடங்கப்படுகிறது. ஆகவே உத்கீதத்தில் ப்ராணத்ருஷ்டி ஸமமாயிருப்பினும், ரூபபேதத்தால் வித்யாபேதம் ஸித்தம்: *பரோவரீயஸ்த்வாதிவத்;* ஒரே சாகையில் - உத்கீதாவயவமான ப்ரணவத்தில் பரமாத்ம த்ருஷ்டி விதிக்கப் பட்டிருக்கிறது. அது ஸமமாயினும் ஓரிடத்தில் த்ருஷ்டி விசேஷணமான பரமாதமாவிற்கு ஹிரண்யபுருஷத்வம் என்ற ரூபம் விதிக்கப்படுகிறது. மற்றோரிடத்திலோ பரமாத்மாவிற்கு த்ருஷ்டி விசேஷணமாயிருப்பினும்.

பரோவரீயஸ்த்வம் முதலிய குணம் விதிக்கப்படுகிறது. ஆகவே உபாஸிக்கப் படும் ப்ரணவம் ஒன்ருயினும் திருஷ்டி விசேஷணமான பரமாத்மா ஒன்ருயினும் பரமாத்மாவிற்கு இரண்டு வேறு தர்மங்கள் கூறப்பட்டமையால் வித்யாபேதம் ஸித்தித்ததுபோலே இங்கும் கேவலம் ப்ரணவம், பூர்ணமான உத்கீதம் என்று வெவ்வேறு ரூபபேதத்தாலே வித்யை வேறுபட்டதே. ஆனுல் திருஷ்டி விசேஷணமான பரமாத்மாவின் விசேஷணபேதத்தாலே வித்யாபேதம் ஸித்தித்தால் விசேஷ்யமான உத்கீதபேதத்தால் வித்யாபேதம் என்பதில் விவாதமில்லையென்று கருத்து.

பரோவரீயஸ்த்வம் என்பது வரீயஸாம் பரத்வம் - அதாவது உயர்ந்தவர்கட்கெல்லாம் உயர்ந்த தன்மை. இப்படி வித்யாபேதம் ஸித்தித்தால் உபஸம்ஹாரவாக்யத்திலுள்ள கர்மவிஷயமாகவும் கர்த்ருவிஷ்யமாயுமுள்ள ப்ராணத்ருஷ்டி விதி-உள்ளவாறே பொருள் கொள்ளத்தக்கதாம். த்ருஷ்டி விதி என்பது ஒன்றை மற்றென்ருக நினைத்து உபாஸித்தல். மனதை ப்ரஹ்மமாக நினைத்து உபாஸித்தல் போன்றது.

## 358 (ஸூ) ஸம்ஜ்ஞாதச் சேத் தது க்த மஸ்தி து ததபி [28]

ஸம்ஜ்ஞாதச்சேத் - உத்கீதவித்யை என்ற ஒரே பெயர்கொண்டு வித்யைக்யம் சொன்னுல் தத அஸத்து; அந்தப்பெயரொற்றுமை விதேயம் வேருனலும் உள்ளதுதான்; ததுக்தம; நித்யாக்னிஹோத்ரத்திலும், குண்டபாயிகளின் மாஸமாத்ரஹோமாவஸாநிகமான அயனக்னிஹோத்ரத்திலும், பெயரொற்றுமைபோலவும் சாந்தோக்யம் முதல் பிரபாடகத்தில் அநேக வித்யைகளிலூம் உத்கீதம் என்றபெயர் ஒற்றுமை போலவும் இவ்விடமும் பெயரொற்றுமை விதேயம் என்று சாதிக்கவல்ல ஹேதுவாகாது.

## 359 (ஸூ) வ்யாப்தேச்ச ஸமஞ்ஜஸம் [29]

சாந்தோக்யம் முதல் ப்ரபாடகத்தில் முதலிலும் பின்னுலும் உத்கீத வித்யையிலும் உத்கீதசப்தங்கள் ப்ரணவத்தையே குறிப்பதால் ப்ரணவத்திற்கே உபாஸ்யத்வம் வ்யாப்தமாயிருப்பதுபோல், இடையில் ''தம் தேவா உத்கீதமாஜஹ்ரு: என்றதிலும் உத்கீதசப்தத்திற்கு ப்ரணவம் என்ற பொருளே பொருத்தமானது. இடையில் உத்கீத சப்தத்திற்கு முழு உத்கீதம் என்ற பொருளைக்கூறி ப்ரகரணத்தைப் பிளந்து வித்யைக்யம் சொல்ல வழியில்லை.

இது குணேப ஸம்ஹாரபாதமாகையால் ப்ரஹ்ம விதியே சிந்திக்கத் தக்கது. அதைவிட்டு இடையில் பரமதகண்டனரூப காம்யபலமாக அப்ரஹ்ம

விதியான உத்கீதவிதியைப்பற்றி நிரூபித்தல் பொருந்தாது என்ற ஆக்ஷேபத்திற்கு ஆசார்யர் அருளிய பரிஹாரம்:-

1. உத்கீதாதிகளில் உபாஸனம் ப்ரஹ்மத்ருஷ்டி ரூபம் ஆகையால் ப்ரஹ்ம ஜ்ஞானத்தையபேக்ஷிப்பதால் இந்த பாதத்திலே பொருந்தும்.

2. வித்யாங்கமான கர்மாக்களுக்கு வீர்யவத்தரத்வத்தை ஏற்படுத்துவதாலும் இங்கு விசேஷமாக விசாரிக்கத்தக்கதாம். ஆகவேயிங்கு உத்கீத வித்யா நிருபணம் பொருத்தமானதே.

## 85 ஸர்வாபேதாதிகரணம்

### 360 (ஸூ) ஸர்வாபேதாத்ந்யத்ரேமே

***அன்யத்ர*** = கௌஷீதகீ ப்ராணவித்யையில், இமே-வஸிஷ்டத்வம் முதலிய குணங்கள் உள்ளவையே. ஏனெனில், *ஸர்வாபேதாத*-ப்ராணனுக்கு ஸர்வமான ஜ்யேஷ்டத்வம், ச்ரேஷ்டத்வம் இவற்றை விளக்கும் முறை வேறுபாட்டால் என்றபடி, வாக்முதலியவற்றின் ஸ்திதி கார்யங்களிரண்டும் ப்ராணனுக்கு அதீனமானவையாதலால், ப்ராணனுக்கு ஜ்யேஷ்டத்வமும், ச்ரேஷ்டத்வமும் விளக்கப்பட்டன. ஆகையால், வாக்கு முதலியவற்றைச் சார்ந்த கார்யசாமர்த்ய ரூபமான வஸிஷ்டத்வம் முதலியவற்றைச் சார்ந்த கார்யசாமர்த்ய ரூபமான வஸிஷ்டத்வம் முதலியவற்றின் ஸம்பந்தமும் இங்கும் சொன்னது போன்றதேயென்று வித்யைக்யம் ஸித்தமாயிற்று.

## 86 ஆனந்தாத்யதிகரணம்

### 361 (ஸூ) ஆநந்தாதய: ப்ரதானஸ்ய

முன், மூன்று அதிகரணங்களில் வித்யாபேத-அபேத சிந்தை செய்யப்பட்டது. முதல் அதிகரணததில் வைச்வாநரவித்யையில் வாயு: ப்ராண: என்று வாயு பரமாத்மாவின் ப்ராணனாகத்யானிக்கத்தக்கவன் எனப்பட்டான். இரண்டாவதில், உத்கீதவித்யையில் த்ருஷ்டி விசேஷணமாக ப்ராணன் பேசப்பட்டான். மூன்றுவதில் ப்ராணனே நிருபிக்கப்பட்டால், ஆக மூன்றதிகரணங்களும் மிகக சம்பந்தமுள்ளவை. மேலும் ப்ராண வித்யாதிகரணததில் ஜ்யேஷ்டத்வம் ச்ரேஷ்டத்வம் என்ற குணங்களைக் கூறியதிலேயே யடங்கிவிட்ட வசிஷ்டத்வாதி குணங்களும் அனுசந்திக்கத்தக்கவை என்றாற்போலவே, ப்ரஹ்மம் ஸர்வ வித்யைகளாலும் அறியத்தக்கதாதலின், அவனது ஸ்வரூபநிரூபக தர்மங்களான ஆநந்தாதிகளுக்கும் ப்ரஹ்ம ஸ்வரூப நிருபணாந்தர்ப்பாவத்தால் அனுஸந்தேயத்வம் இங்கு சொல்லப்படுகிறதென்று சங்கதி.

ஜ்ஞானாநந்த அமலாநந்தத்வரூபங்களான ஸ்வரூப நிரூபக தர்மங்கள் ஸர்வ பரவித்யைகளிலும் உபஸம்ஹரிக்கத்தக்கவையா இல்லையா என்று சம்சயம். ஒருபரகரணத்திலுள்ள குணங்களை வேறு ப்ரகரணத்தில் உபஸம்ஹரிக்கையில் ப்ரமாணமில்லாமையால் உபஸம்ஹரார்யங்களன்று என்று பூர்வபக்ஷம். அதை நிரஸிக்கிறார்.

## ஆனந்தாதய: ப்ரதானஸ்ய

ஸர்வாபேதாத் என்ற ஸூத்ரத்திலிருந்து அபேதாத் என்பது இங்கு அனுவர்த்திக்கிறது. ஆநந்தாதிகுணங்கள் எல்லாப் பரவித்யைகளிலும உபஸம்ஹரிக்கத்தக்கவை. அபேதாத்: பரதானதனியான ப்ரஹ்மத்துக்கு ஸர்வ வித்யைகளிலும் அபேதத்தால்: பாவித்யைகள் அனைத்திலும் ப்ரஹ்ம ஸ்வரூபானுஸந்தானத்திற்கு இன்றியமையாத குணங்கள்-ஆனந்தாதிகள் அனுஸந்திக்கக்கூடியவையென்பதாய் இதனால் ப்ரஹ்மகுணங்கள் அனந்தமாயிருப்பினும் உபஸம்ஹரிக்கக்கூடியவையே என்று கருத்து.

## 362 (ஸூ) ப்ரியசிரஸ்த்வாத்யப்ராப்தி: உபசயாபசயௌஹி பேதே

ப்ரஹ்மஸ்வரூப குணங்களுக்கே உபஸம்ஹாரம் ப்ராப்தமென்றால் ப்ரியசிரஸ்த்வம் முதலிய தன்மைகள் கிட்டாமல் போகும். தஸ்ய ப்ரியமேவ சிர: என்று கூறப்பட்டது. ப்ரியமே சிரஸ் என்பது போன்றவைகள் அவை ப்ரஹ்மத்தின் குணங்களல்லாமையாலும், புருஷன் போன்றதாக ரூபகம் செய்வதில் அடங்கியதாலும் என்றபடி. பேதே = சிரஸ், பக்ஷம் முதலிய அவயவபேதத்தை ஒப்புக்கொண்டால், உபசயாபசயௌஹி = ப்ரஹ்மத்திற்கு-வளர்ச்சி, தளர்ச்சி எல்லாம் ஏற்படும். அதனால், ஸத்யம் ஜ்ஞானம் ஆனந்தம், அஜரம் என்னும் ச்ருதியுடன் ஸம்ரோதம் வரும் என்பதாம்.

ப்ரியசிரஸ்த்வாதிகளைவிட ஆனந்தாதிகளுக்கு விசேஷத்தைச் சாதிக்கிறார்.

## 363 (ஸூ) இதரேத்வர்த்த ஸாமான்யாத்

துசப்தம் சங்கையை விலக்குவது. இதரே = ஆநந்தாதிகள் அர்த்த ஸாமான்யாத ப்ரஹ்மம் என்னும் அர்த்தத்தின் ஸ்வரூப நிரூபகதர்மங்கள் ஆதலால், அனுவர்த்தந்தே (வருவித்துக்கொள்ளும் சொல் இது) விசேஷண-மாக அனுவர்த்திக்கின்றன தர்மியானப்ரஹ்மம் தோன்றும் போதெல்லாம் தாமும் அவசியம் தோன்றக்கூடியவை. ப்ரிய சிரஸ்த்வம் முதலியவையோ ப்ரஹ்மஸ்வரூப நிரூபக தர்மங்களல்ல என்று கருத்து.

இங்கு ஓர் விசேஷம்.

ஜகத் காரணத்வம் என்பது உபலக்ஷணம் என்றும் விசேஷண மென்றும் ஏற்கப்பட்டுள்ளது. ப்ரக்ருதி புருஷ கால விசிஷ்டமான ப்ரஹ்மத்துக்கு காரணத்வம் லக்ஷணம். இதில் விசேஷ்யாம்சத்துக்கு லக்ஷணம் ஆனந்தாதிகள். அதில் விசேஷ்யத்தை அனுஸந்திக்கையில் காரணத்வத்திற்கு அன்வயமில்லாமையால் அது உபலக்ஷணமெனப் படுகிறது. ஜ்ஞாப்யாந்தர்பூதவேஸதி ஜ்ஞாப்யப்ரதீபக்யுபாயத்வம் உப லக்ஷணத்வம். ப்ரஹ்மம் ஜகக்காரணமாக உபலக்ஷிதமென்று ஸ்ரீபாஷ்யத்தில் அருளப்பட்டது; ஆனந்தாதிகளும் ப்ரஹ்மத்திற்கு மற்றோர் லக்ஷணம் என்று கருத்து.

ப்ரியசிரஸ்த்வாதிகள் ஸ்வரூப தர்மங்களல்லவென்றால், அவை எதற்காகக் கூறப்படுகின்றனவென்ற சங்கையைப் பரிஹரிக்கிறார்.

## 364 (ஸூ) ஆத்யாநாய ப்ரயோஜநாபாவாத்

ப்ரயோஜநாந்தரம் இல்லாததால் அநுசிந்தனத்திற்கு இவ்வாறு ரூபகம் செய்யப்பட்டது என்பதாம் - "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" என்று அறிய-வேண்டுமவனைக் குறிப்பிடப்பட்ட ப்ரஹ்மம் ஆனந்தமயமானது. அதைப்ரியம் மோதம் முதலிய ரூபமாகப் பிரித்து தலை சிறகு - வால் என்றெல்லாம் ரூபகம் செய்தது புத்தியில் நிலைபெறச் செய்வதற்காக என்று தாத்பர்யம்.

## 365 (ஸூ) ஆத்மசப்தாச்ச

அன்யோந்தர ஆத்மா ஆநந்தமய: என்று ஆத்மசப்தம் ச்ருதமாகை யாலும் ப்ரிய சிரஸ்த்வம் முதலியன ப்ரஹ்மஸ்வரூபதர்மங்களல்ல; சிரஸ், பக்ஷம், புச்சம் என்பனவும் ஆத்மதர்மங்களல்ல.

## 366 (ஸூ) ஆத்மக்ருஹீதிரிதரவத் உத்தராத்

அன்யோऽந்தர ஆத்மா என்று ஆத்மசப்தத்தால் பரமாத்மாவுக்கே-கிரகணம் கூடும். இதரவத் = ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத் என்று ச்ருதி யிலுள்ள ஆத்ம சப்தம் எப்படி பரமாத்மாவை க்ரஹிக்கிறதோ அவ்வாறு. உத்தராத் = ஸோऽகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய" முதலிய வாக்யத்தால் என்றபடி.

## 367 (ஸூ) அந்வயாதிதிசேத்ஸ்யாத் அவதாரணாத்

அந்வயாத் = முன்னுள்ள அந்யோऽந்தர ஆத்மாப்ராணமய: என்னும் வாக்கியத்தால் சித்தமான அநாத்மக்களில் ஆத்மசப்தத்திற்கு அன்வயமும் காணப்படுவதால் பின்வாக்யத்தால் எப்படி தீர்மானம் பிறக்கும்? என்றால்

*அவதாரணுத்* தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸம்பூத: என்று ப்ரக்ருதமான ஆத்மாவுக்கே ப்ராணமயனைத் தொடங்கி ஆனந்தமயன்வரை குறிப்பிட்ட ஆத்ம சப்தத்தால் க்ரஹணம் நிச்சயிக்கப்படுவதால் என்றவாறு ஸ்யாத் முன்கூறியபடியே தீர்மானம் ஆகக்கூடும். ஆகையால் ப்ரியசிரஸ் முதலி-யவை ஆத்ம தர்மமல்லவாயினும் ஜ்ஞானம் ஆனந்தம் முதலியவை ஆத்மா வின் தர்மங்களாதலாலும் அவையேப்ரஹ்மஸ்வரூப நிரூபகங்களாகையாலும் ஆநந்தாதிகளுக்கே எங்கும் உபஸம்ஹரிக்கின்ற தன்மை ஆகலாம்.

## 87 கார்யாக்யாநாதிகரணம்

### 368 (ஸூ) கார்யாக்யாநாதபூர்வம்

சாந்தோக்ய வாஜஸனேயங்களில் ஜ்யேஷ்டஞ்ச ச்ரேஷ்டஞ்ச என்று ப்ராணோபாஸனத்தை விதித்து ஸஹோவாச கிம் மே வாஸோ பவிஷ்யதீதி ஆப இதிஹோவாச: என்று அப்புகளுக்கு ப்ராணவாஸஸ்த்வம் கூறி ஆசமனத்தால் ப்ராணனை நிர்வாணமின்றி வஸ்த்ரம் உள்ளதாக்குகிறான் என்கின்றன. போஜனத்தின் முன்னும் பின்னும் ஆசமனம் ப்ராணவித்யைக்கு அங்கமாக விதிக்கப்படுகிறதா அல்லது ஆசமனம் செய்யும் அப்பு ப்ராணங்களுக்கு வஸ்த்ரமாகும் என்ற அநுஸந்தானம் விதிக்கப்படுகிறதா என்று சம்சயம். அசாமேத் என்ற விதிப்ரத்யயத்தாலும், ஸ்ம்ருதி ஆசாரப்-ராப்தமான ஆசமனத்தைக் காட்டிலும் ஆசமனத்தின்பின் ப்ராணவித்யைக்கு அது அங்கமாக விதிக்கப்படுகிறது என்று பூர்வபக்ஷம். இதனை நிராகரிக்கிறார்.

### (ஸூ) கார்யாக்யாநாதபூர்வம்

*அபூர்வம்*: முன் ப்ராப்தமில்லாதது; ப்ராணனுக்கு வஸ்த்ரம் என்ற அநுஸந்தானமேயிங்கு விதிக்கப்படுகிறது. ஆசமனம் ப்ரமாணாந்தரப்ராப்த-மாதலின், அது விதிக்கப்படுவதில்லை. *கார்யாக்யாநாத்*=சாஸ்த்ரம் புதியதையே வேறுவகையில் கிடைக்காததையே விதிக்கும். அப்பு ப்ராணனின் வஸ்த்ரம் என்று முன்பின் ஆசமனங்களால் அநுஸந்தானமே அப்ராப்தமாதலின் விதிக்கப்படுகிறது. ஆசமனம் ப்ராப்தமாதலின், அது விதிக்கப்படுவதில்லை.

## 88 ஸமாநாதிகரணம்

### 369 (ஸூ) ஸமான ஏவஞ்சா பேதாத்

முன் அதிகரணம் ப்ராணவித்யா சேஷமாக ப்ரஸங்க ஸங்கதியால் வந்தது. அதற்குமுன் ஸ்வரூபப்ரதீதியில் உள்ளடங்கியமையால் உபஸம் ஹார்யங்கள் எனப்பட்டது. இவ்வதிகரணத்தில் ஸத்ய, ஸங்கல்பத்வத்தில்

அடங்கிய வசித்வம் முதலிய குணங்கள் உபஸம்ஹார்யங்கள் எனப்படுகிறது. என்று ஸங்கதி.

வாஜஸனேயகம் அக்னிரஹஸ்யத்திலும், ப்ருஹதாரண்யகத்திலும் சாண்டில்ய வித்யை சொல்லப்படுகிறது. அக்னிரஹஸ்யத்தில் மனோமயனைப் ப்ராணசரீரனைப் பாரூபனைப் ஸத்ய ஸங்கல்பனைப் ஆகாசாத்மாவான ஆத்மாவை உபாஸிக்குமாறு விதிக்கப்படுகிறது.

ப்ருஹதாரண்யகத்திலோ - மனோமயனை இந்தப் புருஷன் பாரூபன், ஸத்யன், அவன் ஹ்ருதயத்திற்குள்ளே நெல்போல் சாமைபோல் எல்லோருக்கும் தலைவனாய் (அதிபதியாய்) உலகனைத்தையும் ஆளுகிறான் என்று கூறுகிறது. இவ்விரண்டிலும் வித்யாபேதம் உள்ளதா இல்லையா என்று சம்சயம். ஓரிடத்தில் ஸத்ய ஸங்கல்பத்வம் அதிகமாயுள்ளது. மற்றொன்றில் வசித்வம் முதலியன. ஆகையால் ரூபம் வெவ்வேறாதலின், வித்யை பின்னமானது என்று பூர்வபக்ஷம். அதை நிரஸிக்கிறார்.

ஸமானே = மனோமயத்வாதிகள் ஸமானமாகையாலும், வசித்வாதிகளும் ஸத்ய ஸங்கல்பத்தின் விஸ்தார ரூபமாகலாலும் அபேதம் ஸித்தம் அத்தால் ரூபபேதமில்லாமையால் வித்யைக்யம் ஸித்தமாம்.

## 89 ஸம்பந்தாதிகரணம்

### 370 (ஸூ) ஸம்பந்ததேவமந்யத்ராபி

சாண்டில்யவித்யையில் மனோமயத்வாதி குணமுள்ளவனுக்கே உபாஸ்யத்வேன வித்யைக்யம் கூறப்பட்டதேபோல், அக்ஷி (கண்) ஆதித்யன் என்ற இரு இடங்களிலும் ஸம்பந்தியாக வ்யாஹ்ருதி சரீரகனை பரமாத்மாவே உபாஸ்யனாகையால் வித்யைக்யம் என்று பூர்வபக்ஷம்.

ப்ருஹதாரண்யகத்தில் ஆதித்யமண்டலத்திலும் அக்ஷியிலும் ஸத்யமென்றும் ப்ரஹ்மத்திற்கு வ்யாஹ்ருதி சரீரகம் என்ற வகையில் உபாஸ்யத்வம் கூறி அஹ: அஹம் என்று இரண்டு ரஹஸ்யமான பெயர்களைச் சொல்லி, உபாஸனத்திற்கு அங்கமாகக் கூறப்பட்டன. அவை படித்த இடத்திற்கு மட்டும் உரியவையா? இரண்டிடங்களுக்கும் உரியவையா என்று சம்சயம். இரண்டிடங்களிலும் வ்யாஹ்ருதி சரீரகனை ப்ரஹ்மமே உபாஸ்யமாதலின், வித்யைக்யம் சித்தம், நாமங்கள் நியதமல்லாதவையென்று பூர்வ பக்ஷம்.

அந்த பூர்வபக்ஷமே இந்த ஸூத்ரம்

## 371 ஸம்பந்தாதேவமந்யத்ராபி

இரண்டிடங்களிலும் **சாண்டில்ய வித்யையில்** மனோமயத்வாதி குணகனான உபாஸ்யன் ஒருவனேயாதலால் வித்யைக்யம் சொல்லப்பட்டதே போல் *அந்யத்ராபி* = அக்ஷி ஆதித்யாதாரகனுமிருந்தாலும் ஒரே ஸத்யமான ப்ரஹ்மத்திற்கு ஸம்பந்தமுள்ளபடியால் ஸ்தானத்வயத்தால் ரூபபேதம் இல்லாமையால் வித்யை ஒன்றேயாதலின், இரண்டு பெயர்கள் நியதங்கள் என்ற இந்த பூர்வபக்ஷத்தை நிரஸனம் செய்கிறார்.

## 372 (ஸூ) ந வா விசேஷாத்

**வித்யைக்யத்தால் இரண்டிடத்திலும் இரண்டு** பெயர்கள் வரலாம். என்று கூறியது தவறு. *விசேஷாச்* = இரண்டிடங்களிலும் ரூபம் **விசேஷித்துக் கூறப்படுகிறது.** அனுஸந்தானம் செய்ய வேண்டிய ஸத்ய ப்ரஹ்மம் ஒன்றேயானாலும், இரண்டு ஸ்தானங்களில் ஸம்பந்தம் என்ற வேத்யாகாரத்தின் பேதத்தால் வித்யை வெவ்வேறானபடியால் எந்த நாமம் எங்கு ச்ருதமோ அங்கேயே அது நியதமாகுமாம்.

## 373 (ஸூ) தர்சயதி ச

ச்ருதியே வித்யாபேதமிருந்தால் குணம் உபஸம்ஹரிக்கவேண்டிய-தில்லையென்பதை தஸ்யைதஸ்ய ததேவரூபம் யதமுஷ்யரூபம் முதலியவாக்யங்களாலே ரூபாதிகளை அதிதேசம் செய்துகாட்டுகிறது. எப்படியென்றால் ரூபைக்யம் கொண்டு வித்யைக்யத்தைச் சாதிக்கவேண்டும். உன் கருத்துப்படி வித்யை ஏகையென்றால், ரூபம் ஸித்தமாகையால் ப்ராப்திக்கபேக்ஷை யில்லாமையால் ரூபாதிதேசம் செய்தது வீணாகும். அந்த அதிதேசம் வித்யா பேதத்தை யாதாரமாகக் கொண்டதாதலின், குணோபஸம்ஹாரம் கிடையாதென்பதாம்.

முன் அதிகரணத்தில் பெயர்களுக்கு ஸ்தானபேதத்தால் வ்யவஸ்தை செய்யப்பட்டது. இவ்வதிகரணத்தில் ஒரு வித்யையை யனுஸரித்து ச்செய்யப் படாத ஸம்ப்ருதி முதலிய குணங்களுக்கும் முன் கூறியதுபோல் ஸ்தான பேதத்தாலே வ்யவஸ்தை செய்யப்படுகிறதென்று ஸங்கதி.

## 90 ஸம்ப்ருத்யதிகரணம்

## 374 (ஸூ) ஸம்ப்ருதித்யுவ்யாப்த்யபி சாத:

*ஸம்ப்ருதி த்யுவ்யாப்த்யபி ச* = இது ஸமாஹாரத்தால் வந்த ஏகவசனம் ஸம்ப்ருதி முதலியகுண ஸமுதாயமும், அநாரப்யாதீதமாயிருந்தாலும் அத

ஏவ = ஸ்தானபேதத்தால் ஸ்தாபிக்கத்தக்கது. எங்கும் உபஸம்ஹாரம் செய்யத் தக்கதன்று. எப்படியென்றால் 'த்யுவ்யாப்தி' என்பது தன் ஸாமர்த்யத்தால் அல்பஸ்தானத்திலிருக்கத்தகாதது ஆதலின். எந்த ஸ்தானத்தில் அனுஸந்திக்கக்கூடுமோ அந்தஸ்தானத்தில் தான் நியதம். ஸம்ப்ருத்யாதி களும் த்யுவ்யாப்தி கூடப்படிக்கப்பட்டிருப்பதால் அங்குதான் வ்யவஸ்தை செய்யத்தக்கது. ஹ்ருதயாதிகளான அல்பஸ்தானங்களில் உபஸம்ஹாரம் கூடாதென்று கருத்து. இப்படியாகில் எங்கும் உபஸம்ஹாரம் செய்யத்தக்க ஆநந்தாதி குணங்களுக்குள்ளே அநந்தத்வம் எப்படி அல்பஸ்தான உபஸனங்களில் கூடுமெனில், அவ்வுபாஸனங்களில் பரமாத்மாவுக்கு அல்பத்வம் ஔபாதிகம் என்றும், அனந்தத்வம் ஸ்வாபாவிகமென்றும் அனுஸந்திக்க வேண்டுமென்பது கருத்து.

## 91 புருஷவித்யாதிகரணம்

### 375 (ஸூ) புருஷவித்யாயாமபி சேதரேஷாமநாம்நாநாத்

த்யுவ்யாப்தி ஸந்நிதியில் படிக்கப்பட்ட ஸம்ப்ருத்யாதிகுண சமுதாயம். த்யுவ்யாப்த்யுசித ஸ்தானத்தினுள் ப்ரவேசிப்பதால் ஒரே வித்யையில் அன்வயம் கூறப்பட்டது. இவ்வாறு ப்ரஹ்மவித்யா ஸந்நிதியில் படிக்கப்பட்டதாலே புருஷ வித்யைக்குப் ப்ரஹ்மவித்யாசேஷத்வம் கூறப்படுகிறதென்பது ஸங்கதி.

தைத்திரீயகத்தில் புருஷ வித்யை உள்ளது. தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமான: ச்ரத்தாபத்னீ என்று தொடங்குகிறது. சாந்தோக்யத்தில் புருஷோ வாவயஜ்ஞ: தஸ்ய யாநி சதுர்விம் சதிவர்ஷாணி என்று தொடங்குகிறது. இங்கு வித்யாபேதமா ஐக்யமா என்று சம்சயம். ஒரே பெயராலும் தைத்திரீயகத்தில் பல சம்பந்தம் சொல்லாததாலும் சாந்தோக்யத்தில் நூறு வருஷங்கள் ஜீவிப்பது என்பது புருஷ வித்யாபலமாய் கூறுவதாலும் வித்யைக்யம் என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர்.

### (ஸூ) புருஷவித்யாயாமபி சேதரேஷாமனும்நாநாத்

புருஷவித்யாயாமபிச = இரண்டிடங்களில் கூறப்பட்ட வித்யைகளுக்கு புருஷ வித்யை என்ற ஸம்ஜ்ஞை இருந்தாலும் ரூபபேதத்தால் வித்யாபேதம் ஸித்தந்தான். இதரேஷாம் அனும்நாநாத்: ஒரிடத்தில் கூறப்பட்ட குணங்களுக்கு வேறிடத்தில் விளக்கம் இல்லாமையால் சாந்தோக்யத்தில் தைத்திரீயகம் கூறிய யஜமான - பத்னீ - ஸவனம் முதலிய யஜ்ஞாவயவங்களுக்கும் சாந்தோக்யம் கூறிய யஜ்ஞாவயவங்களுக்கும் பேச்சேயில்லாமையால் என்றபடி.

தைத்திரீயகத்தில் ஆத்மாவை யஜமானன் என்றும், ச்ரத்தையை பத்னீ என்றும், ஸவனங்கள் மூன்றுபற்றியும் கல்பனை காணப்படுகிறது. சாந்தோக்யத்தில் அசிசிஷா (சாப்பிடவேண்டுமென்ருசை) தீக்ஷையென்றும் புருஷாயுஸ்ஸை மூன்ருகப்பிரித்து ஸவனமென்று கல்பனை செய்யப் பட்டுள்ளது. ஆகவே பெயரொத்திருந்தாலும் யஜ்ஞாவயவத்வ கல்பனையில் ப்ரகார பேதத்தாலும் யஜமானன், பத்னீ முதலிய கல்பனை பேதத்தாலும் ரூபம் பின்னமாகையால் முன் அனுவாகத்தில் 'ப்ரஹ்மணோ மஹிமானமாப் னோதி' என்று ப்ரஹ்மவித்யா பலத்துக்கே நெருக்கம் இருப்பதால் 'பலமுள்ள தன் அருகில் பலமற்றது அதன் அங்கம்' என்னும் நியாயப்படி புருஷ வித்யைக்கு பிரஹ்மவித்யாபலமே உரியதாதலின், வித்யாபேதம் ஸித்தம். தைத்திரீயத்தில் உள்ள புருஷ வித்யை முன் அனுவாகத்தில் கூறிய ந்யாஸவித்யைக்கு அங்கம் என்று கருத்து.

இங்கொரு கேள்வி - தஸ்யைவம் விதுஷ: என்கிற புருஷ வித்யையில் ப்ரஹ்மணோ மஹிமானம் ஆப்னோதி என்று ப்ரஹ்மப்ராப்தி பலமாகக் கூறப் படுவதால் பல சம்பந்தமில்லையென்பது எப்படிப்பொருந்தும்? என்பது. இதற்குவிடை - தைத்திரீயத்திலுள்ள புருஷ வித்யையை ஸ்வதந்த்ரமெனக் கொண்டால் கடைசியில் கூறும் ப்ரஹ்மப்ராப்தியென்னும் பலம் அப்ரஹ்ம-வித்யையான புருஷ வித்யாபலமாகாது. ஆதலின் புருஷவித்யா சம்பந்தமின்றி முன் அனுவாகத்திலுள்ள ப்ரஹ்ம வித்யையுடன் பொருந்துகிறது என்ற கருத்தால்அப்படிக் கூறபபட்டது. ஆகையால், விரோதமில்லையென்பதாம்.

இந்தப் புருஷவித்யையால் தன் அங்கங்களைத்தவிர வேறு எதையும் எதிர்பார்க்காத ந்யாஸ வித்யைக்குத் தேவையான இதர நைரபேக்ஷ்யம் (எதையும் எதிர்பாராமை) ஸித்தமென்று நிக்ஷேப ரக்ஷையில் ஆசார்யரால் அனுக்ரஹிக்கப்பட்டது.

## 92 வேதாத்யர்த்தாதிகரணம்

### 376 (ஸூ-௭) வேதாத்யர்த்தபேதாத்

ப்ரஹ்மவித்யையின் அருகில் படிக்கப்பட்டதால் புருஷவித்யை அதற்கு அங்கமெனப்பட்டது. இதேபோல் அருகில் படிக்கப்பட்ட சந்நோமித்ர: முதலிய மந்த்ரங்களும் ப்ரஹ்மவித்யைக்கு அங்கங்கள் ஆகட்டும் என்ற சங்கையால் ஸங்கதி. ஆதர்வணிகர்களாலும் - தைத்ரீயர்களாலும் ஐதரேயிகளாலும் மற்றவர்களாலும் உபநிஷதாரம்பத்தில். சுக்ரம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய, சந்நோமித்ரச்சம் வருண: என்றும் "ஸஹநாவவது" என்னும் மந்த்ரங்களும், ப்ரவர்க்யம் முதலிய கர்மாக்களும் அத்யயனம்

செய்யப்படுகின்றன. இவை வித்யையின் அங்கங்களா இல்லையா என்று ஸம்சயம். வித்யைகளுக்கு ஸந்நிதியில் (அருகில்) ஓதப்பட்டிருப்பதால் வித்யைக்கு அங்கங்களேயென்று பூர்வபக்ஷம். அதை நிரஸிக்கிறார்.

## (ஸூ) வேதாத்யர்த்தபேதாத்

சுக்ரம் ப்ரவித்ய என்ற மந்த்ரத்துக்கு வித்யாங்கத்வமில்லையென்பது விவாதமற்ற விஷயம். ஆகிலும், வேதசப்தத்தை ஸூத்ரத்தில் எடுத்தது த்ருஷ்டாந்தார்த்தமாம். ஆதி பதத்தால் ருத (ஸத்ய) வதனம் முதலியவை கூறப்படுகின்றன. சுக்ரம் ப்ரவித்ய, ஹ்ருதயம் ப்ரவித்ய என்கிற மந்த்ரத்திற்கு வஸ்துஸாமர்த்யமென்னும் லிங்கத்தால் ஆபிசாராங்கத்வம் தோன்று வதுபோல் சந்நோமித்ர: என்ற மந்த்ரமும், ருதம் வதிஷ்யாமி ஸத்யம் வதிஷ்யாமி என்றும் தேஜஸ்விநாவதீதமஸ்து என்றும் சொல்லப்படுவது வஸ்து ஸாமர்த்யமென்னும் லிங்கத்தால் அத்யயன சேஷம் என்று தோன்றுகிறது.

சுக்ரம் ப்ரவித்ய, ஹ்ருதயம் ப்ரவித்ய என்பது ப்ரஹ்மவித்யா ப்ரகரணத்தைக் காட்டிலும் ப்ரபலமான லிங்கத்தால் ஆபிசாராங்கமேயன்றி ப்ரஹ்மவித்யாங்கமன்று என்று கூறியது போல், இங்கும் லிங்கம் ப்ரபலமாகையால் - ''சந்நோமித்ர'' முதலியவை அத்யயனாங்கமாக வினியோகிக்கப்பட்டுள்ளவையாதலின் ப்ரஹ்மவித்யாங்கமல்லவென்பதாம்.

# 93 ஹான்யதிகரணம் 11

## 377 (ஸூ) ஹானௌ தூபாயன சப்த சேஷத்வாத் குசாச்சந்த ஸ்துத்யுபரணத்ததுக்தம்

முன் அதிகரணத்தில் சுக்ரம் ப்ரவித்ய என்ற மந்த்ரங்களுக்கு லிங்க பலத்தால் அந்தந்த கர்மசேஷத்வம் சொல்லப்பட்டது. இவ்வதிகரணத்தில் உபாயனத்திற்கு ப்ரஹாண (விடுவித்தல்) விஷயத்வ ரூபமான அர்த்த ஸாமர்த்ய ரூபலிங்கத்தால் ஹானம் உபாயனங்கள் (விடுதல்-ஏற்றல்) ஒன்றோடொன்று ஸம்பந்தமென்ற நியமத்தால் இரண்டிடங்களிலும் இரண்டும் அனுஸந்திக்கத் தக்கவையென்று ஸங்கதி.

ப்ரஹ்மத்தையடையப்போகும் வித்வானுக்கு இரண்டு சாகைகளில் புண்யபாப விமோசனம் கூறப்படுகிறது. அவ்வாறு விடப்பட்ட புண்ய பாபங்களுக்கு வேறிடத்தில் ப்ரவேசம் ஒரு சாகையில் கூறப்படுகிறது ஒரு சாகையில் விமோசனம் - ப்ரவேசம் இரண்டும் கூறப்படுகின்றன.

1 ததாவித்வான் புண்யபாபே விதூய நிரஞ்ஜன: பரமம் ஸாம்ய முபைதி.

2 அச்வ இவ ரோமாணி விதூய பாபம் – ப்ரஹ்மலோக மபிஸம்பவாநி என்று புண்யபாப விமோசனம் கூறப்படுகிறது.

"தஸ்யபுத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ் ஸாதுக்ருத்யாம், த்விஷந்த: பாபக்ருத்யாம். என்று புண்ய பாபங்களின் கேவலப்ரவேசம் கூறப்படுகிறது. மற்றோரிடத்தில், தத்ஸுக்ருத துஷ்க்ருதே தநாநுதே தஸ்யப்ரியா ஜ்ஞாதய: ஸுக்ருத முபயந்தி அப்ரியா துஷ்க்ருதம் என ஹானியும் உபாயனமும் சேர கூறப்படுகின்றன. ஆக இம்மூன்றும் ஸர்வ வித்யைகளிலும் விகல்பமாக அனுஷ்டிக்கத்தக்கவையா? ஒருசேர அனுஷ்டிக்கத்தக்கவையா? என்று சம்சயம். மூன்று விதமாகக் கூறப்பட்டிருப்பதால் அவை ஸமபலமான விகல்பமேயென்று பூர்வபக்ஷம். இதை நிரஸிக்கிறார்.

துசப்தம் பக்ஷத்தை விலக்குவது. ஹானௌ என்று சொல்லால் உபலக்ஷணமாக உபாயனத்தையும் கொள்ளவேண்டும். கேவலம் ஹானியோ (புண்யபாபங்களைவிடுதலோ) உபாயனமோ (புண்யபாபங்களை ஏற்றுக் கொள்ளலோ) கூறப்பட்டிருப்பதால், இரண்டையும் ஒரு சேரக் கூட்டிக்-கொள்ளவேண்டியதே. ***உபாயன சப்த சேஷத்வாத்*** உபாயனசப்தம் ஹானிவாக்யத்திற்கு சேஷமாகிறபடியால் ஒரு ப்ரதேசத்தில் சொன்ன வாக்யங்கள் வேறு ப்ரதேசத்தில் உள்ள வாக்யங்களுக்கு சேஷமாக இருப்பதுண்டு என்பதற்கு நான்கு உதாரணங்கள் தரப்படுகின்றன.

1. ***குசா:*** வானஸ்பத்ய: என்று ஓரிடத்தில் கூறிய வாக்கியத்திற்கு வேறு இடத்திலுள்ள ஔதும்பர்ய குசா: என்ற வாக்யம் சேஷமாய்ப் பொருள் தருகிறது.

2 ***சந்த:*** தேவாஸுராணும் சந்தாம்ஸி என்ற வாக்யத்திற்கு வேறிடத்-திலுள்ள "தேவச்சந்தாம்ஸி பூர்வம்" என்ற வாக்யம் சேஷமாய்ப் பொருள் தருகிறது.

3. ***ஸ்துதி:*** "ஹிரண்யேந ஷோடசிந: ஸ்தோத்ர முபாகரோதி" என்ற வாக்யத்திற்கு வேறிடமுள்ள ஸமயாவிஷ்டிதேஸூர்யே என்ற வாக்யம் சேஷமாய்ப் பொருள் தருகிறது.

4 "ருத்விஜ உபகாயந்தி" என்று வாக்யத்திற்கு வேறிடத்திலுள்ள "நாத்வர்யுருபகாயேத்" என்று அத்வர்யுகானம் செய்யக்கூடாதென்ற வாக்யம் சேஷமாய்ப் பொருள் தருகிறது. இவற்றைப்போல - கதிஸம்பவிக்கும் பக்ஷத்தில் - உபாயன வாக்யத்திற்கு ஹானிவாக்யம் சேஷமாகலாமாதலின், விகல்பம் என்பதல்ல. பூர்வ மீமாம்ஸையிலும், "அபிவா வாக்ய சேஷஸ் ஸ்யாத் அந்யாய்யத்வாத் விகல்பஸ்ய" என்று வாக்ய சேஷத்தால் பொருள்

கொள்ள வழியிருக்கையில் விகல்பம் என்பது தவறு என்று தீர்மானிக்கப் பட்டது. ஆகவே இதர வாக்யத்தால் சேஷமாகக்கொண்டு பொருள் கொள்ள கதியிருந்தால் விகல்பம் என்னலாகாது என்பதாயிற்று. ஒரே சாகையில் இரண்டும் விதித்திருப்பதற்கு என்ன கதியென்றால் - இந்த ஹானியோ உபாயனமோ ஒன்று விதிக்கப்பட்டாலும் இவற்றின் சமுதாயமே முன் கூறியபடி ஏற்பட்டுவிடும். இருப்பினும், விசேஷமின்றி மறுபடி படிக்கப் பட்டிருப்பதால் இரண்டையும் அளிப்பவர் வேறானவர் என்று கருதி விதித்த தாகப் பொருத்தம் கூறவேண்டும்.

இங்கு சிறப்பானதோர் செய்தி :

ஓர் கேள்வி - ஸுக்ருத துஷ்க்ருதங்களைச் செய்த கர்த்தாதானே அவற்றின் பயனை அனுபவிக்க முடியும் என்று கர்ம காண்டத்தில் நிறுவப் பட்டது. ப்ரஹ்மவித்தினால் விடப்பட்ட புண்யபாபங்களை ஸுஹ்ருத்துக்களும் துர்ஹ்ருத்துகளும் அனுபவிக்க எப்படி ஸாத்யமாகும்? என்பது. இதற்கு ஸ்வாமி தேசிகன் அருளிய உத்தரம் வருமாறு.

ப்ரஹ்மநிஷ்டர்களால் வித்யா மஹிமை காரணமாக விடப்பட்ட ஸுக்ருதம், துஷ்க்ருதம் என்ற கர்ம ஸமூகங்களுக்குப் பலமான ஸுக துக்கங்களுக்கு ஸமமான ஸுக துக்கங்களை முறையே ஸுஹ்ருத்துக்களும் துர்ஹ்ருத்துக்களும் அடைகிறார்கள். அவர்கள் முறையே ப்ரஹ்மவித்திடம் செய்த பக்திக்கும் அபசாரத்திற்கும் அவை அவர்கட்குப் பயனாகின்றன வென்பதாம்.

## 94 ஸாம்பராயாதிகரணம்

### 378 (ஸ) ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத் ததாஹ்யன்யே

ஸுக்ருத துஷ்க்ருதங்களின் ஹானத்தையும் உபாயனத்தையும் ஸர்வ வித்யைகளும் சிந்திக்க வேண்டுமென்று கூறியுள்ளன. இப்போது தேஹத்தை விட்டுப் பிரியும்போது ப்ரஹ்ம வித்தின் பாபம் அடியோடு நசிக்கிறதா அல்லது வழிநடுவிலும் கொஞ்சம் நசிக்கிறதா என்ற சம்சயத்தால் சங்கதி.

இந்த சேதனன் - தேஹத்தை விடும்போது சில பாபங்கள் கழிகின்றன. பின் வழி நடுவில் சில கழிகின்றன என்று சொல்லலாமா? எல்லாப் பாபங்களுமே தேஹத்தை விடும்போதே கழிகின்றன என்னலாமா என்று சம்சயம் இரண்டிடங்களிலும் பாபம் கழிவது என ச்ருதியில் உள்ளதாலும், தேவயானமார்க்கத்தில் செல்லுகைக்கு உபபத்தி சொல்லவேண்டியிருப்ப தாலும் இரு இடங்களிலும் பாபம் கழிவதாகவே கூறவேண்டும் என்பது பூர்வபக்ஷம் அச்வ இவ ரோமாணி விதூயபாபம்.

சந்த்ர இவராஹோர் முகாத் ப்ரமுச்ய "தூத்வா சரீரம்" என்று தேஹவியோக காலத்தில் பாபநாசம் கூறப்படுகிறது "ஸ ஆகச்சதி விரஜாம் நதீம் தாம் மனஸாத்யேதி தத் ஸுக்ருததுஷ்க்ருதே தூனுதே" என்று வழியிலும் பாபநாசம் கூறப்படுகிறது. தேஹ வியோக காலத்திலேயே ஸர்வ கர்மாக்களும் நசித்தால் கமனத்திற்கு ஸாதனமான கர்மா இல்லாமையால் கமனம் இல்லாமலே போய்விடும் என்ற பூர்வபக்ஷத்தை நிராகரிக்கிறார்.

## (ஸூ) ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத்ததாஹ்யன்யே

*ஸாம்பராயே* மரணகாலத்தில் தானே ஸுக்ருத துஷ்க்ருதஹானி சித்திக்கத்தக்கது. ஏனெனில், *தர்த்தவ்யாபாவாத்* மரணத்திற்குப்பின் ப்ரஹ்ம-ப்ராப்தியைத்தவிர தாண்டவேண்டிய கர்மபலபோகமில்லாமையால் என்றபடி *ததாஹி அன்யே* அவ்வாறே மற்றோரும் படிக்கின்றனர் "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே" என்று தேஹத்தை விடுமளவே ப்ரஹ்மப்ராப்திக்கு விளம்பம் என்றும் பின் கர்மபலபோகத்திற்குப் அவகாசமில்லையென்றும் பொருள். 'அசரீரம் வாவஸந்தம் நப்ரியாப்ரியே ஸ்ப்ருசத:' என்று ச்ருதி.

## 379 (ஸூ) சந்தத உபயாவிரோதாத்

இவ்வாறு அர்த்தஸ்வபாவத்தால் - தேஹ வியோக காலத்தில்தானே அனைத்துப்பாபங்களும் அழிவது நிச்சயமாயிருக்க, வழியில் கர்மங்கள் அழி-வதாகக் கூறும் வாக்யகண்டமும் - *உபயாவிரோதாத்* - ச்ருதியும், அர்த்த ஸ்வ-பாவமும் என்ற இரண்டிற்கும் விரோதமின்மையால் *சந்தத:* இஷ்டப்படி - வாக்கியம் அன்வயிக்கத்தக்கது. எப்படியெனில், இரண்டு ச்ருதிகளுக்கும். (அச்வஇவரோமாணி என்றும் தஸ்ய தாவதேவசிரம் என்றும்) விரோதம் வாராமைக்காக, பின் கூறப்பட்டாலும் "ஸுக்ருத துஷ்க்ருதே தூனுதே" என்னும் வாக்யத்துக்கு முன்னமே அன்வயிக்கத்தக்கவை, பாடக்ரமத்தால் பிந்தி இருந்தாலும், வலிமைமிக்க அர்த்தக்ரமத்தையனுசரித்து தேஹவியோக காலத்திலேயே அமைந்து கர்மாக்களுக்கும் நாசத்தை ஏற்கவேணுடுமென்று கருத்து.

இங்கு பூர்வபக்ஷம்

## 380 (ஸூ) கதேரர்த்தவத்வம் உபயதா அன்யதாஹி விரோத:

*உபயதா* தேஹவியோக காலத்திலும், வழி நடுவிலும், கர்மக்ஷயத்தை ஏற்றால் *அர்த்தவத்வம்* தேவயானகதிச்ருதி அர்த்தமுள்ளதாகும். *அன்யதாஹி-விரோத:* இவ்வாறு ஏற்காவிடில் - தேஹவியோககாலத்திலேயே கர்மக்ஷயம் என்று ஏற்றால் கதிக்கு சாதனமான ஸூக்ஷ்ம சரீரத்துக்கு ஹேதுவான

கர்மமில்லாமையால் தேவயானகதிச்ருதிக்கு விரோதம் வரும் என்னும் பூர்வ-பக்ஷத்தை நிராகரிக்கிறார்.

## 381 (ஸூ) உபபன்னஸ்தல்லக்ஷணார்த்தோபலப்தே: லோகவத்

உபபன்ன: மரணகாலத்திலேயே கர்மக்ஷயம் பொருத்தமானதே. தல்லக்ஷணார்த்தோபலப்தே: கர்மாக்களைவிட்டுவிட்ட முக்தனுக்கும் கூட தேஹ ஸம்பந்த-லக்ஷணமான அர்த்தத்திற்கு - ஜக்ஷத்க்ரீடன் ரமமாண ஏகதா பவதியென்று உபலப்தி இருப்பதால் என்றபடி. லோகவத் = மஹாராஜாவை உபாஸிப்ப-வனுக்கு உலகப்பொதுவான முறையின்றி அழகிய புருஷார்த்தம் ஸித்திப்பது போல ஸர்வஜ்ஞனும் ஸத்யஸங்கல்பனுமான ஸர்வேச்வரனை உபாஸித்த-வனுக்கும் வித்யையின் மஹிமையால் கிடைக்கும் ஸூக்ஷ்ம சரீரத்தால் அர்ச்சிராதிகதி பொருந்தும் என்கிறது.

ஆமாம்; ப்ரஹ்மோபாஸகர்களுக்கு தேஹாவஸான காலத்தில் ஸர்வம் கர்மங்களும் க்ஷீணமாகையால் அதன் பின் கர்மபலானுபவமில்லையெனச் சொல்லவியலாது. ஏனெனில், ஜ்ஞானிகளான வஸிஷ்டாதிகளுக்கும் தேஹ-வியோக தேஹாந்தரப்ராப்திகளும், பரலோகத்தில் ஜன்ம, விபத்து முதலிய-வையும் ஸுகதுக்கங்களும் காணப்படுகின்றனவே என்ற சங்கையை நிரஸிக்கிறார்

## 382 (ஸூ) யாவததிகாரமவஸ்திதிராதிகாரிகாணாம்

எந்த ஜ்ஞானிகளால் மரணானந்தரம் அர்ச்சிராதி கதியடையப் பட்டதோ அவர்களுக்கே கர்மபல போகமில்லையென்றும், தேஹபாத ஸமயத்திலே ஸர்வகர்மங்களும், சிக்கின்றனவென்றும் கூறப்பட்டது. மற்றவர் களுக்கில்லை. ஆதிகாரிகாணாம் அப்பாதிகாரிகளான வஸிஷ்டாதிகளுக்கோ என்றால் யாவததிகாரம் அதிகாரம் முடியும்வரை அர்ச்சிராதிகதி இல்லை. அவஸ்திதி: அவ்வதிகாரத்திலேயே இருக்கவேண்டும். அதிகார ஹேதுவான கர்மம் பலதானத்துக்கு ஆரம்பிக்கப்பட்டதாதலின், ஜ்ஞானிகளுக்கும், பலத்தைத்-தந்தே (கர்மம்) நசிப்பது என்று கருத்து

## இங்குள்ள விசேஷமிது

ஸ்தூல தேஹத்தின் முடிவில் கர்மம் முழுவதும் அழிந்தால் ப்ரஹ்மத்தை யடைவதற்குமுன் இருந்த ஜ்ஞான ஸங்கோசத்திற்குக் காரணமான கர்மம் இல்லாமையால் அந்த இடைக்காலத்தில் ஜ்ஞான ஸங்கோசத்திற்கான ஹேது எது? என்றால், ஆதியில் எல்லா கர்மாக்களும் கழிந்தபோதிலும், ஜ்ஞானஸங்கோசமாத்திரத்திற்கு ப்ரஹ்மத்தையடையும்வரை தொடர்ந்துள்ள ஸூக்ஷ்மமான கர்மவிசேஷமே ஹேதுவென்பது கருத்தாம்.

## 95 அநியமாதிகரணம்

### 383 (ஸூ) அநியமஸ்ஸர்வேஷாமவிரோத:

முன்னதிகரணத்தின் முடிவில் தேஹத்தின் ஸ்தூலதாஹேது ஸர்வ கர்மங்களுக்கும் அழிவென்றும், பின் அர்ச்சிராதி மார்க்கத்தில் ப்ரஹ்மத்தை அடைபவனுக்கு ஜ்ஞான ஸங்கோச ஹேது ஸூக்ஷ்ம கர்ம நாசம் என்றும் கூறப்பட்டது. இப்போது பேசப்படும் அர்ச்சிராதிகதி எந்த வித்யையிலுள்ளதோ அது அந்த வித்யா நிஷ்டனுக்கு மட்டுமா எல்லா வித்யா நிஷ்டர்களுக்குமா என்று சம்சயத்தால் ஸங்கதி.

உபகோஸலாதி வித்யைகளில் எந்த உபாஸனத்தில் அர்ச்சிராதிகதி கூறப்பட்டுள்ளதோ அந்த உபாஸனநிஷ்டனுக்கு மட்டும் கதியா? அன்றி எல்லா உபாஸகர்கட்கும் அந்த கதியால் ப்ரஹ்ம ப்ராப்தியுண்டா என்று சம்சயம்.

எந்த வித்யையில் கூறப்பட்டதோ அந்த வித்யா நிஷ்டனுக்கே அந்த கதியென்று பூர்வபக்ஷம். எனெனில், மற்றவர்களுக்கு இத்த கதியுண்டு என்பதற்கு ப்ரமாணமில்லை. ஆனால் பஞ்சாக்னி வித்யையில் யேசேமேரண்யே ச்ரத்தா தப இத்யுபாஸதே என்று அர்ச்சிராதிகதி பொதுவாகச் சொல்லப் பட்டது, உபகோஸலாதி வித்யைக்கு உரியது என்று நிச்சயிக்கப்படுகிறது. இல்லாவிடில், எல்லா வித்யைகளுக்கும் பொதுவென்றால் இந்த வித்யையில் சிறப்பாக அந்த கதியைக் குறிப்பிட்டது வீணாகும். ஆதலால் - அர்ச்சிராதி கதி பொதுவானதல்ல, என்ற பூர்வபக்ஷத்தை நிராகரிக்கிறார்.

### (ஸூ) அநியம: ஸர்வேஷாம விரோத: சப்தானுமானாப்யாம்

*ஸர்வேஷாம்* : எல்லா உபாஸகர்களுக்கும்: *அநியம:* இந்த வித்யா நிஷ்டர்களுக்கே அர்ச்சிராதிகதியென்ற நியமமில்லை. அனைவருக்கும் இது பொதுகதி, இவ்வாறு நியமமின்மையைக் கூறுவதாலேயே-*சப்தானுமானாப்யாம் அவிரோத:* ச்ருதி ஸ்ம்ருதிகளுடன் விரோதமில்லை. ஏனெனில், பஞ்சாக்னி வித்யை எல்லா வித்யைகளுக்கும் பொதுவாகக் கூறப்பட்ட அர்ச்சிராதிகதியை உபகோஸலவித்யாதிகளில் சிறப்பாகக் கூறியது பாதிக்காது. சிறப்பாகக் கூறியது அந்த வித்யையைத் துதிப்பதற்காகவே. ஆகவே, குறிப்பிட்ட ச்ருதியும், அக்னிர்ஜ்யோதி: எனத்தொடங்கும் ஸ்ம்ருதியும், பொருந்த - நியமமில்லையென்றே தேறிற்று. வித்யைக்கு அங்கமான கதி சிந்தனம் முதலியவற்றை வித்யாங்க பாதத்தில் கூறாமல் இங்கு குறிப்பிட்டது புத்தி ஒன்று என்பதால் பொருந்தும்.

## 96 அக்ஷரத்யதிகரணம்

### 384 (ஸூ) அக்ஷரதியாம்த்வவிரோத: ஸாமான்யதத் பாவாப்யாம்: ஔபஸதவத் ததுக்தம்:

அர்ச்சிராதிகதி ஸர்வவித்யைகட்கும் பொதுவென்று கூறினோம். இவ்வதி-கரணத்தில் அவ்வாறே அஸ்தூலத்வாதிகளுக்கும் பொதுத்தன்மை கூறப்-படுகின்றது என்று ஸங்கதி. ப்ருஹதாரண்யகத்தில் ஏதத்வை தத க்ஷரம் கார்க்கி ப்ராஹ்மணா அபிவதந்தி அஸ்தூலம் அனணு அஹ்ரஸ்வம் என்று கூறப்படுகிறது. ஆதர்வணத்திலும், அதபரா யயா ததக்ஷரமதிகம்யதே யத்த-த்ரேச்ய மக்ராஹ்யம் என்று கூறப்படுகிறது. இவ்விரண்டுச்ருதிகளிலும் கூறப்-பட்ட அஸ்தூலத்வாதி குணங்கள் ஸர்வவித்யைகளிலும் உபஸம்ஹாரயங்-களா அல்லது எங்கு படிக்கப்படுகின்றனவோ அங்கு மட்டும் உரியவையா என்று சம்சயம். வித்யாவிசேஷத்துக்கு ரூபமாகக் கூறப்பட்ட குணங்கள் ஸர்வ வித்யைகளுக்கும் பொது என்ற தன்மை கூடாதாகையால் அவை படிக்கப்-பட்ட இடங்களுக்கேயுரியன என்று பூர்வபக்ஷம். இந்த பூர்வபக்ஷத்தை நிரஸனம் செய்கிறார்.

*அக்ஷரதியாம் அவரோத*: அக்ஷரப்ரஹ்மம் சம்பந்தப்பட்ட அஸ்தூலத்வம் முதலியவற்றிற்கு ஸர்வவித்யைகளிலும் உபஸம்ஹாரம் சித்தமானது. அவை அனுஸந்திக்கதக்கவை. ஏனெனில், *ஸாமான்யதத்பாவாப்யாம்* ப்ரஹ்மம் ஸர்வ வித்யைகளிலும் சமமாகையால், ஸாமான்யமாகச் சொல்லப்படுகிறது. அஸ்தூ லத்வம் முதலியவை ப்ரஹ்ம ஸ்வரூபப்ரதீதியில் ஸ்வரூபத்தின் நிரூபகம் என்ற முறையில் உள்ளடங்கியவையாதலாலும், குணங்கள் ப்ரதானத்தையே பின்பற்றுபவையாதலாலும் தத்பாவ சப்தார்த்தங்கள் என்ற இரண்டாலுமென்ற படி. *ஔபஸதவத்* - ஜாமதக்ன்ய சதுராத்ர புரோடாசாதிகளான உபஸத்தின் குணமாகிய " அக்னிர்வை ஹோத்ரம்வேது " முதலிய மந்த்ரமானது ஸாம வேதத்தில் படிதம். ஆதலால், "உச்சைஸ்ஸாமனா" என்கிறபடியே உயர்ந்த குரலில் படிக்கத்தக்கதானாலும் உபஸத் எனும் யாகம் யஜுர்வேதபடிதம் ஆதலின், உபாம்சுயஜுஷா என்கிறபடியே ப்ரதான உபஸத்தையனுஸரித்து மெதுவான குரலில் படிக்கப்படுகிறது. அதுபோல் என்றபடி : பூர்வமீமாம்ஸை யில் கூறப்பட்டதாவது. குணத்திற்கும் முக்கியத்திற்கும் விரோதம் வந்தால் குணம் முக்கியத்திற்காக ஏற்பட்டது என்ற காரணத்தால், முக்கியத்தை அனுஸரித்தே வேதத்தைப் பயன்படுத்தவேண்டும் என்றுள்ளது. இங்கு கவனிக்கவேண்டியது-அஸ்தூலத்வாதிகள் ஆனந்தாதிகள்போல் ஸ்வரூபானு-ஸந்தானத்தில் அடங்கியிருப்பதால் எல்லா உபாஸனங்களிலும் உப ஸம்ஹரிக்கத்தக்கவை. ஆனந்தாதிகள் மட்டும் ப்ரஹ்மத்தின் விஸ்வரூபத்தை

நிரூபிப்பவையல்ல. அவை ஜீவாத்ம ஸ்வரூபத்திலும் பொதுவாகையாலும் அஸ்தூலத்வாதிகளால் விசேஷிதமான ஆனந்தாதிகள் ஜீவனை விட்டு விலகியவையாய் ப்ரஹ்மஸ்வரூபத்தை நிரூபிப்பவை. ஜீவஸ்வரூபத்திற்கு ஸ்வாபாவிகமாக ஸ்தூலத்வாதிகளான அசேதநதர்ம ஸம்பந்தமில்லையே யாகிலும் அந்த ஸம்பந்தத்திற்குத் தகுதி இருப்பதால் - அதைவிட விலக்ஷன மான ப்ரஹ்மஸ்வரூப அநுஸந்தாநந்திற்கு அஸ்தூலத்வாதிகள் எங்கும் அனுஸந்திக்க தக்கனவென்று கருத்து.

இப்படியாகில் ஸர்வகர்மா ஸர்வரஸ: என்றெல்லாம் கூறியகுணங்கள் ஒவ்வோர் சாகையில் நியதங்களாகையாலே அவற்றிற்கும் ப்ரஹ்மகுண மென்று எல்லா இடங்களிலும் உபஸம்ஹாரம் வர நேரிட்டால் ஒரு பக்கமும் வ்யவஸ்தை இல்லாமல் போகுமே என்ற சங்கைக்கு விடைகூறியருளுகிருர்.

## 385 (ஸூ) இயதாமநநாத்

**இயத்** = அஸ்தூலத்வாதிகளால் விசேஷிதமான ஆநந்தாதிகளே எல்லா இடங்களிலும் ப்ரதானம். **ஆமநநாத்** அபிமுகமான மனனம்: ப்ரஹ்மானுஸந்-தானத்தால் என்றபடி. பரப்ரஹ்மானுபவம் எந்த தர்மமின்றி பொருந்தாதோ. அந்த தர்மம் எங்கும் அனுஸந்திக்கத்தக்கது என்பதாம். மற்றதர்மங்கள் ஆங்காங்கு ஸ்திதங்களாம்.

## 97 அந்தரத்வாதிகரணம்

## 386 (ஸூ) அந்தரா பூதக்ராமவத் ஸ்வாத்மனே ந்யதா பேதனுபபத்தேரி சேந்நோபதேசவத்

முன்சொன்னபடி ப்ரஹ்மத்திற்கு ஹேயப்ரத்யநீகத்வம் ஸ்திரமானுல் பசி தாகம் யாதுமில்லை என்ருவதால் ப்ராணித்ருத்வம் முதலியவை கொண்டவன் ஜீவனே யென்னும் சங்கையால் ஸங்கதி.

ப்ருஹதாரண்யகத்திலே உஷஸ்தியின் வினவிடைகள். ய: ப்ராணே நப்ராணிதி ஸ த ஆத்மா ஸர்வாந்தர: முதலியன கூறப்பட்டன. அதற் கடுத்தாற்போல் - கஹோளனின் கேள்விபதில்கள். யோZசனுயா-பிபாஸே சோகம் மோஹம் ஜராம் ம்ருத்யும் அத்யேதி என்று தொடங்கி கூறப்படு-கிறது. இவ்விரண்டும் ஒரேவித்யையா வெவ்வேரு? என்று சம்சயம். உஷஸ்தியின் வினவிடையில் ப்ராணநாதிஹேதுவான ப்ரத்யகாத்மா தோன்றுகின்ருன். பின்னருள்ள வினவிடையில் பசி தாகம் முதலியன அற்ற பரமாத்மா தோன்றுகிருன். ஆகவே, ரூபபேதத்தால் வித்யாபேதம் சித்தம் என்று பூர்வபக்ஷம். இதை அனுவாதம் செய்து கண்டிக்கிருர்.

***அந்தரா - ய ஆத்மா ஸர்வாந்தர:*** என்ற உஷஸ்தியின் ப்ரச்னம். ***பூதக்ராமவத்ஸ்வாத்மந:*** தன் ஆத்மாவானப்ரத்யகாத்ம விஷயமென்று ஏற்கத் தக்கது. ***அன்யதா*** = அவ்வாறு ஒப்புக்கொள்ளாவிட்டால், ***பேதானுபபத்-தேரிதிசேத்:*** பதில் கூறுவதில் பேதம் பொருந்தாதென்றால். ந = அது தவறு: ப்ரத்யகாத்மா பற்றியதல்ல என்பது கருத்து. இரண்டு வினாக்களும் இரண்டு விடைகளும் ஒரே உபாஸ்யனான பரமாத்மாவைப் பற்றியனவேயென்பதாம்; ***உபதேசவத்:*** ''யதா ஸ்தப்தோZஸ்யுத தமாதேசமப்ராக்ஷ்ய: என்று தொடங்கியதும், தனித்திருப்பதுமான ஸத் வித்யையில், பகவானே திரும்பி கூறவேண்டுமென்று வினவிணைத் திருப்பிக்கூறலும், பதிலும், உபாஸ்யமான ப்ரஹ்மத்தின் மஹிமையை விளக்குவதுபோல் என்றபடி. ஆகவே ஸர்வ பூதங்களுக்கும் அந்தர்யாமியான ஸாக்ஷாத் ப்ரஹ்மம் எது என்று எனக்குக் கூறுக என்று இரண்டிடங்களிலும், கேள்வி பரமாத்மாவைப்பற்றியே ஒரே விதமாக இருப்பதாலும், விடைகளில் காணப்படும் ஸர்வபூதங்களும் உயிர் வாழக் காரணமாதலும் பசி, தாகம் முதலியவற்றைக் கடந்த தன்மையும் ஒரே பரமாத்மாவிடமே பொருந்துவன என்பதால் ரூபைக்யமும், அதனால் வித்யைக்யமும் சித்தம்.

கேட்பவர் வெவ்வேறானவர்: விடையும் வெவ்வேறு என்பதால் வித்யாபேதம் கூறலாமேயென்று சங்கையை நிரஸிக்கிறார்.

## 387 (ஸூ-௭) வ்யதிஹாரோ விசிம்ஷந்திஹீதரவத்

***வ்யதிஹார:*** (இருவர் வினாக்களும் ஒரேவிதமாதலின், ஒரே விஷயத்தைப் பற்றியவையென்று தீர்மானித்துவிட்டால்) கேட்டோரின் வினாவிற்கான விடையில் உள்ள செய்திபற்றிய புத்தியை மாற்றிக் கொள்ளவேண்டும். கஹோளனால் ப்ராணனஹேதுத்வ புத்தியானது ஸர்வாந்தர விஷயையென்றும் உஷஸ்தியால் பசிதாகங்களைக் கடந்தவனென்ற புத்தி ஸர்வாந்தர விஷயையென்றும் மாற்றிக் கொள்ளத்தக்கது. ***விசிம்ஷந்திஹி*** : ஈரிடங்களிலும் யாஜ்ஞ்யவல்க்ய வசனங்களே விசேஷிக்கின்றன. ***இதரவத்*** = வேறான ஸத்வித்யையில் எல்லாவிடைகளும் பரம காரணமான ப்ரஹ்மத்தையே குறிப்பனவே-அவ்வாறு:

ஸத்வித்யையிலும் கேள்வியும் - பதிலும் திரும்பத்திரும்ப வருவதால் எப்படி உபாஸ்யன் ஒருவனேயென்பது தோன்றும்? என்ற வினாவிற்கு விடை தருகிறார்.

## 388 (ஸூ-௮) ஸைவ ஹி ஸத்யாதய:

''ஸேயம் தேவதைக்ஷத'' இத்யாதி வாக்கியங்களில் எங்கும் அத்தகைய ஒரே பரதேவதையே தொடர்கிறது. ***ஸத்யாதய:*** ''ஐததாத்ம்ய

மிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி '' என்று அந்த ஸத்யாதிகளே எல்லா விடைகளிலும் முடிவாகக் கூறப்படுகின்றன. ஆகவே வித்யைக்யமே ஸித்தம்.

## 98 காமாத்யதிகரணம்

### 389 (ஸூ-9) காமாதீதரத்ர தத்ரசாயதநாதிப்ய:

ப்ராணித்ருத்வாதிகளுக்கும் அசநாயாத்யதீதத்வாதிகளுக்கும், தர்மி பேதம் இல்லாமையால் வித்யைக்யம் கூறப்பட்டது. இங்கு வசித்வம் முதலிய எட்டு குணங்களுக்கும் தர்மிபேதம் உள்ளதாக சங்கையால் சங்கதி.

சாந்தோக்யத்தில் தஹராகாசத்தினுள்ளிருப்பவன் அறியத்தக்கவன் என்று விதிக்கப்படுகிறது. வாஜஸநேயகத்தில் ஹ்ருதயத்தின் உள்ளே சயனித்திருப்பன் எல்லோரையும் வசப்படுத்துபவன் - எல்லோர்க்கும் தலைவன் என்று கூறப்படுகிறது. இந்த இரண்டிடங்களிலும் வித்யை ஒன்ரு வெவ்வேரு என்று சம்சயம். ரூபம் வெவ்வேருனதால் வித்யையும் வேருனது என்று பூர்வபக்ஷம், ஆனுல் இரண்டிலும் உபாஸ்யன் பரமாத்மாவே. இருப்பினும், ஓரிடத்தில் ஆகாசம் எனப்படும் பரமாத்மா உபாஸ்யன், மற்ற இடத்தில் ஆகாசத்தில் சயனித்திருக்கும் பரமாத்மா உபாஸ்யன் என்று ரூபபேதத்தால் வித்யையும் வேறுபட்டதே என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிருர்.

***இதரத்ர***=வாஜஸநேயகத்திலும் ***தத்ர ச***=சாந்தோக்யத்திலும் ***காமாதீ ஸத்யம்,*** காமம் முதலியவையே உபாஸ்யமான ரூபம் - ஏனெனில், ஆயதநாதிப்ய: ஹ்ருதயாயதநத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம் என்னும் வசித்வம் முதலியவற்றின் ப்ரத்யபிஞ்ஞானத்தாலும், பரம் ஜ்யோதிருபஸம்பத்ய என்றும், அபயம் வைப்ரஹ்மபவதி என்றும் ப்ரஹ்மப்ராப்தியென்னும் ஒரே பலத்தாலும், வித்யைக்யம் ஸித்தமாயிற்று. சாந்தோக்யத்தில் உள்ள தஹர வித்யையால் ஹ்ருதயாயதனனை ஆகாசம் எனப்படும் ப்ரஹ்மம் ஸத்ய காமத்வாதி குணங்களுடன் உபாஸிக்கத்தக்கது என்று நிச்சயிக்கப்பட்டது.

வாஜஸநேயகத்தில் ஹ்ருதயாயதனனை பரமாத்மாவே ஸத்யஸங்கல்பத்வத்தின் விசேஷங்களான வசித்வாதிகளுடன் உபாஸ்யன் என்று தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில், ரூபைக்யத்தால் வித்யைக்யம் சித்தித்தால் ''யஏஷோऽந்தர் ஹ்ருதய ஆகாச: தஸ்மின் சேதே'' என்றுள்ள ஆகாச சப்தம் ஹ்ருதயாகாசத்தைச் சொல்கிறது. பரமாத்மாவைச் சொல்லவில்லை. ஆகவே ரூபபேதமில்லையென்று கருத்து.

ஆமாம்; மனஸ்ஸாலேயே அது காணத்தக்கது. ''நேஹநாநாஸ்தி கிஞ்சன'' முதலியவை இந்த வித்யையில் முன்னால் தொடங்கியுள்ளன. ஆதலின், அதுவே பின் நேதி நேதி என்று சொல்லப்படுவதால் ப்ரஹ்மம் நிர்விசேஷம் என்று தோன்றுவதால் வசித்வம் முதலிய குணங்களும், ஸ்தூலத்வாதி குணங்கள் போலவே நிஷேதிக்கத்தக்கவை. ஆகையால், ஸத்யகாமத்வாதிகளுக்கு மோக்ஷ ஸாதனமான உபாஸனத்தில் வேத்யமான ரூபம் இல்லை என்கிற சங்கையைப் பரிஹரிக்கிறார்.

## 390 (ஸூ) ஆதராத் அலோப:

வேறுப்ரமாணங்களால் அறியப்படாத ஸ்வரூபமான வசித்வம் முதலியவை வேதத்தால் மட்டும் அறியத்தக்கனவாதலின், இங்கு ஆதரத்தினால் சொல்லப்படுகிறது.

ஆதலின், லோபம் கூடாது. வசித்வாதிகளும் ப்ரஹ்மகுணம் என்று அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டும். விசேஷமில்லையென்று நிஷேதிக்கும் ச்ருதிகளோ ப்ராக்ருத விசேஷத்தை நிஷேதிப்பவை. நேஹநாநாஸ்தி என்ற நிஷேதமும் ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்தின் கார்யமாதலின், ப்ரஹ்மாத்மகமில்லாத வேறெதுவுமில்லையென்று நிஷேதத்தைக் கருத்தாகக்கொண்டது. ஆகவே ஸத்யகாமத்வம் முதலியன அறியவேண்டிய ப்ரஹ்மத்தின் ரூபங்களாகக்கூடும்.

இப்படியானால் ஸத்ய காமத்வத்துடன் கூடிய ப்ரஹ்ம உபாஸனங்களுக்குப் பலமாக ''ஸயதி பித்ரு லோக காமோபவதி'' என்று ஸாம்ஸாரிக பலத்தையே சொல்வதால், ஸகுணப்ரஹ்மோபாஸகனுக்கு மோக்ஷபலம் கிடையாதென்கிற சங்கையை நிரஸனம் செய்கிறார்.

## 391 (ஸூ) உபஸ்திதே அத: தத்வசனாத்

*உபஸ்திதே*= ப்ரஹ்மம் ப்ராப்தமானபோது: ஜீவன் ஸ்வஸ்வரூபம் ஆவிர்ப்பவித்து பந்தங்களை விட்டு நீங்கியவளவிலே. *அத:* இந்த ப்ரஹ்ம ப்ராப்தியை ஹேதுவாய்க்கொண்டு *தத்வசனாத்*: காமசாரம் (இஷ்டப்பட்டபடி ஸஞ்சாரம்) சொல்லப்பட்டிருப்பதால். அதாவது - பரமாத்மாவையடைந்து ஸ்வஸ்வரூபத்தைப் பெறுகிறான். ஸ உத்தம: புருஷ: - ஸதத்ரபர்யேதி ஜக்ஷத் க்ரீடன் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யானைர்வா ஜ்ஞாதிபிர்வா நோபஜனம் ஸ்மரன் இதம் சரீரம் என்றும் ஸஸ்வராட்பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி என்றும் அவித்யை நீங்கினபடியால் ஸ்வரூபத்தைப் பெற்ற முக்தனுக்கே ஜக்ஷணாதி, க்ரீடைகளைச் சொல்வதால் ப்ரஹ்மஸம்பத்திகாரணமாக க்ரீடனாதிகள் ஸித்திக்கின்றன. ஆதலால், அவை ஸம்ஸார பலங்களல்ல

(முக்தன் மோக்ஷ தசையில் பித்ருலோகத்தையோ தன் மூதாதையர் அனைவரையுமோ பார்க்க எண்ணுகிறான். பற்பல விருப்பங்கள் அவனுக்குத் தோன்றுகின்றன. இப்போது இவன் விருப்பமெல்லாம் நிறைவேறக்கூடியவை இவன் ஸத்ய ஸங்கல்பனாய்த் திகழ்கிறான், விட்டகுறை தொட்டகுறையென் பார்கள்.

முன்பிறவியில் இவன் அனுபவிக்கவிரும்பிய உத்தமமான காமங்கள் பல பல. முக்கியமாக, கோயில், திருமலை, பெருமாள், கோயில்-திருநாராயண புரம், பத்ரிகாச்ரமம் முதலிய திவ்யதேசங்களில் அர்ச்சை மூர்த்தி எம்பெருமான்களைக் கண்ணால் ஆராவமுதமாய் ஸ்வதந்த்ரமாய் - பிறர் யாரும் தடுக்க முடியாதபடி ஸேவிக்கத் தற்போது விரும்புகிறான். முன் பிறவியில் வறுமை; வாஹன வசதிகளில்லை, போதுமென்றாவும் ஸேவிக்க வசதியில்லை. தடைவேறு. தன் பித்ருவர்க்கங்களும் - பந்துக்களும், ஸ்க்ரீவர்க்கமும் புடை சூழத்தக்க வாஹன வசதிகளுடன் அத்தனை அர்ச்சைகளையும் ஸேவிக்கப் பார்க்கிறார். ஒரே சமயத்தில் நாலைந்து திவ்ய தேசங்களையும் ஸேவிக்க நினைக்கிறார். எந்த மனிதரின் தடையுமின்றி ஏகாந்தமாக வேண்டிய பித்ருக்கள் பல தலைமுறையினர் - மற்ற சுற்றத்தார் புடைசூழ வேண்டிய படி சூக்ஷ்மமான அல்லது ஸ்தூல சரீரங்களைக் கொண்டு ஸேவிக்கலாம். கர்மக்ரு-தமான பந்தம் ஏதுமில்லை. பசியில்லை - தாகமில்லை. இருப்பினும் பல பல பகவத்ப்ரசாதங்களையும் சுவைத்துக்கொண்டும் பந்து ஜனங்களுடன் க்ரீடித்துக் கொண்டும் உல்லாஸமாக பகவத் ஸேவையை யனுபவித்துவிட்டுப் பரம பதத்தையவன் விரும்பும்போது போய்ச்சேருகிறான் என்பதாம். இவ்வாறு முக்தாத்மாவின் ஸத்யஸங்கல்பத்வம் பெருமைப்படப் பேசப்படுகிறது.

## 99 தந்நிர்த்தாரணாநியமாதிகரணம்

## 392 (ஸூ-1) தந்நிர்த்தாரணாநியம: தத்த்ருஷ்டே: ப்ருதக்ஹ்யப்ரதிபந்த:

***நிர்த்தாரணம்:*** நிச்சயேந சேதஸ: அவதாரணம் பலம் உபாஸனம் என்பது பொருள்: ***தந்நிர்த்தாரணஸ்ய அநியம:*** உத்கீதவிஷயமான உபாஸனத்திற்கு நியமேன உபாதேயத்வம் கிடையாது. அங்கத்வம் இல்லையென்பதாம். ஏனெனில், ***தத்த்ருஷ்டே:*** உத்கீத உபாஸகனுக்கும் அதில்லாதவனுக்கும் கர்மா அனுஷ்டிக்கத்தக்கது. ஆதலின், அநியமம் காணப்படுவதால் என்றபடி.

இவ்வாறு உத்கீதோபாஸனம் அங்கமில்லையெனில், அதை ஏன் விதிக்க வேண்டும்? என்றால், ***ப்ருதக்ஹ்யப்ரதிபந்த: பலம்;*** கர்மபலத்தைக் காட்டிலும் வேறாக - அப்ரதிபந்தம் - தடையின்மையே பலமாம் கர்மத்துக்கு வீர்யவத்தரத்வம் ஏற்படுத்தலே உபாஸனபலம், அதாவது ப்ரபலமான வேறு

கர்மபலத்தால் விளம்பம் ஏற்படாமல் சீக்கிரம் பலம் தருவதாம். அதாவது, ஜுஹ்வா ஜுஹோதி என்ற வாக்யம் ஜுஹு என்ற சாதனம் கொண்டு ஹோமம் செய்யச் சொல்லிற்று. பின்னர் ''யஸ்யபர்ணமயீஜுஹூர் பவதி நஸபாபம் ச்லோகம் ச்ருணோதி'' அந்த ஜுஹு இலைவடிவாய் இருந்தால் யஜமானன் பாபச்லோகத்தைக் கேட்காத நிலை ஏற்படும் என்று ஒரு பலனைத் துதித்தது. ப்ரதானகர்மத்தின் பலனே பர்ணமயமான ஜுஹூவுக்கும் பயனாகும். பர்ணமயத்வம் என்பது ஜுஹூவின் மூலம் அங்கமாகிறது. உத்கீதோபாஸனம் அப்படியன்று; ஏனெனில், அதை உபாஸிப்பவனும், உபாஸியாதவனும் க்ரதுவை யனுஷ்டிக்க முடியும். ஆதலாலும், யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம் பவதி என்று பலத்தின் சாதனமென்பதை மூன்றும் வேற்றுமை யுணர்த்துவதால் - க்ரதுவின் பலமான ஸ்வர்க்காதிகளைத்தவிர வீர்யவத்தரத்வம் என்ற தனிப்பலம் ச்ருதியில் காணப்படுவதாலும் கர்மாங்கமான உத்கீதோபாஸனத்தை த்வாரமாகக் கொண்டு உத்கீத உபாஸனத்துக்கு அங்கத்வமில்லை. எப்படியெனில்.

''கோதோஹனேன பசுகாமஸ்ய ப்ரணயேத்'' என்றவிடத்தில் பசுவை விரும்புபவன் அதைக்கறந்து ப்ரணயனம் செய்யவேண்டும். விருப்பம் இல்லாதவன் செய்யவேண்டியதில்லையென்பதால் நியமமில்லையாதலின் ப்ரணயனம் அங்கமானதில்லை. அதுபோல அநியதத்திற்கு அங்கத்வமில்லை-யென்பதாம்.

## 100 ப்ரதானுதிகரணம்

## 393 (௬௩) ப்ரதானவதேவ ததுக்தம்

முன் அதிகரணம் ப்ரஸங்கத்தால் வந்தது. அதற்கு முன் தஹரவித்யாநிரூபணம் செய்யப்பட்டதுடன் ஸங்கதி. தஹரவித்யையில் ''தத்ய இஹாத்மானமனுவித்ய வ்ரஜந்தி ஏதாம்ச்ச ஸத்யான்காமான்'' என்று பரமாத்மஸ்வரூப சிந்தனமும், அபஹதபாப்மத்வாதி குண சிந்தனமும் விதிக்கப்பட்டுள்ளன. இங்கு குணசிந்தனவிஷயத்தில் அந்த குணங்களோடு கூடினவனுகப்பரமாத்ம சிந்தனம் ஆவ்ருத்தி செய்யத்தக்கதா அல்லது தேவையில்லையா என்று சம்சயம். ஸர்வகுணங்களுக்கும், உறைவிடமான பரமாத்மா-ஒருவனேயாதலின், ஒரே முறை சிந்தித்தால் போதும். ஆவ்ருத்தி வேண்டாம் என்பது பூர்வபக்ஷம்.

***ப்ரதானவத் :*** 'ஆவர்த்தனீயம்' என்று வருவித்துக்கொள்ளவேண்டும் இந்த்ராய ராஜ்ஞே புரோடாசம் இந்த்ராயாதிராஜாய இந்த்ராய ஸ்வராஜே என்று உத்திஷ்டனான ஒரே இந்த்ரன் ராஜத்வாதி விசிஷ்ட வேஷத்தாலே

வேறு தேவதையென்று ஒப்புக்கொண்டு, புரோடாசே ப்ரதானம் ஆவ்ருத்தமாவது போல் குணிஸ்வரூபம் ஒன்றானாலும் குணவிசிஷ்ட ஆகாரபேதத்தால் தர்மி சிந்தனம் ஆவ்ருத்தி செய்யத்தக்கது. ஸங்கர்ஷண காண்டத்தில் இவ்வர்த்தம் காட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள விசேஷமிது: இங்கு அபஹதபாப்மாவிரஜ: என்று ப்ரத்யேக குணானுஸந்தானமும், வ்ராஜந்த்யேதாம்ச்ச ஸத்யான் காமான் என்று ஒன்று சேர்த்து அநுஸந்தானமும் விதிக்கப்பட்டது. இவ்விதம் இரு வகைப்பட்ட குணானுஸந்தானத்திலும் தர்மியை விட்டு குணானு ஸந்தானம் பொருந்தாது. ஆகையால் ப்ரஹ்மானு ஸந்தானம் தானே ஸித்தமானதால் விவாதமின்மையால் அதிக சங்கைக்கு அவகாசமில்லை - ஆக அதற்கேன் ஸமாதானம் என ஓர் கேள்வி.

ஸர்வவித்யைகளுக்கும் ஸாதாரணமும் ஸாமான்ய குணங்களுமான ஸத்யத்வ ஜ்ஞானத்வ, அனந்தத்வாதி ஸ்வரூப நிரூபகதர்மங்களுடன் குணியின் அனுஸந்தானம் ப்ராப்தமானாலும், அவற்றைவிட்டு வேறானதாய், அநந்தவித்யா விசேஷங்களில் நியதமாயுமுள்ள ஸ்தானுதி விசேஷணங்கூடிய ப்ரஹ்மத்துக்கு ஆவ்ருத்தி சிந்தை கூடுமாதலின், தவறில்லையென்பதால். ஸமாதானம் கூறுகிறது.

## 101 லிங்க பூயஸ்த்வாதிகரணம்

முன் அதிகரணத்திலுள்ள தஹரவித்யா வாக்யத்தோடு ஏகவாக்யமாகையால் ஸங்கதி; தைத்திரியத்தில் தஹரவித்யானந்தரம் படிக்கின்ற "ஸஹஸ்ர சீர்ஷம் தேவம் விச்வாக்ஷம் விச்வசம்புவம், விச்வம் நாராயணம்" முதலிய இந்த அனுவாகத்தில் உபாஸனம் விதிக்கப்படவில்லை. இதற்குமுன் அனுவாகத்தில் சொல்லப்பட்ட தஹரவித்யைக்கு உபாஸ்யனானவனை நிர்த்தாரணம் செய்வது பலமா அல்லது ஸகல பரவித்யா வேத்ய விசேஷத்தை நிர்த்தாரணம் செய்வது பலமா? என்று சம்சயம். தஹர வித்யைக்கடுத்தாற் போல் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அந்த உபாஸ்ய விசேஷணத்தைத் தீர்மானிப்பதே வாக்யத்தின் பலமென்று பூர்வபக்ஷம், ஸஹஸ்ரசீர்ஷம் தேவம் என்று குறித்துள்ள த்விதீயைக்கு. அடுத்து சொல்லப்பட்ட உபாஸனத்துடன் ஸம்பந்தம் சொல்வதே யுக்தமாகையால் என்பது பூர்வபக்ஷம். அதனை நிரஸிக்கிறார்.

## 394 (௩-௩) லிங்க பூயஸ்த்வாத் தத்தி பலீய: ததபி

ஸகலமான பரவித்யைகளிலும் உபாஸ்யமானது எது என்று நிச்சயிக்க **லிங்க பூயஸ்த்வாத்**=லிங்கங்கள் ஏராளமாக இருப்பதால் அதுவே யுக்தக வேத்ய விசேஷத்தை நிர்ணயம் செய்வதில் சிஹ்னமான வாக்கியங்கள் நிறைய இருப்பதால் என்றவாறு; **தத்தி**=அந்த வாக்யம் தான் *பலீய:* வலிமை மிக்கது

ப்ரகரணத்தை விட ப்ரபலமானது. இவ்விஷயம் பூர்வ மீமாம்சையில் ச்ருதி லிங்கவாக்ய ப்ரகரணஸ்தான ஸமாக்யைகளுள் பிந்தியதைவிட முந்தியவை ப்ரபலமானவை என்று சொல்லப்பட்டது. இப்படி நிச்சயிக்கும் விஷயத்தில் தஹர வித்யையிலும் இவனே உபாஸ்யனென்று காட்ட பத்மகோசப்ரதீகாசம் முதலியவற்ருல் ஹ்ருதயம் முதலியவற்றைக் கூறுவதும் பொருத்தமே. ஆகவே ஸஹஸ்ரசீர்ஷம் என்ற த்வீதியாச்ருதியோ தஹர வித்யோபாஸ்யனேடு ஸம்பந்திக்கவில்லே. ஏனெனில், தஸ்மின்யதந்த: ததுபாஸிதவ்யம் என்று க்ருத்ப்ரத்யத்தால் உபாஸந க்ரமம் அபிஹிதமாகையால் என்று கருத்து. இங்கு ஸஹஸ்ர சீர்ஷம் தேவம் என்று வித்யை குறிப்பிட்டது-நாராயண: பர: ஸ்தித: பரமாத்மாவ்யவஸ்தித: முதலியவற்ருேடு ஒத்திருப்பதால் ப்ரத மார்த்தத்தில் வந்தது. ஆகையால் - அந்தந்த பரவித்யைகளிலுள்ள பர ப்ரஹ்ம, பரதத்வ பரம்ஜ்யோதிஸ், பரமாத்மா, அக்ஷி சிவ, சம்புசப்தங்களால் அந்தந்த உபாஸ்யர்களைக் கூறி ப்ரகரணத்தைக் காட்டிலும் பலவத்தான வாக்யத்தாலே அவர்களுக்கு நாராயணத்வத்தை விதிப்பதால் இந்த அனுவாகம் பரவித்யாவேத்ய விசேஷத்தை நிர்த்தாரணம் செய்வதற்கானது என்று ஸித்தம்.

## 102 பூர்வவிகல்பாதிகரணம்

### 395 (ஸூ௪) பூர்வவிகல்ப: ப்ரகரணுத்ஸ்யாத் க்ரியா மானஸவத்

ப்ரகரணத்தைக் காட்டிலும் பலம்மிக்க வாக்யத்தாலே நாராயணனு வாகத்துக்கு ஸர்வவித்யா ஸாதாரணத்வம் சொல்லப்பட்டது. இங்கு ப்ர கரணத்துக்கு எந்த பாதகமுமில்லாமையால் மநச்சிதாநி அக்னிகள் க்ரியாமயமான க்ரதுவில் அனுப்ரவேசிப்பவை யென்று சங்கையால் சங்கதி.

வாஜஸநேயக அக்னிரஹஸ்யத்தில் - மனச்சிதோவாக்சித: ப்ராணசித: சக்ஷுச்சித: முதலிய அக்னிகள் வித்யைகளின் ரூபங்களாகக் கூறப்படுகின்றன. இவை க்ரியாமயமானக்ரதுவிற்கு அங்கங்களா? வித்யாமயக்ரதுவிற்கு அங்கங்களா? என சம்சயம். இந்தப்ரகரணத்தில் வித்யாமயக்ரது சம்பந்த-முள்ள க்ரஹம், ஸ்தோத்ரம் முதலியன காணப்பட்டாலும் வித்யாமயக்ரதுவிதி யில்லாமையாலும் க்ரதுவிதிக்கு உபயுக்தமான பலாந்தரம் கூறப்படாமையாலும் முன்பு அஸத்வா இதமக்ர ஆஸீத் என்று தொடங்கி இஷ்டகசித அக்னி பற்றிப் பேசப்படுவதால், மனச்சிதாத்யக்னிகளில் ஒவ்வொன்றிலும், தாவான்யாவானஸௌபூர்வ: என்று இஷ்டக சிதாக்னிகார்யத்தை அதிதேசம் செய்வதால் இஷ்டகசிதாக்னியோடு மனச்சிதாதிகளுக்கு விகல்பம் தோன்றுவதால் இஷ்டகசிதாக்னி சேஷிபூதமான க்ரியாமயக்ரதுவிற்கு அங்கங்களென்கிற பூர்வபக்ஷத்தை இருஸூத்ரங்களில் நிரஸிக்கிருர்.

*க்ரியாஸ்யாத்:* மனச்சிதாதிகள் க்ரியாமயக்ரதுவிற்கே அங்கமானவை *ப்ரகரணாத்:* ப்ரகரணத்தில் அவ்வாறு சொல்லப்படாவிட்டாலும் முன் ப்ரக்ருத மான இஷ்டக சிதாக்னியால் தெளிவான க்ரியாமயக்ரது ப்ரகரணமாகையால் விகல்பம் க்ரியாமயக்ரத்வங்களால் மனச்சிதாதிகளும் அக்னியாகையாலே அதுக்கு இஷ்டகசிதாக்னியுடன் விகல்பம். வித்யா ரூபங்களான மனச்சிதாதிகளுக்கு க்ரியாமயக்ரத்வங்கத்வம் எப்படிக்கூடும் என்றால், *மானஸவத்:* த்வாதசாஹாங்கமான மானஸக்ரஹமானது மனத்தால் தயாரிக்கவேண்டிய க்ரஹண ஸாதனமான ஸ்தோத்ர ஸ்த்ராதிகளைக் கொண்டிருப்பதால் வித்யா ரூபமாயிருந்தாலும். அந்த க்ரஹத்துக்கு க்ரியாமயக்ரத்வங்கத்வத்தால் க்ரியாமயத்வம் இருப்பது போல் இங்கும் கூடுமென்பதால்.

## 396 (ஸூ) அதிதேசாத்

அவற்றிற்கு ஓவ்வொன்றிற்கும். தாவான்யாவாநஸௌபூர்வ: என்று மனச்சிதாதிகளில் பூர்வேஷ்டக சிதாக்னிகார்யத்தில் அதிதேசத்தாலும், இஷ்டக சிதாக்னியோடு மனச்சிதாதிகளுக்கு விகல்பம் தோன்றுகிறது. அதனால் இவ்விகல்பம் மனச்சிதாதிகளுக்கு இஷ்டக சிதாக்னிக்கு சேஷியான க்ரியாமயக்துவின் அங்கத்வம் இன்றி ஸம்பவிக்காது. ஆதலின், மனச்சிதாதிகள் அதற்கங்கங்கள், என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

## 397 (ஸூ) வித்யைவது நிர்த்தாரணாத் தர்சனாச்ச

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது. மனச்சிதாதிகள் வித்யைவ: வித்யாமயக்ரதுவின் அங்கங்களே. ***நிர்த்தாரணாத்*** மனச்சிதாதிகளுக்கு மனதால் ஸம்பாதிக்கப்பட்ட அக்னித்வம் ஸித்தமானாலும் வித்யாசிதஏவ என்றும் இதற்கு உரையாக வித்யயா ஹைவைதே ஏவம் விதசகிதாபவந்தி என்றும் தீர்மானிக்கையால், இந்தத் தீர்மானம் மனச்சிதாதிகளுக்கு வித்யாமய-க்ரத்வங்கதயைவ வித்யாமயத்வம் சித்திப்பதற்காக *தர்சனாச்ச* அங்கேயே வித்யாமயக்ரது காணப்படுவதால் என்றபடி மனைஸஷு க்ரஹாக்ருஹ்யந்தே மனஸாஸ்துவந்தி என்னுமிடத்தில் மனஸாத்ரஷ்டும் என்று கருத்து. ஆக இந்த இரண்டு ஹேதுக்களால் மனச்சிதாதிகளுக்கு வித்யாமயக்ரத்வங்கத்வம் ஸித்தமாகிறது.

ஆமாம்: வித்யாமயக்ரதுவில் விதிக்கும் பதம் காணப்படாமையாலும் பல சம்பந்தம் தோன்றாமையாலும் ப்ரகரணத்திலுள்ள இஷ்டக சிதாக்னியில் தோற்றம் க்ரியாமய க்ரத்வங்கத்வம் தோன்றுவதாலும். ப்ரகரணத்தால் வித்யாமயக்ரத்வங்கத்வம் பாதிக்கப்படுகிறது என்ற சங்கையைப்பரிஹரிக்கிறார்

## 398 (ஸூ) ச்ருத்யாதி பலீயஸ்த்வாச்ச நபாத:

ச்ருத்யாதிகள் ப்ரகரணாதிகளைவிடப்பலம் பொருந்தியவையாதலின் ச்ருத்யாதிகளால் அறியப்படும் வித்யாமயக்ரத்வன்வயம், ப்ரகரணத்தால் பாதிக்கப்படமாட்டாது. இதில் ச்ருதியாக ஸ்ரீ பாஷ்யத்தில் "தேஹைதே வித்யாசிதஏவ" என்றும் இதற்கு விவரணமான வித்யயாஹைவைதே ஏவம் விதச்சிதாபவந்தி எனவும், இரண்டு வாக்கியங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் அர்த்தம்-ஏவம் வித:=மனஸ்சக்ஷுஸ் ஆதிகளின் வ்யாபாரங்களில் அத்வித்வத்தைச் சம்பாதிக்கும் புருஷனுக்கு தே=மனச்சிதாத்யக்னிகளும் வித்யயா=ப்ரதானவித்யையால்=சிதா பவந்தி என்றர்த்தம்.

ஆமாம்: மனஸா ஏஷு க்ருஹா அக்ருஹ்யந்த முதலியவற்றில் வித்தி பதம் காணாததால் வித்யாமயக்ரதுவிற்கு விதியில்லை. அதனால் வித்யாமய க்ரதுக்களில் அன்வயம் கூடாதென்ற சங்கையை நிரஸிக்கிறார்.

## 399 (ஸூ) அனுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தரப்ருதக்த்வவத் த்ருஷ்டச்ச தது க்தம்

*அனுபந்தாதிப்ய:* மானஸக்ருஹஸ்தோத்ர சஸ்த்ர ரூபங்களான யஜ்ஞானுபந்தங்களால் இஷ்டகசிதான்வயியான க்ரதுவைக் காட்டிலும் இங்கு விதிக்கப்படும் க்ரதுவுக்கு *ப்ருதக்த்வம்*=வேறுபாடு தோன்றுகிறது. *ப்ரஜ்ஞாந்தர ப்ருதக்த்வவத்*: தஹரவித்யாதி ரூபங்களான ப்ரஜ்ஞாந்தரங்களுக்கு வேறுபாடு-ஹேதுக்களால் தோன்றுவதுபோலவேயென்றபடி, *அனுபந்தாதீ* ஆதிபதத்தினால் முன்கூறியச்ருதி முதலியவை சொல்லப்படும். ஆகவே ச்ருத்யாதிகளாலும் அனுபந்தங்களாலும் வித்யாமயவிதியானது கல்பிக்கப் படுகிறதென்று பொருள். *த்ருஷ்டச்ச*=வாக்யம் அனுவாதம் போலிருந்தாலும் விதிகல்பனம் காணப்படுவதே; யதேவவித்யயாகரோதி முதலியவற்றில் எப்படி விதியானது கல்பிக்கப்படுகிறதோ அப்படியென்று கருத்து. பூர்வ மீமாம்ஸையில், *ததுக்தம்*=" நவசனுநித்வபூர்வத்வாத் " என்று விதிகல்பனம் சொல்லப்பட்டது என்பதாம். அதிதேசத்தாலும், மனச்சிதாதிகளுக்கு இஷ்ட கசிதாக்னிசேஷிபூத க்ரியாமய க்ரத்வங்கத்வம் தோன்றுகிறதே என்ற சங்கையைப்பரிஹரிக்கிறார்.

## 400 (ஸூ) ந ஸாமான்யாதப்யுபலப்தே: ம்ருத்யுவத் நஹி லோகாபத்தி:

*ஸாமான்யாதப்யுபலப்தே*: ந=ஏதேனுமொரு ஸாமான்ய தர்மத்தையிட்டு அதிதேசம் பொருத்தமாகையாலே அதிதேசத்தால் க்ரியாமயக்ரதுவின் அங்கத்வம் மனச்சிதாதிகளுக்கு அவசியம் ஏற்கவேண்டியதில்லை. ஏனெனில், *ம்ருத்யுவத்*=ஸஏஷ ஏவம்ருத்யு: யஏஷ ஏதஸ்மின் மண்டலேபுருஷ: என்று

ஸம்ஹர்த்தா என்ற ஸாமான்ய தர்மத்தையிட்டு மண்டலபுருஷனே ம்ருத்யு-வாக அதிதேசம் செய்தாற்போல இங்கும் இஷ்டக சிதாக்னிக்கு ஸ்வக்ரதுவின் ஸாத்குண்யம் பலமானாற்போல் மனச்சிதாதிகளுக்கும் வித்யாமயக்ரது ஸாத் குண்யமே பலம் என்கிற ஸாமான்ய தர்மத்தையிட்டு அதிதேசிக்கக்குறை-யில்லை.

*நஹிலோகாபத்தி* : மண்டலபுருஷனுக்கு ம்ருத்யுலோகப்ராப்தியில்லாதது போலே இஷ்டக சிதாக்னி அதிதேசத்தால் தததிதேசபூக க்ரியாமயக்ரதுவில் அனுப்ரவேசம் மனச்சிதாதிகளுக்கு வராது என்பது கருத்து.

## 401 (ஸூ) பரேணச சப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத்து அநுபந்த:

*பரேண* = ப்ராஹ்மணத்தால், *சப்தஸ்ய* = இந்த மனச்சிதாதிகளைக் கூறும் சப்தத்திற்கு, *தாத்வித்யம்* : தத்விதத்வம் வித்யாமய ப்ரதிபாதகத்வம், தோன்றுகிறது, பரப்ராஹ்மணத்திலோ வென்றால் அயம் வாவலோக ஏஷோऽக்னிசித: தஸ்யாப ஏவ முதலியவற்றால் தனிப்பலமுள்ள வித்யை விதிக்கப் படுகிறது. அக்னிரஹஸ்யத்திலோவெனில், க்ரியைதான் விதிக்கப்படுகிறது. ஆகையால், மனச்சிதாதிகளுக்குக் க்ரியாமயக்ரத்வங்கத்வம் கிடையாது. ஆனால் க்ரியாப்ரகரணத்தில் மனச்சிதாதிகளுக்கு அனுபந்தம் எப்படிக் கூடுமென்றால், *பூயஸ்த்வாத்து அனுபந்த:* ஸம்பாதனீயமான அங்கி அங்கங்கள் ஏராளமாதலின், அனுபந்தம்கூடும். ஆதலின், வித்யாமயக்ரத்வங்கத்வம் மனச்சிதாதி அக்னிகளுக்கு ஸித்தம்.

## 103 சரீரேபாவாதிகரணம்

## 402 (ஸூ) ஏக ஆத்மநச்சரீரே பாவாத்

முன் அதிகரணம் ப்ரஸங்கத்தால் வந்தது. அதனால் - அதன் முன்-அதிகரணத்தோடு ஸங்கதி சொல்லத்தக்கது. அங்கு எல்லாவித்யைகளிலும் ப்ரஹ்மத்திற்கே உபாஸ்யத்வம் சொல்லப்பட்டது. அவ்விதமே ப்ரத்யகாத்-மாவும் அனுஸந்திக்கத்தக்கதென்று ஆக்ஷேப ஸங்கதி.

ஆத்மேதிதூபகச்சந்தி என்னும் ஸூத்ரத்தால் ப்ரத்யகாத்மாவுக்கும் ஆத்மா பரமாத்மாவேயென்று சொல்லப்போகிறார். அதில் சரீரத்திலுள்ள ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபம், கர்த்தா - போக்தா முதலியவிதத்தில் அனுஸந் திக்கத்தக்கதா அன்றி ப்ரஜாபதிவாக்கியத்திலுள்ளபடி அபஹத பாப்மாமுதலிய எட்டு குணங்களுடன் கூடியதாக அனுஸந்திக்கத்தக்கதா என்றும். கர்மவிதி களில் போலவே உபாஸன விதிகளிலும் அப்படி கர்த்ருத்வ போக்த்ருத்வாது

ஸந்தானத்தால் தானே ஸாதனுனுஷ்டானமும் தத்பலங்களும் ஸம்பவிக்-கையால் தத்க்ரதுந்யாயப்படி எப்படி எப்படி உபாஸிக்கிருர்களோ அப்படி-யப்படி பயனைப், பெறுவர் என்பதுடன் ஒரே அர்த்தமுள்ளதாதலின் பரமாத்ம விஷயமேயென்று பூர்வபக்ஷம் இந்த சூத்திரத்தால் காட்டப்படுகிறது.

***ஏகே*** = கர்த்ருத்வாதி விசிஷ்டமான ஆத்மஸ்வரூபமே அனுஸந்தேயம் என்று சிலர் எண்ணுகின்றனர். ***சரீரே ஆத்மந: ததா பாவாத்***: சரீரத்தில் உபாஸகனை ஆத்மா அவ்வாறு கர்த்ருத்வாதிகளுடன் இருப்பதால் என்றபடி இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிருர்.

## 403 (ஸூ) வ்யதிரேக: தத்பாவ பாவித்வாத் நதூபலப்திவத்

முன் சொன்னபடி கர்த்ருத்வாதி விசிஷ்டமாக அனுஸந்தேயமன்று ***வ்யதிரேக***: = ஸாம்ஸாரிக ஸ்வரூபத்தைக் காட்டிலும் முக்தஸ்வரூபத்திற்கு உள்ள வேறுபாடு அனுஸந்திக்கத்தக்கது *தத்பாவபாவித்வாத்*: அப்படி அபஹதபாப்மத்வாதிகளே ஜீவனுக்கு ப்ராப்யாகாரமாதலின், அத்தகைய ஆகாரத்துடன் கூடியவனுகவே ஆத்மா உபாஸனதசையில் அனுசந்திக்கத் தக்கது என்று கருத்து. *உபலப்திவத்* – ப்ரஹ்மஸ்வரூப - ப்ராப்தியானது யதாவஸ்திதப்ரஹ்மோபாஸகனுக்கு நடப்பதுபோலவே ஜீவஸ்வரூபத்திலும் ஸமமென்பது கருத்து.

தத்த்வமஸி ஸதே ஆத்மாZத்தர்யாம்யம்ருத: என்று ப்ரத்யகாத்மாவுக்கும் ஆத்மாவாகப் பரமாத்மா உபாஸ்யன் என்று கூறப்படுகிறது. அதனுல், ப்ரத்யகாத்மாவும் சரீரமாக உபாஸனையில் உள்ளடங்கியவன். பரம்ஜ்யோதிரூபஸம்பத்ய ஸ்வேன ரூபேன அபிநிஷ்பத்யதே என்று உண்மையான ஸ்வரூபம் உடையவனுக்கே ப்ரஹ்மானுபவம் பலம், ஆகையால் யதாக்ரதுந்யாயம் பரமாத்மாவை மட்டும் பற்றியதல்ல, ப்ரத்யகாத்மபூத உபாய விஷயமுமாதலால், ப்ரஜாபதி வாக்யத்தில் கூறப்பட்ட அபஹத-பாப்மத்வம் முதலிய குணவிசிஷ்ட ஸ்வரூபமே அனுஸந்திக்கத்தக்கது. ஆனுல், கர்ம விதியில் கர்த்ரு ஸ்வரூபானுஸந்தானம் ஸாதனத்தில் அடங்கியதன்று என்பதே விசேஷமென்பது கருத்து.

## இங்கு ஓர் விசேஷம்

உபயவிபூதி விசிஷ்டனை ப்ரஹ்மம் ப்ராப்யம். ஆகையால், அதற்கேற்ற உபாஸநம் ப்ராப்தமாகும். பத்தனின் ஸ்வரூபம் பற்றி ஏன் சிந்திக்கக்கூடாது என்னில், ச்ருதிப்படி அப்படி அனுஷ்டிக்கவேண்டி இருப்பதால் ‘ அஹம் ’ என்ற எண்ணத்தால் ஜீவோபாஸனம் ப்ராப்தமாதலின்

அஹம் சப்தத்திற்கு முக்யார்த்தமான சுத்த ஜீவாத்ம ஸ்வரூபமே உபாஸ்யம் என்றும், 'அசுத்தாஸ்தேஸமஸ்தாஸ்து' என்றபடி அசுத்தஸ்வரூப உபாஸனம் நிஷித்தமாகையால் உள்ளடங்காதது என்பது ஸூத்ரகாரர் திருவுள்ளம்.

## 104 அங்காவபத்தாதிகரணம்.

### 404 (ஸூ) அங்காவபத்தாஸ்து நசாகாஸு ஹி ப்ரதிவேதம்

முன் அதிகரணத்தில் ப்ரஹ்மத்திற்கு உபாஸ்யத்வம் நியதமான இடங்களிலெல்லாம் சுத்த ஜீவனுக்கே உபாஸ்யத்வம் கூறப்பட்டது. இங்கு உத்கீதானுப்ரவேசம் உள்ள சாகைகளிலெல்லாம், உத்கீதாத்யுபாஸனானு ப்ரவேசமுண்டா இல்லையா என சம்சயம். முன்பு உத்கீதாத்யுபாஸனத்திற்கு பேத அபேத சிந்தை செய்யப்பட்டது பின்னர், உத்கீதோபாஸனத்திற்கு கர்மபலத்தைத் தவிர்த்து வேறுபலம் இருப்பதால் ப்ரஸங்கத்தால் புருஷார்த் தத்வம் சிந்திக்கப்பட்டது. தற்போது ஓரிடத்தில் கூறப்பட்ட உத்கீதோ பாஸனத்திற்கு எங்கும் சொல்லப்படும் உத்கீத ஸாமான்யசேஷத்வம் கூறப்படுகிறதென்று ஸங்கதி. பொருள் வேறுபடுவதால் கூறியது கூறலெனும் தோஷமில்லை. 'ஓமித்யேதத்க்ஷரம் உத்கீதமுபாஸீத' என்று உத்கீதாதிகள் க்ரத்வங்க விஷயங்களான உபாஸனைகளாகக் கூறப்படுகின்றன. அவை எந்த சாகையில் உள்ளனவோ அங்குமட்டும் பயன்படுத்தத்தக்கவையா? அல்லது எல்லா சாகைகளிலும் சம்பந்தமுடையவையா என்று சம்சயம். சாகைகள் தோறும் ஸ்வரம் மாறுவதால் அதைக்கொண்டு உத்கீதம் பின்னம் ஆகையால் எங்கு உபாஸனம் கூறப்பட்டதோ அங்கு நெருங்கியிருப்பதால் அவற்றுடன் சேர்ந்து அவ்விடத்திலேயே பயன்படுத்தத் தக்கவையென்று பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

அங்காவபத்தா: = கர்மாவின் அங்கமான உத்கீதவிஷயமான உபாஸனைகள், நசாகாஸு = படிக்கப்பட்ட சாகைகளுக்கு மட்டும் உரியவையல்ல. ஆனால்,

*ப்ரதிவேதம்* ஸர்வ சாகைகளிலும், உத்கீதாதிகளோடு ஸம்பந்திக்கின்றன ஹி, ஏனெனில், உத்கீதமுபாஸீத என்று உத்கீத ஜாதீயம் என்ற வேறுபாடின்மையால் ஸர்வ உத்கீத ஸம்பந்தம் உபாஸனத்துக்கு ப்ராப்தமாதலின் என்பதாம்.

### 405 (ஸூ) மந்த்ராதிவத்வா அவிரோத:

வாசப்தம் 'ச' என்ற பொருளில் க்ரத்வங்கமான மந்த்ரங்கள் வெவ்வேறு சாகைகளிலிருந்தாலும் க்ரது எல்லா சாகைகளிலும் ஒன்றேயாதலின் மந்த்ரங்களுக்கும் சம்பந்தம் எல்லா சாகைகளிலும் விரோதமற்றதென்பது

போல், இங்கும் ஸர்வோத்கீதங்களும் உபாஸனத்தோடு சம்பந்திப்பதில், விரோதமில்லை. இதனால் எல்லாசாகைகளிலும் உத்கீதம் அனுவ்ருத்தமாவதால், எல்லாசாகிகளுக்கும் உத்கீதத்தில் அதிகாரமுண்டென்று ஆயிற்று.

## 105 பூமஜ்யாயஸ்த்வாதிகரணம்

## 406 (ஸ௭) பூம்ன க்ரதுவத்ஜ்யாயஸ்த்வம் ததாஹி தர்சயதி

முன்னதிகரணத்தில் உத்கீதம் பற்றிய ப்ரஸ்தாவம்வந்தது. அதில் ஸாமாவயவமான உத்கீதாதிகளில் ஸமஸ்த உபாஸனமும் ச்ருதியில் ப்ரசித்தம் இதேபோல் வைச்வாநரவித்யையிலும் ஸமஸ்தோபாஸனம் செய்யத்தக்கதா? வ்யஸ்தோபாஸனம் செய்யத்தக்கதா? அன்றி இரண்டு உபாஸனமுமா? என்று சங்கையால் ஸங்கதி. வைச்வாநரவித்யையில் ஸ்வர்க்கம், ஆதித்யன், வாயு, ஆகாசம், அப்பு, ப்ருதிவீ இவற்றை அவயவமாகக்கொண்டுள்ள வைச்வாநரன் உபாஸ்யனென்று கூறப்பட்டால், அதில் வ்யஸ்தோபாஸனம் செய்யத்தக்கதா? அல்லது வ்யஸ்தஸமஸ்த உபயஉபாஸனம் செய்யத்தக்கதா? அன்றி ஸமஸ்தோபாஸனம் செய்யத்தக்கதா என்று சம்சயம்.

ஔபமன்யவ! நீ எதை ஆத்மாவாக உபாஸிக்கிறாய்? என்று கேகய மன்னன் கேட்க, ஔபமன்யவாதிகள் ஆறு பேரும் ஸ்வர்க்கலோகம், ஆதித்யன், வாயு ஆகாசம் அப்பு, ப்ருதிவீ என்ற ஆறையும் தனித்தனியே வைச்வாநரமாக உபாஸிப்பதாகச் சொன்னார்கள். அதைக்கேட்ட கேகயன், ஸ்வர்க்கத்தைத் தலையாகவும், ஆதித்யனைக் கண்ணென்றும், வாயுவை ப்ராணனென்றும், ஆகாசம் உடலின் நடுப்பகுதியென்றும், அப்பு மூத்ரஸ்தானமென்றும், ப்ருதிவீ பாதமென்றும் வைச்வாநரனின் அவயவங்களைக் கூறி ஆங்காங்கு வ்யஸ்தோபாஸனமும், அதன் பலனும் கூறப்பட்டன. பிறகு "யஸ்த்வேத மேவம் ப்ராதேசமாத்ரம் அபிவிமானம் ஆத்மானம் உபாஸ்தே யென்று முன்கூறிய வ்யஸ்தோபாஸனமே ஸமுதாயமாக முடிக்கப்பட்டது. ஆகவே வ்யஸ்தத்தை உபாஸிக்க வேண்டுமென்று பூர்வபக்ஷம்.

மற்றொருவர் கூறுகிறார்: ஸமஸ்த உபாஸனமும் செய்யத்தக்கது ஏனெனில், ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷு ஆத்மஸு சாந்நமத்தி என்று வ்யஸ்த உபாஸன பலத்தைக்காட்டிலும் வேறுபலத்தை விதிக்கையால், வ்யஸ்தம் ஸமஸ்தம் என்ற இரண்டு உபாஸனங்களும் அனுஷ்டிக்கதக்கதென்று இரண்டாவது பக்ஷம். இவ்விரண்டு பக்ஷங்களையும் நிராகரிக்கிறார்.

### (ஸூ) பூம்ன: க்ரதுவத் தர்சயதி

பூம்ன: = விபுலமான ஸமஸ்த உபாஸனத்திலும் என்பதாம். ஜ்யாயஸ்த்வம்: ஜ்யேஷ்டத்வம்: ப்ராமாணிகத்வம் என்பதாம். ஏனெனில்,

வ்யஸ்த ஸமஸ்த உபாஸனா வாக்யங்களுக்கும், ஏகவாக்யத்வம் தோன்றுவதால் *க்ரதுவத்:-* வைச்வாநரம் த்வாதசகபாலம் நிர்வபேத்புத்ரேஜாதே என்று விதிக்கப்பட்ட க்ரதுவின் ஏகதேசங்களான அஷ்டாகபாலங்களே 'அஷ்டாகபாலோ பவதி' என்று அனுவாதம் செய்யப்படுகிறது போல் இங்கும் ஏகதேசஉபாஸனங்களும் அவற்றின் பலங்களும் ஸமஸ்தோபாஸன ஏகதேசானுவாதரூபம், ஆகையால், ஸ்துதிரூபங்களென்பதாம். *ததாஹிதர்சயதி* ஸமஸ்தஉபாஸனத்திற்கு ஜ்யாயஸ்த்வத்தை ச்ருதியே சொல்கிறது. மேலும் என்னையறிந்து கொள்ளாவிடில், உன் தலை விழுந்துவிடும் என்று வ்யஸ்த உபாஸனத்தினால் அநர்த்தத்தையும் சொல்கிறது. *இதனால் தெரிவதாவது :* நீ அத்யயனம் செய்யும் வைச்வாநரம் என்னும் ஆத்மாவைச் சொல்லும் என்று கேட்டதும் கேகயர் வைச்வாநராத்மாவுக்கு ஸ்வர்க்கம் முதல் ப்ருதிவீ வரை - தலைமுதல் கால்வரையான அவயவங்களாகச் சொல்லி, யஸ்த்வேத தேவம் ப்ராதேச மாத்ரமபிவிமானம் ஆத்மானம் வைச்வாநர முபாஸ்தே ஸஸர்வேஷு லோகேஷு என்று முடிப்பதால் ஒரே வைச்வாநராத்மாவுக்கே. த்ரைலோக்ய சரீரக பரப்ரஹ்மத்வம் இருப்பதால் அதனுபாஸனத்தை விதித்து பலமாக ஸர்வேஷு ஆத்மஸு அந்நமத்தி என்றும் தத்யதேஷீகதூலம் அக்னௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வேபாப்மான : ப்ரதூயந்தே என்றும், ஸர்வாத்மாக்களுக்கும் போக்யமான பரமாத்மானுபவம் என்றும், விரோதியான ஸர்வபாபங்களைக் கடத்தல் என்றும் கூறியதாகத் தோன்றுகிறது. ஆகவே ஒரே வாக்யமாகையால் ஸமஸ்தத்தையே உபாஸனம் செய்யவேண்டும். ஆனால் வ்யஸ்தாதிகளில் உபாஸனமோ ஸ்வர்லோகாதிகளுக்குத் தலை முதலிய அவயவங்கள் என்று காட்ட; - ஏகதேசத்தில் பலனைக் கூறியதும் அனுவாதத்தில் ஸ்துதியே என்பது கருத்து.

## 106 சப்தாதிபேதாதிகரணம்

## 407 (ஸூ) நாநாசப்தாதி பேதாத்

முன் அதிகரணத்தில் வித்யாவிசேஷம்பற்றி சிந்திக்கப்பட்டது. இங்கு எல்லா வித்யைகள் பற்றியும் பொதுவாக சிந்திக்கப்படுகிறது. அல்லது வைச்வாநரவித்யையில் ஸமஸ்த உபாஸனமே சிறந்ததென்று வ்யஸ்தோபாஸன மூலமாக வைச்வாநரவித்யையின் நாநாத்வம் நிரஸிக்கப்பட்டது இப்போது ஸத்வித்யா தஹரவித்யா உபகோஸல வித்யைகளுக்கு நாநாத்வம் என்பது பிரித்துக்காட்டும் ப்ரமாணங்களைக் கொண்டு விளக்கப்படுகிறது என்று ஸங்கதி. ஸத் - தஹ்ர சாண்டில்ய பூம - ந்யாஸவித்யாதிகளான ப்ரஹ்மப்ராப்தி சாதனமான உபாஸனங்கள் - எல்லாம் ஒரே வித்யையா - வெவ்வேறு என்று சம்சயம். உபாஸ்யப்ரஹ்மமும்-பலமும் ஏகமாகையாலும் வேத, உபாஸீத என்று வரும் சொற்கள் பர்யாயங்கள் (ஸமானார்த்தங்கள்)

ஆகையால் வெவ்வேறு பொருளுள்ள சொற்கள் இல்லாமையாலும் வித்யை - ஒன்றே என்பது பூர்வபக்ஷம், இதை *சப்தாதி பேதாத் - நாநா* = ஸத்வித்யாதிகள் வெவ்வேருனவை வேத்யமான ப்ரஹ்மம் ஒன்றேயானுலும். ஸபூமா என்றும் அபஹுத பாப்மா என்றும் சப்தங்கள் வெவ்வேருய் இருப்பதால் என்றபடி. சப்தாதி என்ற ஆதிபதத்தால் அப்யாஸம் முதலியன குறிக்கப்படுகின்றன. இங்குள்ள விசேஷமாவது. ஸூத்ரத்தில் சப்தபேதம் வித்யாபேதத்திற்குக் காரணமென்று திருவுள்ளம். யாகம் - தானம் முதலிய சப்தங்கள் போல் பர்யாயமில்லாத சப்தங்களால் என்று சொல்லவேண்டும். அது இங்கு பொருந்தாது. ஏனெனில், ஸ்ரீபாஷ்ய-காரரால் வேதனம் - த்யானம் - உபாஸனம் முதலிய சப்தங்கள் ஒரே பொருளில் முடிவு பெறுவதாக ஸ்தாபிக்கப்படுவதால் அர்த்தபேதகத்வமில்லை ஆகவே வித்யாபேதம் எப்படிவரும்? என்று சங்கை தோன்றுகிறது. அதற்கு சமாதானமாவது.

சப்தாந்தராதிகரணத்தில் கூறியபடி பர்யாயமற்ற முக்கிய சப்தங்களில் பேதமில்லையென்ருலும் - அபஹுதபாப்மாஸபூமா - ஸகாரணம் - என்று ஸித்தமான ரூபபேதத்தைக் காட்டும். சப்தபேதம் கௌணமாக ஸித்திக்கையால் அது பொருந்துமென்பதாம். இப்படிச் சொல்வது எதற்காக என்ருல், இங்கு ரூபபேதமே வித்யாபேத காரணமாதலின், அதனுல் வேதனம் முதலிய தாதுக்களின் அர்த்தத்தை விசேஷிக்கையில் - ஸித்தமாகும் அர்த்தபேதத்தால் சப்தபேதம் ஸித்திப்பது உபசாரோக்தியாகும் என்பதாம். இதனுல் விதி ரூபசப்தபேதத்தால் வித்யைகள் விதேயங்கள் ஆகையால், அவிதேயஜ் ஞானத்தால் மோக்ஷம் என்ற மதம் தவறு என்றருளினுர் ஸ்ரீ பாஷ்யகாரர். மேலும், முக்ய சப்தம், கௌண சப்தம் என்ற பேதத்தாலும் வித்யாபேதம் ஸித்திக்கலாமென்று பாஷ்யகாரர் திருவுள்ளம். முன் காண்டத்தில் சப்தாந்தராதிகரணத்தில் - சப்தம், ரூபம், பலம், நாம இந்நான்கும் கர்ம பேதகங்கள் என்று கூறப்பட்டது. அந்த நான்காலும் வித்யாபேதம் இவ்வதிகரணத்தில் ஸாதிக்கப்படுகிறது. அநித்யம், அஸுகம், லோகம், இமம், ப்ராப்ய பஜஸ்வமாம் என்றும், மாமேகம் சரணம் வ்ரஜ என்றும் சொல்லும் ந்யாஸ உபாஸனவிதி சப்த பேதத்தாலும் அபஹுதபாப்மத்வாதிகள் உபாஸ்நரூபங்கள். நிரபேக்ஷ உபாயத்வம். ந்யாஸவித்யா ரூபம். ஆகவே ரூபபேதமுள்ளது. இரண்டிற்கும் முக்திரூப பலம் பொதுவானுலும் - விளம்ப - அவிளம்பங்களால் பலபேதமிருப்பதாலும் ப்ராரப்த பங்கத்தாலும் அது இல்லாமையாலும். ஸத்வித்யா - தஹரவித்யா ந்யாஸவித்யா என்னும் நாமபேதத்தாலும் ந்யாஸ உபாஸன வித்யைகள் வெவ்வேருனவையே. ஆக இப்படி கௌணமின்றி முக்கியமான சப்தபேதத்தால் வித்யாபேதத்தை பாஷ்யகாரர் திருவுள்ளம் பற்றியதாக ஆசார்யர்கள் அருளுவர்.

## 107 விகல்பாதிகரணம்

### 408 (ஸூ) விகல்போऽவிசிஷ்டபலத்வாத்

முன்னதிகரணத்தில் ப்ரஹ்மப்ராப்தியைப் பலமாகக் கொண்ட வித்யாதிகள் வெவ்வேருனவை என்று ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு அந்த வித்யைகள் அனைத்தும் சேர்ந்து முக்திக்கு ஹேதுவா? தனித்தனி வித்யையே ஹேதுவா என்று விசாரிக்கப்படுகிறது.

ஸ்வர்க்க பலகங்கள் அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம் ஜ்யோதிஷ்டோமம் முதலியவை பலத்தின் மிகுதியைக் கருதி ஒருவனுலேயே செய்யப் படுவதைக் காண்கையால், இங்கும் ப்ரஹ்மானுபவத்தின் மிகுதியை அபேக்ஷித்து ஸமுச்சயம் (அனைத்தையும் சேர்த்துச் செய்தல்) கூடும் என்பது பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர்.

***விகல்பஃ*** ஏதேனுமொன்றைச் செய்தாலே போதும். ஸமுச்சயமில்லை ***அவிசிஷ்டபலத்வாத்:*** தேச - கால ஸ்வரூபங்களால் அளவிடமுடியாத ப்ரஹ்மானுபவமே எல்லாப்பரவித்யைகளுக்கும் பலமாகையால் என்பதாம். ஒரே வித்யையில் இத்தகைய பலம் ப்ராப்யமாகையால் ஸமுச்சயத்தில் பலம் இல்லையென்பதாம். ஆகவே ஸர்வவித்யைகளுக்கும் விகல்பமே.

### 409 (ஸூ) காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சீயேரந்நவா பூர்வஹேத்வபாவாத்

***காம்யாஸ்து*** = ப்ரஹ்மப்ராப்திதவிர்த்த பலங்களைக்கொண்ட காம்ய வித்யைகளோ வெனில், ***யதாகாமம்:*** விருப்பப்படி, ***ஸமுச்சீயேரன், நவா:*** அதிகபலத்தை விரும்பி சமுச்சயம் ஏற்படலாம். இல்லையெனில், தனித்தனியே செய்தாலும் போதும் என்பதாம். ஏனெனில், ***பூர்வஹேத்வபாவாத்*** பலத்திற்கு அபரிமிதத்வம் என்று முன் கூறிய பலம் இல்லாமையால் என்றபடி.

## 108 யதாச்ரயபாவாதிகரணம்

### 410 (ஸூ) அங்கேஷு யதாச்ரய பாவ:

முன் அதிகரணத்தில் காம்யவித்யைகளுக்கு இச்சைக்கு ஏற்றபடி விகல்பமும் சமுச்சயமும் கூறப்பட்டன. அப்படி உத்கீதாதிவித்யையும் விருப்பப்படி ஏற்கத்தக்கதா இல்லையா என்று சம்சயம், அல்லது முன் ஸர்வ வித்யைகளுக்கு ஸமான பலம் சொல்லப்பட்டது. அந்த ப்ரஸக்தியால் இங்கு தந்நிர்த்தாரணுதிகரணத்தில் கூறிய உத்கீதவித்யையில் பலம் வீர்யவத்தரம் என்பதைப் பல காரணங்களால் ஆக்ஷேபித்து அக்காரணங்களை நிரஸனம் செய்து அந்த பலத்தை உறுதிப்படுத்துகிருர். இதனுல் உத்கீத விஷயமான இவ்விரண்டு அதிகரணங்களிலும் கூறியது கூறல் என்ற தோஷமில்லை.

கர்மாங்கங்களையாச்ரயித்த உத்கீதாதி உபாஸனங்களுக்கு கோதோஹனாதிகள் போலே முன்கூறிய உபாதான நியமம் கூடுமா? கூடாதாவென்று சம்சயம். கூடாதென்று பூர்வபக்ஷம். உத்கீதம் உபாஸீத என்ற விதிவாக்யத்தில் வேறுபலம் சொல்லப்படாததால் க்ரதுவின் அங்கமான உத்கீதவிஷயகமிது வாதலின், அதை மூலமாகக்கொண்டு உத்கீத வித்யைக்கு க்ரத்வங்கத்வத்தில் விரோதமில்லையாதலின், விதிவாக்யத்தால் க்ரதுவின் அங்கத்வம் அறியப்பட்டது போல யதேவ வித்யயா கரோதி முதலியவை அர்த்தவாதவாக்யமென்று ஏற்கவேண்டும் என்ற பூர்வபக்ஷம் நான்கு ஸூத்ரங்களால் கூறப்படுகிறது.

## 411 (ஸூ) அங்கேஷு யதாச்ரயபாவ:

அங்கேஷு உத்கீதாதிகளில் ஆச்ரயித்து வருகிற உபாஸனங்களுக்கு யதா஽ச்ரயபாவ; உத்கீதாதிகளைப்போலே அங்கபாவம் கூடும். கோதோஹநாதிகளுக்குத்தம் வாக்யங்களில் பலம் கூறப்பட்டிருப்பதுபோல் உத்கீதமுபாஸீத என்ற வாக்யத்தில் பலம் கூறப்படாததால் அங்கபாவம் விருத்தம் என்று கருத்து

## 412 (ஸூ) சிஷ்டேச்ச

***சிஷ்டி — சாஸனம்*** — விதி. உத்கீதமுபாஸீத என்ற விதியாலும், கோதோஹனேன பசுகாமஸ்ய ப்ரணயேத் என்னும் விதிவாக்யத்தில் வேறு அதிகாரம் தெரிவதுபோல் இங்கு தெரியாததாலும் உபாஸனத்திற்கு உத்கீதாத்யங்கபாவமே விதேயம் என்று தெரிகிறது. ஆகவே உபாதானநியமம் உண்டு.

## 413 (ஸூ) ஸமாஹாராத்

ஹோத்ருஷதனாத்தைவாபி துருத்கீதமனுஸமாஹரதியென்று ஸமாஹாரத்தால் உபாஸனத்துக்கு உபாதான நியமம் தோன்றுகிறது. ஸமாஹாரமானது ஸமாதானம். துருத்கீதம் - வேதனமற்ற உத்கீதம். அது தோஷயுக்தம் ஆகையால். ஹோத்ருஷதனத்தாலே அந்த தோஷத்திற்கு ஸமாதானம் சொல்லும்போது வேதனமவசியமென்று பலிப்பதால் உபாதான நியமம் ஸித்திக்கிறது.

## 414 (ஸூ) குணஸாதாரண்யச்ருதேச்ச

ப்ரணவகுணமாகக் கூறப்பட்ட உபாஸனத்திற்கு ஸாதாரணத்தன்மை கூறப்பட்டுள்ளதால் என்றபடி - அதாவது தேநேயம் த்ரயீ வித்யாவர்த்ததே. ஓமித்யாச்ராவயதி-ஓமிதிசம்ஸதி ஓமித்யுத்காயதி. தேன என்று தச்சப்தத்தால்

ப்ரக்ருதமான உபாஸனத்துடன் கூடியப்ரணவமே குறிக்கப்படுவதால் இம்-மூன்றிடங்களிலும் ப்ரணவம் தொடர்வதால் அத்துடன் வழங்கும் உபாஸனத்திற்கும் தொடர்ச்சியுண்டு. ஆகவே கர்மாங்கமாக உபாஸனே பாதாநநியமம் ஸித்தம் என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

## 415 (ஸூ) நவாதத் ஸஹபாவாச்ருதே

**நவா = நச** = உபாஸனத்துக்கு உபாதாநநியமம் கிடையாது. *தத்ஸஹ பாவாச்ருதே* : க்ரத்வங்கபாவத்தில் ச்ருதியில்லாமையால், அங்கபாவமிருந்தால் ஸஹபாவம் உண்டு என்பதாம். ஆகவே, யதேவ *வித்யயா*கரோதி ததேவ வீர்யவத்தரம் என்று த்ருதீயாவிபக்தி ச்ருதியால் வீர்யவத்வஸாதகமான வித்யைக்கு க்ரத்வங்கமாக விநியோகம் கூடாதாதலின், அங்கபாவம் சொல்லப்படவில்லையெனப்பட்டது. எங்கு நேராகப்பலஸாதனத்வம் கூறப் படுகிறதோ அங்கு பலஸாதனத்வம் முதலில் தோன்றுவதால் க்ரத்வங்க மென்று விநியோகம் கூடாதென்பது கருத்து. இங்கு பூர்வபக்ஷ நிரஸன முறையிதுவே.

உத்கீதமுபாஸீத என்னுமிடத்தில் கர்மச்ருதி உபாஸனத்திற்கு உத்கீத விஷயகத்வத்தைக் காட்டுமே தவிர, அதன் அங்கத்வத்தை போதிப்பது அல்ல. மூன்றாவது அவச்யம் செய்யவேண்டிய உபாஸனமில்லாவிட்டால் துருத்கீதத்வத்தையும், அதன் ஸமாதானத்தையும் சொல்லும் ச்ருதி கர்மாங்க பாவத்தில் காரணம் என்பது தவறு. ஏனெனில், ஓர் அதிகாரி வித்யாபல மான வீர்யவத்தரத்வம் முதலியவற்றை விரும்பி வித்யையை உபக்ரமித்து உள்ளபடி அனுஷ்டிக்காவிட்டால் அவனைப்பற்றி ஹோத்ருஷதனத்தால் துருத்கீதத்வ பரிஹாரம் சொல்லப்பட்டதே தவிர கர்மாங்க பூதமான உத்-கீதத்தை அனுஷ்டிக்கும் ஸர்வாதிகரின் விஷயமாகச் சொல்லப்படவில்லை நான்காவது ஸூத்ரத்திற்கு சமாதானம், உபாஸனத்துடன் கூடிய ப்ரவணவத்திற்கு மூன்று வேதங்களையும் அனுவர்த்திப்பதாக த்துதி இருப்பினும், உபாஸனத்தில் கர்மாங்கத்வம் இல்லை. ஏனெனில், உபாஸனத்திற்கும் வீர்ய வத்தரத்வாதி பல ஸாதனத்வமிருப்பதால், புருஷார்த்தத்வம் நிச்சயிக்கப் பட்டுள்ளதாதலின், அது வெறும் துதிமட்டுமேயென்று கருத்து.

## 416 (ஸூ) தர்சநாச்ச

ஏவம் வித்ஹவப்ரஹ்மா யஜ்ஞம் யஜமானம் ஸர்வான்ருத்விஜோS பிரக்ஷதி என்று ருத்விக்குகளுக்கு ரக்ஷணத்தைச்ருதி கூறுகிறது. ஆகையால் யஜமானரக்ஷணம் என்பது அவன் செய்யும் க்ரது பலத்தைப்ரதிபந்திக்-காமல் இருப்பது. அது ப்ரஹ்மஜ்ஞானத்தால் ஏற்படுகிறது - ஆதலின்

உத்காத்ருக்களுக்கு வேதாநாநியமம் ஸித்தித்தது. இதுவும் உத்கீதோபாஸத்துக்கு கர்மாங்கத்வமில்லாத விஷயத்தில் தான் ஸித்திக்கும். ஆகையால், உபாதாநாநியமம் ஸித்தம்

அடுத்த பாதத்தில் ப்ரஹ்மவித்யாங்கங்களைச் சொல்கிறபடியால் தத்ப்ரஸங்கார்த்தமாக இப்பாதத்தில் கடைசி அதிகரணத்தில் அங்காங்கத்வ சிந்தனம் செய்தபடியால் முன் உத்கீதப்ரகரணத்தில் சொல்லாததுபற்றி " இடமில்லாதவிடத்தில் கூறியது " (அஸ்தானபாதித்வம்) என்ற தோஷமில்லையாம்.

### இந்த மூன்றுவது பாதத்தின் அதிகரணார்த்தங்கள் :

அதிகரணஎண் :

1. வித்யைக்யம்
2. உத்கீதவித்யா - இருவிதப்பிரிவு
3. ப்ராணவித்யைக்யம்
4. ஸர்வவித்யைகளிலும் ஸ்வரூபம்போல் ஆனந்தாதி - ஸ்வரூபநிரூபக - தர்மத்திற்குத் தொடர்ச்சி
5. ப்ராணனுக்குவஸ்த்ரமென்று (ஜலத்தை) அப்பைத்ருஷ்டிசெய்தல்
6. சாண்டில்யவித்யைக்யம்
7. அஹஸ்-அஹம்சப்தங்கள் பிரிந்து நிலைபெறுதல்
8. ஸம்ப்ருத்யாதி குணங்களுக்கு ஸ்தான நியமம்
9. புருஷவித்யாபேதம்
10. சந்நோமித்ர: முதலிய மந்த்ரங்களுக்குப்பரஸ்பர சம்பந்தம்
11. புண்யபாப ஹான உபாதானங்களுக்குப்பரஸ்பர சம்பந்தம்
12. ஹான உபாதானங்களுக்கு ப்ராப்த காலங்கள்
13. அர்ச்சிராதிகதிகள் எல்லா வித்யைகட்கும் பொதுவாதல்
14. எல்லாவித்யைகளிலும் அஸ்தூலத்வாதி குணச்சேர்க்கை
15. பலசிஷ்யர்கள்கேட்ட அர்த்தங்களுக்குப்பரஸ்பரம் வ்யதிஹாரம்
16. தஹரவித்யைகளில் ஐக்கியம்
17. உத்கீதோபாஸனத்தின் குண பலவிதி.
18. அபஹதபாப்மத்வாதி உபாஸனங்களில் எங்கும் குணியின் ஆவ்ருத்தி.
19. நிகில பரவித்யைகளிலும் அறியத்தக்கது

20. மனச்சித் ப்ரப்ருதிகளான அக்னிகள் வித்யாமயங்களாயும், வித்யாமய-க்ரத்வனுப்ரவேசிகளாயும் உள்ளமை
21. சுத்தனான க்ஷேத்ரஜ்ஞன் சிந்தனீயன்
22. க்ரியாங்கபூத ஸர்வோத்கீதங்களிலும் உபாஸனவிதி
23. வைச்வாநரவித்யையில் ஸமஸ்த உபாஸனமேகார்யம்
24. வித்யைகளின் நாநாத்வம் ( பேதம் )
25. மோக்ஷார்த்த வித்யைகளில் விகல்பம்
26. முன்சொன்ன உத்கீதோபாஸனத்திற்குச் சொன்ன அநியதியை யுக்திகளால் உறுதிப்படுத்தி ஸ்தாபித்தல் என்ற 26 அதிகரணார்த்தங்கள் ஸ்வாமி தேசிகனால் மூன்று ச்லோகங்களில் காட்டப்பட்டன.

மூன்றாம் அத்யாயம் மூன்றாம்பாதம் முற்றிற்று.

## மூன்றாம் அத்யாயம் நான்காம் பாதம்

முன்பாதத்தில் வித்யை சிந்திக்கப்பட்டது. இங்கு வித்யாங்கமான கர்மம் சிந்திக்கப்படுகிறது என்று பாத ஸங்கதி. இவ்வதிகரணத்தில் கர்மங்களுக்கு வித்யாங்கத்வம் சித்திக்க வித்யைக்கு அங்கித்வம் ஸாதிக்கப்படுகிறது என்று அதிகரண ஸங்கதி அல்லது முன்பாதத்தின் இறுதி அதிகரணத்தில் உத்கீதவித்யைக்கு தனிப்பலம் கூறி புருஷார்த்த சாதகத்வம் கூறப்பட்டது. இப்போது வித்யைக்கு பலமிருப்பதால் புருஷார்த்தத்வம் ஸாதிக்கப்படுகிறது என்று ஸங்கதி.

### 109 புருஷார்த்தாதிகரணம்

### 417 (ஸூ-௧) புருஷார்த்தோऽதச்சப்தாதிதி பாதராயண:

வித்யையினால் புருஷார்த்தம் சித்திக்கிறதா ? அன்றி கர்மாவினாலா என்று சம்சயம். கர்மாவினால்தான் என்று பூர்வபக்ஷம் ஏனெனில், வித்யை. கர்மாவின் அங்கமானதென்பதால் கர்மாவைச் செய்யும் ப்ரத்யகாத்மாவின் உண்மை ஸ்வரூபமே ச்ருதி ப்ரதிபாத்யமாகையாலும், யதேவ வித்யயா கரோதி என்று வித்யாஸாமான்யம் கர்மாங்கமாகக் கூறப்படுவதால் வித்யை கர்மாங்கமென்பதாம் இந்த பூர்வபக்ஷத்தைப் பின்னால் ஆறு சூத்திரங்களால் கூறப்போகிறவராய் முதலில் சித்தாந்தத்தைக் கூறுகிறார்.

*அத:* வித்யையாலே; *புருஷார்த்த:* மோக்ஷம் ஸாதிக்கப்படுகிறது என்று பாதராயணர் கூறுகிறார். *சப்தாத்* = ப்ரஹ்மவிதாப்னோதிபரம்; வேதா-

ஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் தமேவம் வித்வான் அம்ருத இஹபவதி என்று வித்யையால் புருஷார்த்த சித்தி என்று சப்தம் கூறுவதால் என்பதாம்.

இதன் மேல்பூர்வபக்ஷம்.

## 418 (ஸூ) சேஷத்வாத் புருஷார்த்தவாதோ யதான்யேஷ்விதி ஜைமினி:

***சேஷத்வாத்:*** வித்யை ஆத்மஸம்ஸ்காரமாதலின், ஆத்மாவிற்கு சேஷம் ஆகையால்:- தத்வமஸி என்று ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸாமானாதிகரண்யம் உள்ளதால், ப்ரஹ்மத்துக்கு கர்மாவைச் செய்பவன் என்ற முறையில் ஜீவாத்மாபேதம் தோன்றுகையால், ஆத்மா ஜ்ஞாதவ்யனென்றால், வ்ரீஹ்யாதிகளுக்கு ப்ரோக்ஷணம் சேஷமாவதுபோல் - வித்யையும் ஆத்மஸம்ஸ்காரகம் என்பதாக ஆத்மாவின் சேஷம் என்பது பலிக்கிறபடியால், கர்மசேஷனை ஆத்மாவை த்வாரமாகக்கொண்டு கர்ம சேஷமாகையாலென்றபடி, ***புருஷார்த்தவாத:*** = ப்ரஹ்மவிதாப்னோதிபரம் என்று பலச்ருதி அர்த்தவாதம் மட்டுமே. எங்ஙனம் என்றால், ***யதான்யேஷ்விதி ஜைமினி:*** = பூர்வ மீமாம்ஸையில் ஜைமினி, த்ரவ்யகுண ஸம்ஸ்கார கர்மாக்களில் தனியே பலச்ருதியிருந்தால் அது அர்த்தவாதமேயென்றருளினர். அதேபோல புருஷார்த்தச்ருதியும், அர்த்தவாத மாத்ரமேயென்பதாம். ஆகையால் - வித்யைக்ரது சேஷையாதலின் வித்யையால் புருஷார்த்தம் சித்திக்காது.

## 419 (ஸூ) ஆசாரதர்சனாத்

ப்ரஹ்மவித்துக்களின் ஆசாரமும் கர்மாவையே ப்ரதானமாகக் கொண்டதாகக் காணப்படுவதால்; ப்ரஹ்மவித்துக்களில் தலைசிறந்த கேகயர், "யக்ஷ்யமாணோ ஹவை பகவந்தோऽஹமஸ்மி" என்றார். கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜனகாதய: என்று ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஆசாரம் கர்மப்ரதானமாகக் காணப்படுகிறது. இது லிங்கமாயிருக்கட்டும். அங்கதாவிதி எப்படியென்றால் கூறுகிறார்

## 420 (ஸூ) தத்ச்ருதே:

யதேவவித்யயாகரோதி என்ற ச்ருதியால் வித்யைக்குக் கர்மாங்கத்வம் தெரிகிறது. இந்தச்ருதி ப்ரகரணத்தையிட்டு, உத்கீத வித்யாமாத்ரபரை-எனலாகாது. ப்ரகரணத்தைக்காட்டிலும் ச்ருதி பலீயஸ் ஆகையாலே துர்ப்-பலமான ப்ரகரணத்தைக் கொண்டு ச்ருதிக்கு பாதகம் கூறக்கூடாததலின் இந்தச்ருதி வித்யாஸாமான்யத்தைப் பற்றியதாதலின், ப்ருஹ்மவித்யையும் கர்மாங்கம் என்று விதிக்கப்பட்டதாகிறது.

## 421 (ஸூ) ஸமந்வாரம்பணாத்

தம் வித்யாகர்மணீ ஸமன்வாரபதே என்று வித்யா கர்மங்களுக்கு ஒரே புருஷனிடம் சேர்க்கை காணப்படுவதாலும் இச்சேர்க்கையும் வித்யை கர்மாங்கம் என்று கூறுவிடில் பொருந்தாததாகும்.

## 422 (ஸூ) தத்வதோ விதாநாத்

*தத்வத:* = வித்யாயுக்தனான புருஷனுக்கு

*விதாநாத்* = கர்மாவை விதிப்பதாலும். அதாவது ஆசார்ய குலாத் அதீத்ய என்று தொடங்கி அபிஸமாவ்ருத்ய குடும்பே ஸுசௌ என்று அத்யயநம் செய்தவனுக்குக் கர்மாவை விதிப்பதாலும், அத்யயநமென அர்த்த ஜ்ஞானம் வரை குறிப்பதாலும் வித்யை கர்மாங்கமேயாகும்.

## 423 (ஸூ) நியமாத்

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் சதம் ஸமா: என்று ஆத்ம வித்துக்களின் வாழ்க்கை முழுவதும் கர்மாக்கள் நியமேன விதிக்கப்படுவதாதலின், வித்யை கர்மாவினங்கமே. இந்த பூர்வபக்ஷங்களை நிரஸிக்கிறார்.

## 424 (ஸூ) அதிகோபதேசாத்து பாதராயணஸ்யைவம் தத்தர்சநாத்

து சப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது. வித்யைகர்மாவுக்கு அங்கமல்ல ஆனால், வித்யையால் புருஷார்த்தம் கிட்டுகிறதென்று பாதராயணர் கருதுகிறார். ஏனெனில், *அதிகோபதேசாத்:*= கர்மகர்த்தாவான ஜீவனைவிட வேறுபட்ட பரமாத்மா அறியத்தக்கவனாக உபதேசிக்கப்பட்டிருப்பதால் அவனுக்கு வேத்யத்வம் எப்படியெனில்; *தத்தர்சனாத்*= பஹுஸ்யாம் என்றும், யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் என்றும், ஏஷஸர்வேச்வர: ஏஷபூதாதிபதி: என்றும் ஸகாரணம் கரணாதிபாதிப: என்றும் சொல்லப்பட்டு - ஜீவனிடம் ஸம்பவிக்க முடியாத பஹுபவனஸங்கல்பம் முதலிய குணங்களை - அறியவேண்டுமென்று உபதேசம் செய்த ப்ரகரணங்களில் காணப்படுவதால் என்றபடி.

## 425 (ஸூ) துல்யந்துதர்சனம்

வித்யையே ப்ரதானமென்கிற பக்ஷத்திலும், ப்ரஹ்மவித்துக்களின் ஆசாரம் சமமாகவே காணப்படுகிறது என்பதாம். இதனால் கர்மாவை அனுஷ்டிக்காத நிலையும் காணப்பட்டிருப்பதால் கர்மானுஷ்டானத்தைக் கண்டிருப்பது நிலையானதல்ல. எவ்விடமென்றால்? காவிஷேயர் என்னும் ரிஷிகள் நாங்கள் ஏன் அத்யயனம் செய்யவேண்டும்? எதற்காக யாகம் செய்யவேண்டும்? என்று கேட்கும் ச்ருதியில்.

ஆனால், கர்மாவினை அனுஷ்டிக்கதகாத நிலையும் அனுஷ்டிக்கும் நிலையும் முரண்படுவதாதலால் எப்படி ஒன்றுகூடுமெனில், பலாபிஸந்தியற்ற கர்மானுஷ்டானம் வித்யையின் அங்கம் ஆதலின், செய்யத்தக்கது - பலாபிஸந்தி உள்ள கர்மா வித்யைக்கு விரோதியாதலின், விடத்தக்கது என விஷயம் வேறுபடுவதால் விரோதமில்லையாம்.

## 426 (ஸூ) அஸார்வத்ரிகீ

யதேவ வித்யயாகரோதி என்ற ச்ருதியானது வித்யைக்குக் கர்மாங்கத்வத்தை விதிக்கிறதென்பது பொருத்தமற்றது. இங்கு வித்யாசப்தம் *நஸார்வத்ரிகீ:* - எல்லா வித்யைகளையும் பொதுப்படக் குறிப்பதல்ல. உத்கீத வித்யைக்கு மட்டுமே பொருந்துவது. அதெப்படி என்னில் யத்கரோதி தத்வித்யயா என்று அன்வயம் கூறலாகாது. யதேவ வித்யயாகரோதி தததேவ வீர்யவத்தரம் பவதி என ச்ருதியில் உள்ளபடியே அன்வயிக்கவேண்டும். இவ்வன்வயத்தில் வித்யையால் செய்யப்படும் க்ரதுவிற்கு வீர்யவத்தரத்வம் ஏற்படுவதால் ஸாதனபாவம் தோன்றுவதாலும், யதேவ என்று ப்ரஸித்த வந்நிர்தேசத்தாலும், உத்கீதமுபாஸீத என்று பக்கத்திலுள்ள உத்கீதவித்யா ப்ரஸித்தியாலும் எல்லாவித்யைகளையும் குறிப்பதல்ல இந்த வித்யாசப்தம் என்பதாம்.

## 427 (ஸூ) விபாகச்சதவத்

தம் வித்யா கர்மணீஸமன்வாரபேதே என்றும் ச்ருதியில் வித்யை - தன் பலப்ரதானத்திற்காகவும், கர்மமும் ஸ்வபலப்ரதானத்திற்காகவும் புருஷனைச்சேர்கிறது என்று பகுத்தறிய வேண்டும். ஆகவே, ஒவ்வொன்றிற்கும் பலம் வெவ்வேருதலின், வித்யை கர்மாங்கமல்ல என்பதாம். இந்தச்ருதி ஸாம்ஸாரிகமான வித்யாகர்மங்களைப்பற்றியது. அல்லது ப்ரஹ்மவித்யை அதன் அங்கமான கர்மம்பற்றியதென்று கொண்டாலும், வித்யையானது நேஹாபிக்ரம நாசோऽஸ்தி என்னும் நியாயத்தால், ப்ராரப்தத்தின் முடிவில் முக்தியைக் கொடுக்க அன்வயிக்கிறது: கர்மமும் அடுத்தபிறவியிலும் வித்யையை உபாதானம் செய்ய அன்வயிக்கிறது. *சதவத்:*= நிலம், ரத்தினம் விற்பனை செய்பவனை இருநூறு அடைகிறதென்றால் நிலத்திற்காக நூறும், இரத்தினத்திற்கு நூறும் பிரிவுபடுவதுபோல் இங்கும் அப்படியேயென்று கருத்து.

## 428 (ஸூ) அத்யயன மாத்ரவத:

அத்யயனம்மட்டும் செய்துள்ள புருஷனுக்கே கர்மம் விதிக்கப்படுகையால் வித்யை கர்மாவிற்கு அங்கமல்ல. ஏனென்றால், ஆதானவிதியானது அடுத்தக்ரதுவைக்குறிக்காமல் அக்னியாதானத்தைமட்டும் குறிப்பது போல்

அத்யயனவிதியும் அக்ஷரராசிகளை க்ரஹிப்பது என்ற பொருளோடு முடிவடைகிறது. கற்றுக்கொண்ட அத்யயனம் பலனுள்ள அர்த்தத்தைப் போதிப்பதாகக் கண்டிருப்பதால், அதில் நிர்ணயம் ஏற்பட அத்யயனம் செய்தவன் மீமாம்ஸையைக் கேட்கத்தானே ஈடுபடுகிறுன். அத்யயனத்தை விதித்தது அர்த்தஜ்ஞானம் வரை பயனுள்ளதாயினும், அர்த்த ஜ்ஞானத்தை விட வேருயும், நம்பிக்கையுடன் ஆவ்ருத்தி செய்யப்படுவதுமான ப்ரஹ்ம வித்யை உபாஸீத முதலிய சாஸ்திரங்களால் விதிக்கப்படுகிறது. ஆகையால் அதீத்ய ஸ்நுயாத் என்பதைமட்டும் கொண்டு வித்யை கர்மாவிற்கு அங்கம் என்னவொண்ணுது.

## 429 (ஸூ) நாவிசேஷாத்

ந = குர்வந்நேவேஹ கர்மாணி-என்று ப்ரஹ்மவித்தின் ஆயுஸுக்கு கர்மங்களில் நியமேன விநியோகம் காட்டப்படுவது தவறு; **அவிசேஷாத்** வித்வானுக்கேயென்று விசேஷம் ஏதுமில்லாமையால் என்றபடி. ஆனால், அவித்வான்கள் பற்றியது. வித்வானுக்குப்ரயாணம் வரை உபாஸனு ஆவ்ருத்தி காணப்படுவதால் அர்த்தஸ்வபாவத்தால் இது அவித்வான்கள் பற்றியது என நிச்சயிக்கப்படுகிறது, அல்லது அவிசேஷாத் ஸ்வதந்திரமான கர்மத்தில் தான் வித்வத் ஆயுஸுக்கு வினியோகம் என்கிற விஷயத்தில் விசேஷமான ஹேது ஒன்றும் இலாமையால் என்றபடி. ப்ரகரணத்தினுலும் கர்மா - வித்யைக்கு அங்கம் என்று புலப்படுகிறது. ஆகவே வித்யை கர்மாங்க-மானதல்ல.

## 430 (ஸூ) ஸ்துதயேSநுமதிர்வா

வா சப்தம் ஏவ எனும் பொருளில் உள்ளது. ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் ஈசேந ஆவாஸ்யம் – ஈசனுக்குப்பரதந்த்ரம் என்று பொருள். இது வித்யா ப்ரகரணமாதலின் - வித்யையின் ஸ்துத்யர்த்தமாகவே எப்போதும் கர்மானுஷ்டானத்திற்கு அனுமதியே - வித்யா மாஹாத்ம்யத்தால் எப்போதும் கர்மானுஷ்டானம் செய்தபோதிலும் அந்த கர்மத்தாலே லேபத்தையடைய மாட்டான் என்று வித்யை போற்றப்பட்டதாகிறது. மேலும் 'ந கர்மணு லிப்யதே நரே' என்ற வாக்ய சேஷமும் வித்வானுக்குக் கர்மலேபமில்லை யென்று கூறுகிறது. நரமதே இதி நர: = ஸங்கம் அற்றவனென்றபடி. நரனை உன்னிடம் கர்மா ஒட்டுவதில்லையென்பது பொருள்.

## 431 (ஸூ) காமகாரேணசைகே

**ஏகே:** சில சாகைக்காரர்களும், காமகாரேண: யதேச்சையாக வித்யாநிஷ்டனுக்கு கார்ஹஸ்த்யத்யாகத்தைச் சொல்கின்றனர். கிம்ப்ரஜயா கரிஷ்யாம; யேஷாம் நாயம் ஆத்மா நாயம் லோக: என்று தன் விருப்பப்படி

க்ருஹஸ்த தர்மத்தை விட்டு விடுவதைச் சொல்லும் வசனம் ப்ரஹ்ம வித்யைக்குப் ப்ராதான்யத்தைக் காட்டுகிறது. ஆகவே வித்யை கர்மாங்கமில்லை

## 432 (ஸூ) உபமர்தஞ்ச

வித்யையால் ஸர்வகர்மாக்களுக்கும் க்ஷயம் சொல்லப்படுகிறது என்பது வித்யை கர்மாங்கமென்றால் பொருந்தாது.

## 433 (ஸூ) ஊர்த்வரேதஸ்ஸுச சப்தேஹி

ஊர்த்வரேதஸ்ஸுக்களான ஆச்ரமங்களில் ப்ரஹ்மவித்யை காணப் படுவதால் அவர்களிடம் அக்னிஹோத்ராதி கர்மாக்கள் இல்லாமையால் வித்யை கர்மாவுக்கங்கமில்லை. க்ருஹஸ்தாச்ரமம் தவிர ஏனைய மூன்று ஆச்ரமங்களுக்கு ப்ரமாணங்கள் :- த்ரயோ தர்மஸ்கந்தா: யேசேமே ऽரண்யே ச்ரத்தா தப இத்யு பாஸதே என்றும் ஏதமேவப்ரவ்ராஜிநோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி, என்றும். மூன்று ஆச்ரமங்களும் வேதவாக்யங்களில் சொல்லப்பட்டுள்ளன. இப்படியாகில். யாவஜ்ஜீவம் அக்னிஹோத்ரம் ஜுஹோதி என்றுள்ள ச்ருதிக்கு கதியாதெனில், இது வைராக்யமில்லாதவர் பற்றியது. ஆதலின், விரோதமில்லையென்பதாம். தர்மஸ்கந்தா: தர்மாச்ரயா: ஆச்ரமா: என்று பொருள்.

## 434 (ஸூ) பராமர்சம் ஜைமினிரசோதனாச் சாபவததிஹி

த்ரயோ தர்மஸ்கந்தா: முதலியவற்றில் அந்த ஆச்ரமங்களுக்கு ***அசோதநாத் :*** = விதி இல்லாமையால்: ***பராமர்சம் ஜைமினி*** : உபாஸனத்தின் ஸ்துதிக்காக அந்த ஆச்ரமங்களை அனுவாதமே செய்துள்ளதென்று ஆசார்ய ஜைமினி கருதுகிறார். மேலும, ***அபவததீஹி*** - வீரஹா வா ஏஷ தேவாநாம் யோऽக்னி முத்வாஸயதே - என்று ச்ருதி ஆச்ரமங்களை தூஷிக்கிறது. ஆகவே அந்த ஆச்ரமங்கள் கிடையா என்று ஜைமினியின் பக்ஷத்தை நிரஸிக்கிறார்.

## 435 (ஸூ) அனுஷ்டேயம் பாதராயணஸ் ஸாம்ய ச்ருதே:

க்ருஹஸ்தாச்ரமம் போலவே பிற ஆச்ரமங்களும் அனுஷ்டிக்கத்தகுமென வ்யாஸர் கருதுகிறார். ***ஸாம்யச்ருதே :*** = ஏற்கத்தக்க க்ருஹஸ்தாச்ரமத்திற்குச் சமமாகவே பிற ஆச்ரங்களையும ச்ருதி சொல்வதால், இதனால் த்ரயோ தர்மஸ்கந்தா : என்று தொடங்கி ப்ரஹ்மஸம்ஸ்தோऽம்ருதத்வமேதி என்பது வரை நான்கு ஆச்ரமங்களையும் கூறி எல்லா ஆச்ரமிகளுக்கும் ப்ரஹ்ம நிஷ்டத்வமுண்டென்று முடிப்பதால் இவற்றில் சிலவற்றிற்கு அனுவாதத்தால்

மட்டும் விதேயத்வமில்லையென்றால், க்ருஹஸ்ததர்மத்திற்கும் தோஷம் ஸமமாகும் என்பதாகும்.

## 436 (ஸூ) விதிர்வா தாரணவத்

வா சப்தம் உறுதியைக் காட்டுகிறது, சர்வ ஆச்ரமங்களுக்கும் விதியே கூறத்தக்கது. *தாரணவத்* = யதாதஸ்தாத் ஸமிதம் தாரயேத் என்று அனுவாதம் போன்ற வாக்கியத்திலும் உபரிதாரணம் ப்ராப்தமில்லாததால் அதற்கு விதியென்று ஒப்புக்கொள்வதே போல் ஆச்ரமங்களுக்கும் விதி ஸித்தமே. மேலும் ஊர்த்வ ரேதஸ்ஸுக்களுக்கும் வித்யை காணப்படுவதால் அவர்களுக்கு அக்னிஹோத்ராதி கர்மாக்கள் இல்லாமையாலே வித்யை கர்மாவுக்கு அங்கமாகாது. மேலுள்ள ச்ருதிக்குப் பொருள் = ப்ரேதாக்னி-ஹோத்ரத்தில் ஸ்ருக்பாத்ரத்திற்கு கீழ் ஸமித்தை வைத்துக்கொண்டு பின் செல்லவேண்டுமென்றும் தினம் செய்யும் தைவிகாக்னி ஹோத்ரத்திலோ ஸ்ருக் பாத்திரத்திற்கு மேலே ஸமித்தை தரிக்கவேண்டுமென்றும் பொருள்.

## 110 ஸ்துதிமாத்ராதிகரணம்

## 437 (ஸூ) ஸ்துதிமாத்ர முபாதாநாதிதி சேந்நாபூர்வாத்

முன்னதிகரணத்தில் ப்ரஹ்மநிஷ்டனைத் துதிப்பதற்காக ஆச்ரமத்-திற்கு அனுவாதத்வத்தைப் பூர்வபக்ஷமாக்கி விதியேயென்று ஸ்தாபித்தார். இவ்வாறே இங்கும் ஸ்துதியின் ப்ரஸங்கத்தாலே ரஸதமத்வத்தைக் காட்டும் வாக்யங்கள் ஸ்துதிபரங்களா அல்லது த்ருஷ்டி விதியா என்று ஸம்சயத்தால் ஸங்கதி.

பூர்வபாதத்தில் உத்கீதம் பற்றிய ப்ரஸங்கம் வந்தது. இவ்வதிகரணத்திலும் மறுபடி ஏன் உத்கீதம் பற்றிப் பேசப்படுகிறது எனில், இவ்வதிகரணம் உத்கீத உபாஸனபரம் என்றும் முன் உத்கீதாதிகரணம் இங்கு ஸித்தமான உபாஸனத்தை - 'வராததை முன்கூட்டி எதிர்பார்த்தல்' எனும் அநாகதா, வேக்ஷண ந்யாயத்தால் உபஜீவித்து க்ரதுக்களில் உபாதான நியமமில்லை என்பதைச் சொல்லும் விஷய வேறுபாட்டால் இரண்டிற்கும் விரோதம் இல்லை.

ஓமித்யேதத‌க்ஷரமுத்கீதமுபாஸீத, ஓமித்யுத்காயதி தஸ்ய உபவ்யாக்யானம். ஏஷாம் பூதாநாம் ப்ருதிவீ ரஸ: ப்ருதிவ்யா ஆபோரஸ:, அபாமோஷதயோரஸ: ஓஷதீநாம் புருஷோரஸ: புருஷஸ்ய வாக்ரஸ: வாச ருக்ரஸ: ருசஸ்ஸாமரஸ: ஸாம்ன உத்கீதோரஸ: ஸ ஏஷரஸாநாம் ரஸதம: பரம: பரார்த்ய: அஷ்டமோஸயமுத்கீத: இம்மாதிரி வாக்யங்களில் கர்மாங்கமான

**உத்கீதத்தைச்சார்ந்த த்ருஷ்டி விசேஷங்களுக்கு விதி ஏற்கத்தக்கதா? அல்லது உத்கீதாதிகளின் ஸ்தோத்ரம் மட்டுமா?** என்று சம்சயம். ஸ்துதிமாத்ரமே; ஏனெனில், *உபாதானுக்* - இயமேவ ஜுஹூ: ஸ்வர்க்கோ லோக: ஆஹவனீய! என்னும் வாக்கியத்தில், ஜுஹூ-ஸ்வர்கலோகாதிகளாக ஸ்தோத்ரம் செய்யப் படுவதாகக் காண்பதால், கர்மாவின் அங்கமான உத்கீதத்தை ரஸதமம் என்றெல்லாம் பேசியதாலென்றவாறு. இதனால் ஸஏஷ ரஸாநாம்ரஸதம: பரம: பரார்த்யே அஷ்டமோऽயம் உத்கீத: என்கிற வாக்யம் கர்மாவின் அங்கமான உத்கீதம் ஸ்தோத்ரபரமென்று கர்மாங்கமான உத்கீதத்தை ரஸதமத்வ அடிப்படையாகத்துதிப்பதே நோக்கம். இதிசேந்ந = என்றிவ்வாறு கூறுவது தவறே. ஏனெனில், ***அபூர்வத்வாத்*** = முன் ப்ராப்தம் இல்லாததால் என்றபடி உத்கீதாதிகள் ரஸதமமாக இருப்பதாக ப்ரமாணாந்தரத்தால் ப்ராப்தமல்லாத படியால் என்பதாம். இயமேவ ஜுஹூ: ஸ்வர்க்கோ லோக: என்கிற வாக்யம் ஜுஹூவிதி பக்கத்தில் இருப்பதால் ஒரே வாக்யமாய் கொண்டு, ஜுஹூவை ஸ்வர்க்காதிலோகமாக அனுவாதம் செய்து துதிக்கிறது என்பதாம். ஸஏஷரஸானாம் ரஸதம: என்ற வாக்யமோ உத்கீத விதி பக்கத்தில் இல்லாமையால் ப்ரகரணம் வேறானதாதலின், ரஸதமத்வாதிகள் அப்ராப்த மென்பதாலும் ஸ்துதிக்காகவே ஏற்பட்டனவென்பதாம்.

### 438 (ஸூ) பாவ சப்தாச்ச

உபாஸீத என்று பாவசப்தத்தாலும் - விதிப்ரத்யயத்தோடு கூடிய க்ரியாவாசிசப்தத்தாலும் என்றபடி. இது விதிக்க வேண்டிய பொருளைச் சொல்வதால் இவ்வாக்யம் த்ருஷ்டி விதிபரமென்பதாம்.

## 111 பாரிப்லவாதிகரணம்

### 439 (ஸூ) பாரிப்லவார்த்தா இதிசேந்த விசேஷிதத்வாத்

இதிலும் ப்ரஸங்க ஸங்கதியே. முன்னதிகரணத்தில் ரஸதமத்வாதி வாக்யங்கள் ஸ்துதிபரமென்று பூர்வபக்ஷம் செய்து உபாஸனபரமென்று ஸ்தாபிக்கப்பட்டது; இதேபோல் ப்ரதர்த்தனாதி வித்யைகளில் வரும் கதைகள் ஸ்துத்யர்த்தங்களா - பாரிப்லவப்ரயோகார்த்தமா என்று சம்சயம். பாரிப்லவ ப்ரயோகமென்பது ஸ்வரத்துடன் ருத்விக்குகள் கூறும் மனுமுதலியவர்களின் கதையாம்.

ப்ரதர்தனோஹவை தைவோதாஸி: இந்த்ரஸ்யப்ரியம் தாமோபஜகாம என்றும் ச்வேத கேதுர்ஹாருணேய ஆஸ என்றும் வேதாந்தங்களில் கூறப்படும் அவரவர் சரிதத்தைக் கூறுவதான ஆக்யானங்கள் பாரிப்லவ ப்ரயோகார்த்தங்களா அல்லது வித்யாவிசேஷத்தை விளக்குவதற்கானவையா?

என்று சம்சயம். ஆக்யாநுநி சம்சந்தி என்று ஆக்யானங்களுக்கு பாரிப்லவத்தில் வினியோகம் (பயன்) காணப்படுவதால் ஸர்வாக்யானங்களும் பாரிப்லவத்திற்கு சேஷமானவையே. பாரிப்லவம் ஆக்யானத்தைச் சொல்பவையேயாயினும் இங்கு ஆக்யானம் பாடுவதைக் குறிக்கிறது. இப்பக்ஷத்தை பாரிப்லவார்த்தா இதிசேத் என்று அனுவதித்து 'ந' என்று நிஷேதிக்கிறார். ஸர்வ ஆக்யானங்களும் பாரிப்லவ ப்ரயோகத்தில் பயன்படுபவையல்ல. **விசேஷிதத்வாத்** : விநியோகம் விசேஷித்துச் சொல்லப்படுவதால் : ஆக்யாநாநி சம்ஸந்தி என்று சொல்லி அங்கேயே மனுர்வைவஸ்வதோ ராஜா என்று மன்வாதிகளில் ஆக்யானத்தைக் விசேஷமாகக் கூறுவதால் என்றபடி, அவ்வாக்யானங்களே பாரிப்லவப்ரயோகத்திற்குரியவை ப்ரகர்த்தநைசி ஸர்வ ஆக்யானங்களுக்கும் பயனில்லை. அவ்வாக்யானங்கள் வித்யா விதிக்காகவை யென்று கருத்து.

## 440 (ஸூ) ததாசைகவாக்யோபபந்தாத்

ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய: முதலிய விதியுடன் ப்ரதர்த்தநைதி ஆக்யானங்களுக்கு ஒரேவாக்யமாக ஸம்பந்தமிருப்பதால் வித்யாவிதியே ப்ரயோஜனம். ஸோऽரோதீத் முதலிய வாக்யங்கள் பாரிப்லவார்த்தமென்றின்றி கர்மவித்யர்த்தங்களாவது போலவேயிதுவும்.

## 112 அக்னீந்தனாத்யதிகரணம்

## 441 (ஸூ) அத ஏவசாக்னீந்தநாத்யநபேக்ஷா

ஸ்துதிப்ரஸங்காத் அவாந்தர ஸங்கதி விசேஷமூலமாக இரண்டு அர்த்தங்கள் சிந்திக்கப்பட்டன. ஊர்த்வரேதஸ்ஸு ச சப்தேஹி என்ற சூத்திரத்தில் வித்யாவான்களும் ஊர்த்வரேதஸ்ஸுக்களுமான ஆச்ரமிகளுண்டென்று கூறப்பட்டது. இப்போது ஊர்த்வரேதஸ்ஸுக்களுக்கு யஞ்ஜாத்யதிகாரமில்லாமையால் அவற்றை அங்கமாகக் கொண்ட வித்யை கூடாதென்கிற சங்கையை நிவர்த்திக்கிறார். என்று முதலதிகரணத்தோடு ஸங்கதி.

ஊர்த்வ ரேதஸ்ஸுக்களான ஆச்ரமிகளில் ப்ரஹ்மவித்யை கூடுமா கூடாதா என்று சம்சயம். அவர்களுக்கு யஜ்ஞாதிகாரமில்லாமையால் அவற்றை அங்கங்களாகக் கொண்ட வித்யையும் கூடாது என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

## 442 (ஸூ) அத ஏவசாக்னீந்தநாத்யநபேக்ஷா

யதிச் சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி என்றும் ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோக மிச்சந்த: ப்ரவ்ரஜந்தி என்பது முதலிய ச்ருதிகளாலே ஊர்த்வ

ரேதஸ்ஸுகளுக்கும் வித்யையுண்டென்று தெரிகிறது. அதனலேயே அவர்களின் வித்யை, அக்னி விறகு முதலியவற்றை (கர்மாக்களை) அபேக்ஷிக்காதது அக்ன்யாதானம் முதலிய கார்யங்களை எதிர்பார்க்காதது என்பதாம்.

## 113 ஸர்வாபேக்ஷாதிகரணம்

### 443 (ஸூ) ஸர்வாபேக்ஷாச யஜ்ஞாதிச்ருதேரர்த்தவத்

வித்யையானது யஜ்ஞாதிகளையபேக்ஷியாமல் மோக்ஷத்தைச் சாதிக்குமாயின், அப்போது க்ருஹஸ்தர்களுக்கும் அது கர்மத்தை யபேக்ஷிக்காமலே மோக்ஷத்தை ஸாதிக்கட்டும். அப்போது யஜ்ஞாதிகளை விதிப்பதும் வீணேயாகும் என்னும் சங்கையைப் பரிஹரிக்க, க்ருஹஸ்தர்களுக்கு யஜ்ஞாதிகளின் அபேக்ஷை சொல்லப்படுகிறதென்பது இங்கு ஸங்கதி.

கர்மாவைவிடாத க்ருஹஸ்தன் விஷயத்திலும் வித்யை. யஜ்ஞாதி கர்மாக்களை அபேக்ஷிக்கிறதா இல்லையா என்று சம்சயம். ஊர்த்வ ரேதஸ்ஸுகளைப் போல் இவர்களுக்கும் வித்யை ஒன்றையும் அபேக்ஷிக்காமலே சம்பவிக்கலாமென்பது யஜ்ஞாதிச்ருதியில் விவிதிஷந்தி என்றவிடத்தில் யஜ்ஞாதிகளுக்கும் வேதநேச்சையில் உபயோகம் தோற்றுவதால் விரோதமில்லையென்ற பக்ஷத்தை அனுவதித்து நிராகரிக்கிறார்.

க்ருஹஸ்தனின் வித்யை ஸர்வகர்மாபேக்ஷை, யஜ்ஞாதிச்ருதே: ( 3. 4. 5. 27 )

தமேதம் வேதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேன தானேன தபஸா஽நாசகேந என்னும் ச்ருதியில் - அஸிநா ஜிகாம்ஸதி என்னுமிடத்தில் கத்தியினால் கொல்லவிரும்புகிறான் என்ற பொருள் **விவிதிஷந்தி** = யஜ்ஞாதிகளால் வேதனத்தையடைய விரும்புகிறார்கள் என்று பலிப்பதால் யஜ்ஞாதிகளுக்கு வேதந ஸாதனத்வம் சித்தமாகையால், கர்மங்களைச் செய்யும் க்ருஹஸ்தனிடமுள்ள வித்யையானது, யஜ்ஞாதிகளுக்கு வேதன ஸாதனத்வம் சித்தமாகையால் கர்மவானான க்ருஹஸ்தனிடமுள்ள வித்யை யஜ்ஞாதி ஸர்வகர்மாக்களையும் அபேக்ஷிப்பதே. **அச்வவத்** = கமனத்திற்கு ஸாதனமான அச்வமானது ஸ்வபரிபந்த ரூபமான பரிகரத்தை யபேக்ஷிப்பது போல மோக்ஷஸாதன வித்யையும் நித்யநைமித்திகரூப பரிகரத்தை யபேக்ஷிக்கிறதென்று ஊர்த்வரேதஸ்ஸுக்களின் வித்யையும் அந்தந்த ஆச்ரம தர்மத்தை அபேக்ஷிக்கிறதென்று கருத்து.

## 114 ஸூ சமதமாத்யதிகரணம்

### 444 (ஸூ) சமதமாத்யுபேத: ஸ்யாத் ததாபிது தத்விதே: ததங்கதயா தேஷாமப்யவச்யாநுஷ்டேயத்வாத்

முன் அதிகரணத்தில் கார்ஹஸ்த்ய கர்மங்களான யஜ்ஞாதிகள் என்ன மற்ற ஆச்ரம தர்மங்ளென்ன இவற்றிற்கு வித்யாத்வம் கூறப்பட்டது. இப்போது சாந்தோ தாந்த: முதலியவற்ருல் சமாதிகளுக்கும் அங்கத்வம் தோன்றுவதால் இவை க்ருஹஸ்தர்களிடம் கூடாதென்கிற பூர்வபக்ஷம் தோன்றுவதால் ஸங்கதி.

வித்யை நிறைவேற க்ருஹஸ்தர்களால் சமதமாதிகள் ஏற்க வேண்டியவையா இல்லையா என்று சம்சயம். க்ருகஸ்தர்களுக்கு இந்த்ரிய வ்யாபாரரூபமான கர்மமே வித்யாங்கமாக வேண்டியதென்பதால் இந்த்ரிய வ்யாபாரங்களில் ஒய்வுரூபமான சமாதிகளில் க்ரஹணம் க்ருஹஸ்தர்களுக்கில்லையென்பதால் சமாதிகள் ஊர்த்வரேதஸ்ஸுக்கள் விஷயத்தில் பயன்படுமே தவிர கர்மாக்கள்போல் பயன்படுவனவல்ல என்பது பூர்வபக்ஷம். இதை நிரஸனம் செய்கிருர், ***சமதமாத்யுபேத: ஸ்யாத்*** = சமதமாதிகளுடையவனுகவே வேண்டும். ஆயினும், யஜ்ஞாதி கர்மாக்களை உடையவனே. ***ததங்கதயா தத்விதே:*** சாந்தோ தாந்த: முதலியவற்ருல் வித்யாங்கமாக சமதமாதிகளை விதிக்கையால் என்றபடி. அவையும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டியவையாதலின்; வித்யை நிறைவேற கர்மாக்கள் அவசியம் செய்யத்தக்கவையாதலால் என்றபடி, மனம் ஓர்மித்த சமாதிகளாலேயே வித்யையின் நிறைவேற்றம் என்பதாம்.

சாந்தோ தாந்த: முதலியவற்ருல் ஆத்மன்யேவாத்மானம் பச்யேத் என்று பொதுவாகச் சமாதிகளை வித்யைக்கு அங்கமாக விதித்திருப்பதால் க்ருஹஸ்தர்களாலும் அவை க்ரஹிக்கத்தக்கவை. கர்மவான்களான க்ருஹஸ்தர்களுக்கு சமாதிகளையேற்பதில் விஷயம் வெவ்வேருனதால் விரோதம் ஏதுமில்லை. விதிக்கப்பட்ட கர்மாக்களில் இந்த்ரியவ்யாபாரம் விதிக்கப் படாது. பலனற்ற வ்யாபாரங்களில் இந்த்ரிய நிக்ரஹரூபமான சமாதிகள் கூடுமென்பதால். அவை எங்கும் பயனுள்ளவை, கர்மாக்களும் பாபத்தைப் போக்குவதன்மூலம் ஓர்மித்த மனத்தையுண்டுபண்ணுபவையாம்-

## 115 (ஸூ) ஸர்வான்னனுமத்யதிகரணம்

### 445 (ஸூ) ஸர்வாந்நாநுமதிச்ச ப்ராணத்யயே தத்தர்சனத்

ப்ரஹ்மவித்துக்களுக்கு சமதமாதிகள் அனுஷ்டேயங்களென்று கூறப் பட்டது. அங்கு போஜந நியமம் என்னும் சமம் உண்டா, இல்லையாயென்று

விசாரிக்கப்படுகிறது என்று ஸங்கதி. வாஜஸனேயிகள், சந்தோகர்கள் இரு பாலார்க்கும் ப்ராணவித்யையில் நஹவா ஏவம் விதி கிஞ்சனநந்தம் பவதி என்று எல்லா அன்னமும் அனுமதிக்கப்படுகிறது. ப்ராணவித்யா நிஷ்டனுக்கு இந்த அனுமதி எப்போதும் உள்ளதா அன்றி உயிருக்கு ஆபத்தில் மட்டும் பயன்படுவதா என்று சம்சயம். விசேஷமேதுமில்லாமையால் எப்போதும் இந்த அனுமதியுண்டென்று பூர்வபக்ஷம். அதனை நிரஸனம் செய்கிறார். ***ஸர்வான்னுநுமதிச்ச*** : சசப்தம் ஏவகாரார்த்தம் உள்ளது. ப்ராணவித்துக்கு ஸர்வானுனுமதியானது, ப்ராணுபத்தில்தான். ***த்தர்சனத்*** = அதிசயிதமான சக்தியுள்ள ப்ரஹ்மவித்துக்கு - ப்ராணுபத்தில்தான் ஸர்வான்னுநுமதி காணப் படுவதால் என்றபடி. அதெங்ஙனேயென்னில், மடசீஹ தேஷு குருஷு என்று தொடங்கி - உஷஸ்தி என்பவர் இளம்வயதினளான தன் மனைவியுடன் ஆலங்கட்டி மழையால் சேதமுற்ற யானைகள் மிக்க க்ராமங்கள் வழியாகச் சென்று கொண்டிருந்தார். யானைப்பாகர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது பசி தாங்காமல் அவர்களிடம் எச்சிலான கொள்ளை வாங்கிச் சாப்பிட்டார். பின்னர் அவர்கள் தந்த தண்ணீரை அருந்துவது எச்சிலாதலின் வேண்டா மென்றும் கூறுவதாக ஓர் உபாக்யானம் உள்ளது. ஆதலால், ப்ரஹ்மவித்துக் களுக்கும் ஸர்வான்னுனுமதி ஆபத்திற்கே யுரியதாதலின், பரிமித சக்தியான ப்ராண வித்துக்கு ஸர்வான்னுனுமதி ஆபத்விஷயமானது என்பதாம்.

## 446 (ஸூ) அபாதாச்ச

ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வசுத்தௌ த்ருவாமதி:- என்று ஆஹார சுத்தி விதிக்கு பாதகமில்லாததாலும் - ப்ராணுபத்து ஸமயத்தில்தான் ஸர்வான்னுனுமதியென்று தெரிகிறது.

## 447 (ஸூ) அபிஸ்மர்யதே

ப்ராண சம்சயமாபன்னோ யோऽன்ன மத்தி யதஸ்தத:।
லிப்யதே நஸ பாபேந பத்மபத்ரமிவாம்பஸா ॥

என்று ஆபத்திலேயே ஸர்வான்னுனுமதி ஸ்ம்ருதியிலும் கூறப்படுகிறது.

## 448 (ஸூ) சப்தாச்சாதோऽகாமகாரே

ப்ரஹ்மவித்துக்களுக்கும் அன்யர்களுக்கும் ஸர்வான்னுனுவதி ஆபத் விஷயம் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால் — அத:=அதேகாரணத்தால் ***அகாமகாரே*** = காமகாரப்ரதிஷேதத்தில் - ***சப்த:*** = ப்ரமாணவாக்யம் உள்ளது. தஸ்மாத் ப்ராஹ்மண: ஸுராம் நபிபேத் என்று காமகாரப்ரதிஷேதம் உள்ளது. விருப்பப்படி எதையும் செய்யலாகாது என்று தடையுள்ளது.

## 116 விஹிதத்வாதிகரணம்

ப்ரஹ்மவித்யை யஜ்ஞாதி கர்மாக்களை அங்கங்களாகக் கொண்டது எனப்பட்டது அந்த யஜ்ஞாதிகளே முமுக்ஷுக்களல்லாத கேவலாச்ரமிகளாலும் அனுஷ்டிக்கத்தக்கவையா - அல்லவா என்று சம்சயத்தால் ஸங்கதி.

வித்யாங்கங்களான யஜ்ஞாதிகள் கேவலாச்ரமங்களுக்கும் அங்கங்களா இல்லையா என சம்சயம். கேவலாச்ரமத்திற்கும் அங்கமாகில் வித்யைக்கும் அங்கமாகையால் யஜஞாதி கர்மாக்களுக்கு நித்யாநித்யஸம்யோக ரூபமான விரோதம் வருமாகையால் யஜ்ஞாதி கர்மாக்கள் கேவலாச்ரமத்திற்கும் அங்க-மென்று பூர்வபக்ஷத்தை நிரஸனம் செய்கிறார்.

## 449 (ஸூ) விஹிதத்வாச்ச ஆச்ரம கர்மாபி

யாவஜ் ஜீவம் அக்னிஹோத்ரம் ஜுஹோதி என்பது முதலியவற்றால் அமுமுக்ஷுக்களான கேவல ஆச்ரமிகளுக்கும் ஜீவன நிமித்தமாக விதிக்கப் பட்டிருக்கும் யஜ்ஞாதி ஆச்ரமகர்மாவும் ஆச்ரமத்திற்கு அங்கமேயென்றபடி. நித்யாநித்ய ஸம்யோக விரோதத்திற்கு பரிஹாரம் எப்படியென்றால். யாவஜ் ஜீவம் அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் என்றும், தமேதம் வேதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேனதானேன தபஸாऽநாசகேந என்றும் வெவ்வேறான விநியோகம் கூறியுள்ளபடியால் நித்யா நித்யாங்கமானாலும் விரோதமில்லை. அக்னிஹோத்ரமே ஜீவனுள்ளவரை செய்வதாகவும் காமனைக்கு ஏற்பச்செய்வதாகவும் இருவகையுள்ளதே, அதேபோல் இரண்டுடன் சம்பந்தம் தவறற்றது என்பதாம்.

## 450 (ஸூ) ஸஹகாரித்வேநச

தமேதம் வேதானுவசனேன இத்யாதியால் வித்யாஸஹகாரியாகவும் கர்மா அனுஷ்டிக்கத்தக்கதாம்.

## 451 (ஸூ) ஸர்வதாபி தஏவ உபயலிங்காத்

***ஸர்வதா*** = வித்யார்த்தம் என்றாலும் ***தஏவ*** = அந்த யஜ்ஞாதிகளே வினியோகிக்கப்படுகின்றன. ஒரு கர்மமே இரண்டிற்கும் பயன்படுவதாம். ***உபயலிங்காத்*** = உபயத்ர=இரு இடங்களில் ச்ருதியில் யஜ்ஞாதிசப்தங்களால் ஏகமேயென்று அறிவித்து விநியுக்தமாகையால் கர்மஸ்வரூப பேதங்களில் ப்ரமாணமில்லையென்பதாம்.

## 452 (ஸூ) அபிசஸ்மர்யதே — அபிபவஞ்ச தர்சயதி

தர்மேண பாபமபனுததி - இத்யாதியால் அந்தயஜ்ஞாதிகளால் வித்யோத்பத்தி ப்ரதிபந்தகமான பாபங்களின் நிவ்ருத்திமூலம் வித்யைக்கு தோல்வியிலாத வெற்றி ச்ருதியில் கூறப்படுகிறது.

யஜ்ஞம் தானம், தவம், தீர்த்தயாத்ரை, பகவதாராதனம் இவற்றில் ஒன்று நியமத்துடன் வர்ணாச்ரம முறைப்படி செய்யப்படுவது கர்மயோகம். அதனால், மனச்சுத்தியேற்பட்டு உண்மையான ஆத்மஜ்ஞானம் பிறந்தவனுக்கு வித்யை தோன்றுகிறது அவ்வித்யை வளர தினமும் செய்யப்படும் நித்ய நைமித்திக கர்மங்கள் அவ்வக்காலத்தில் தோன்றும் மனத்தின் மலத்தை நீக்கி மேன்மேலும் வளர்ச்சியைத்தந்து வித்யையை உண்டாக்குபவை எல்லா வகையிலும் அவற்றிற்கு அங்கபாவம் சித்தமாயிற்று. ஒரே கர்மா இரண்டிற்கும் பயன்படுவதென்றும் சித்தம். ஆகவே, கேவலாச்ரமிகளுக்கும் முமுக்ஷுக்களுக்கும் யஜ்ஞாதிகள் அனுஷ்டேயங்களென்று இவ்வதிகரணத்தின் கருத்து. (விதுராதிகரணம்)

## 117 அந்தராதிகரணம்

### 453 (ஸூ) அந்தரா சாபிது தத்த்ருஷ்டே:

நான்கு ஆச்ரமிகட்கும் ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டென்றும், ஆச்ரம தர்மங்கள் வித்யைக்கு ஸஹகாரிகளென்றும் சொல்லப்பட்டது. இப்போது இந்த நான்கு ஆச்ரமிகளிலும் அடங்காத - மனைவியிழந்தவர், மணம்செய்து கொள்ளாதவர்களுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டா இல்லையாவென்று சம்சயத்தால் ஸங்கதி. விதுரர் (தாரமற்றோர்) போன்ற அநாச்ரமிகளுக்கு ப்ரஹ்மவித்யையில அதிகாரமுண்டா இல்லையாவென்று சம்சயம். ப்ரஹ்ம வித்யையின் அங்கங்களான ஆச்ரமதர்மங்கள் இவர்களுக்கிராமையால் அதிகாரமில்லையென்று பூர்வபக்ஷம்.

### (ஸூ) அந்தரா சாபிது தத் த்ருஷ்டே:

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது. 'ச' சப்தம் ஏவகாரப் பொருளது. ***அந்தராசாபி*** = ஆச்ரமத்திற்குப்புறம்பான அநாச்ரமிகளுக்கும் அதிகாரம் உண்டு. ***தத்த்ருஷ்டே:***, ரைக்வர் போன்ற அநாச்ரமிகளிடத்தில் வித்யா நிஷ்டத்வம் காணப்பட்ட படியால் ஆச்ரமத்திற்கு நியதமில்லாத ஜபம், உபவாஸம் முதலியவற்றால் வித்யாஸித்திக்கலாம். ஆதலின்-அநாச்ரமி களுக்கும் ப்ரஹ்ம வித்யாதிகாரமுண்டென்பதாம்.

## 454 (ஸூ) அபிஸ்மர்யதே

அநாச்ரமிகளுக்கும் ஜபாதிகளால் வித்யானுக்ரஹம் உண்டென்று ''ஜப்யேநாபிச ஸம்ஸித்யேத்'' முதலிய ஸ்ம்ருதிகளாலும் புலப்படுகிறது.

## 455 (ஸூ) விசேஷானுக்ரஹச்ச

ஆச்ரம அநியதங்களான விசேஷத்தாலும் வித்யானுக்ரஹம் உண்டு என்பது ச்ருதியாலும் ஸித்திக்கிறது. ''தபஸா-ப்ரஹ்மசர்யேண ச்ரத்தயா வித்யயாத்மானமன்விஷ்யேத்'' என்பது ச்ருதி.

## 456 (ஸூ) அதஸ்து இதரஜ்ஜ்யாயோ லிங்காச்ச

அத: து இதரத் அநாச்ரமித்வத்தைக் காட்டிலும், பின்னமான ஆச்ர-மித்வமே - ஜ்யாய: ச்ரேஷ்டமானது. அநாச்ரமியாயிருப்பது ஆபத்விஷயம். சக்தனுக்கு உபாதேயமே என்று கருத்து. லிங்காச்ச ஸ்ம்ருதியாலுமென்றபடி. ''அநாச்ரமீ நதிஷ்டேத்து க்ஷணமேகமபி த்விஜ: என்றபடி அநாச்ரமியாய் வித்யாநிஷ்டனாதல் ஆபத்விஷயம் என்று கருத்து.

# 118 தத்பூதாதிகரணம்

## 457 (ஸூ) தத்பூதஸ்யது நாதத்பாவோ ஜைமினேரபி நியமாத் தத்ரூபாபாவேப்ய:

விதுராதிகளுக்கு வித்யையில் அதிகாரம் கூறப்பட்டது. இப்போது ஆச்ரமத்திலிருந்து நழுவியவர்களுக்கும் அநாச்ரமித்வம் ஸமமாகையால் வித்யாதிகாரமுண்டென்று சங்கையால் ஸங்கதி. நைஷ்டிகர்வைகானஸர், பரிவ்ராஜர்களுக்கும், ஆச்ரமத்திலிருந்து நழுவல் (ப்ரம்சம்) இருந்தாலும் வித்யாதிகாரமுண்டா இல்லையாயென்று ஸம்சயம். விதுராதிகளைப் போலே ஜபாதிகளாலும் வித்யானுஷ்டானம் ஸம்பவிப்பதால் அதிகாரமுண்டென்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார், துசப்தம பூர்வபக்ஷத்தை விலக்குவது. தத்பூதஸ்ய = நைஷ்டிகாதி ஆச்ரம நிஷ்டனுக்கு அதத்பாவ: அநாச்ரமியாக இருக்கை ந = கூடாது. தத்ரூபாபாவேப்ய: நியமாத் நைஷ்டிகர்கள் அவசியம் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களிலிருந்து நழுவுதல்கூடாதென சாஸ்த்ரம் நியமிக்கையால் என்றபடி தன் ஆஸ்ரமத்திலிருந்து ப்ரஷ்டனானால். சாஸ்த்ரம் ப்ரத்யவாயத்தைச் சொல்லுகிறது என்பதாம். ப்ரஹ்மசாரியானவன் ஆசார்யகுலத்தில் வசிப்பவன் அங்கேயே நிலைபெறுபவனும் என்றும், நைஷ்டிகன் (வைகானஸன்) கானகம் சென்றிடவேண்டும். பின் திரும்பக்கூடா தென்றும், ஸந்நியாஸி அக்னியைத் துறந்து பின் மறுபடியும் அதனை க்ரஹிக்கக் கூடாதென்றும் சாஸ்த்ரம் நியமிக்கிறது. விதுராதிகளைப்போல் பரிப்ரஷ்டர் களை அநாச்ரமிகோடியில் சேர்க்கலாகாது. ஆகையாலிவர்களுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரம் கிடையாதென்பது ஜைமினியின் மதம்.

## 458 (ஸூ) நசாதிகாரிகமபி பதநாநுமாநாத் தத்யோகாத்

**அதிகாரிகம்** அதிகாரம் என்னும் ஆரும் அத்யாயத்தில் கூறியதும், ''அவகீர்ணிபசுச்சதவத்'' என்ற ஸூத்ரத்திற்கு விஷயமான ப்ரஹ்ம - சார்யவகீர்ணீ நைர்ருதம் கர்த்தபமாலபேத என்றபடி *நச* = நைஷ்டிகப்ரஹ்ம சாரிக்குக்கூடாது *பதநாநுமாநாத்* = நைஷ்டிகப்ரஷ்டர்களுக்கு பதிதத்வம் ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருப்பதால் தத்யோகாத் அந்த ப்ராயச்சித்தம் கூடாது. ''ஆரூடோ நைஷ்டிகம் தர்மம் யஸ்து ப்ரச்யவதேநர:

ப்ராயசித்தம் நபச்யாமி யேந சுத்யேத்ஸ ஆத்மஹா என்று ப்ராயச் சித்தம் இல்லையென்று ஸ்ம்ருதியில் கூறப்பட்டதென்று கருத்து. ஆனால் கீழ்ச்சொன்ன ப்ராயச்சித்தத்திற்கு அவகாசம் ஏதெனில், உபகுர்வாண ப்ரஹ்மசாரீப்ரஷ்டன் ஆனால், அவ்விஷயத்தில் ஸாவகாசமாகும் என்பதாம்.

## 459 (ஸூ) உபபூர்வகமபீத்யேகே பாவமநசனவத்ததுக்தம்

*ஏகே* = சிலர், பாவமபி = ப்ராயச்சித்தம் இருப்பதையும் கூறுகிறார்கள். ஏனெனில், *உபபூர்வம்* இந்த நைஷ்டிகப்ரஹ்மசர்ய பரிச்யவனமானது உபபாதகம் = மஹாபாதகங்களில் அடங்கியதன்று. ஆகையால், உண்டென் பதற்கு உதாரணம் : அநசநவத் = மதுவின் அசநம் முதலியவற்றின் நிஷேதம். அதன் ப்ராயச்சித்தம் இவை உபகுர்வாணனுக்கும் நைஷ்டிகனுக்கும் ஸம மானாற்போல், ப்ரஹ்மசர்யம் நழுவுவதிலும் அவ்விருவருக்கும் ப்ராயச்சித்தம் ஸமம் '' உத்தரேஷாஞ்சைததவிரோதி '' என்று உபகுர்வாணப்ரஹ்மசாரிக்குச் சொன்ன தர்மம் உத்தராச்ரமிகளுக்கும் தத்தம் ஆச்ரமத்திற்கு விரோத மின்றியேயிருக்கவேண்டும் என்பதாம்.

## 460 (ஸூ) பஹிஸ்தூபயதாபி ஸ்ம்ருதேராசாராச்ச

துசப்தம் மதாந்தரத்தை விலக்குவது. *உபயதாபி* உபபாதகமாயிருந் தாலும், *பஹி:* = பரிப்ரஷ்டன் நைஷ்டிகனைவிட வெளிப்பட்டவனே (கீழானவனே) வித்யாதிகாரமற்றவனேயென்பதாம். *ஸ்ம்ருதே:* ப்ராயசித்தம் நபச்யாமி என்கிற ஸ்ம்ருதியாலும், *ஆசாராச்ச* = நைஷ்டிக பரிப்ரஷ்டர். பால- ஹத்யைசெய்தவன், நன்றி மறந்தவன், சரணாகதனைக் கொன்றவன் இவர்களுக்கு வித்யோபதேசம் செய்வதில்லையென்பது சிஷ்டாசார ஸித்த- மாகையாலுமென்றபடி ; ஆனாலும், இவர்களுக்கும் சில பெரியோர்களால் பாபநிவ்ருத்திக்காக ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டேயுள்ளது. ஆயினும், கர்மாதிகாரத்தையுண்டாக்கவல்ல சுத்தி இவர்களுக்குக் கிடையாதென்பது ஸூத்ரகாரரின் திருவுள்ளம்.

## 119 ஸ்வாம்யதிகரணம்

### 461 (ஸூ) ஸ்வாமிந: பலச்ருதேரித்யாத்ரேய:

உபாஸனத்தை யனுஷ்டிப்பவர் அனுஷ்டிக்காதவர் என்ற பிரிவு ப்ரஸக்தமாதலின், அடுத்தபடி உத்கீதோபாஸனையை அனுஷ்டிப்பவர் அனுஷ்டிக்காதவர்பற்றி விசாரிக்கப்படுகிறதென்று ஸங்கதி.

உத்கீதாத்யுபாஸனம் யஜமானன் செய்யவேண்டியதா? ருத்விக் செய்யவேண்டியதா? என்று சம்சயம். ''யதேவ வித்யயாகரோதி ததேவவீர்யவத்தரம்'' என்று க்ரதுவின் வீர்யவத்தரத்வம் என்ற பலம் யஜமானனுக்கே யாதலின், தஹரோபாஸனாதிகள்போல யஜமானனாலேயே செய்யத்தக்கது என்று பூர்வபக்ஷத்தைக்காட்டுகிறார்.

### 462 (ஸூ) ஸ்வாமிந: பலச்ருதே: இதி ஆத்ரேய:

*ஸ்வாமிந:* யஜமானனுக்கே உத்கீதாதி உபாஸனகர்த்ருத்வம். ஏனெனில், *பலச்ருதே:* அவனுக்குத்தான் பல சம்பந்தம் ச்ருதியில் உள்ளபடியேயென்று ஆத்ரேயர் கூறுகிறார். சித்தாந்தத்தைக் கூறுகிறார்.

### 463 (ஸூ) ஆர்த்விஜ்ய மித்யௌடுலோமி: தஸ்மைஹி பரிக்ரீயதே

***ஆர்த்விஜ்யம்*** ருத்விக்கே செய்யத்தக்கது. உத்கீதாத்யுபாஸனம் என்று ஔடுலோமியாசார்யர் எண்ணுகிறார். ஏனெனில். க்ரது யஜமானனுக்குப் பலசாதனமேயாயினும், அந்தக்ரதுவின் அனுஷ்டானம் ருத்விக்குகளை வரித்து தக்ஷிணை தரவேண்டும் என்பதுபோன்ற வாக்யங்களால். ருத்விக்கைக்கொண்டே செய்யவேண்டுமென்று சாஸ்த்ரம் விதிப்பதால், ஸபலமான க்ரதுவினை அனுஷ்டிக்க ருத்விகானவன் யஜமானனால் விலைக்கு வாங்கப் பட்டவனாய் அவனுடைய பலத்திற்காகப்ரவர்த்திக்கிறான். ஆகவே, க்ரதுவை யனுஷ்டித்தால் ருத்விக்கால்தானென்பதால் க்ரதுவின் அங்கவிஷயமான உத்கீதோபாஸனமும் ருத்விக்கால்தான் செய்யத்தக்கதென்று தேறுகிறது.

## 120 ஸஹகார்யந்தர வித்யதிகரணம்

### 464 (ஸூ) ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண த்ருதீயம் தத்வதோ வித்யாதிவத்

முன்பு யஜ்ஞாதிகளும் - சமாதிகளும் வித்யாஸஹகாரிகளெனப்பட்டன. இப்போது வேறு ஸஹகாரி கூறப்படுகிறது என்று ஸங்கதி. இடையில் உத்கீதம் பற்றிய விசாரம் ப்ரஸங்காத்வந்தது. ஆதலின், விரோதமில்லை. இங்கு மனனத்தை விதிக்கப்போவதால் அது த்யானத்திற்கு அவலம்பனமான

சுபாச்ரயத்தைப்பற்றியதாதலின், யஜ்ஞாதிகளையும், சமாதிகளையும் நிருபித்த பின் மனனம் நிருபிக்கப்படுகிறதென ஸங்கதி.

தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முனி: என்று மௌனம் வித்யாங்கமாக விதிக்கப்படுகிறதா அல்லது அனுவதிக்கப்படுகிறதா என்று சம்சயம். மௌனம் மனனரூபமாகையால், ச்ரோதவ்யோமந்தவ்ய: என்று விதியால் ப்ராப்தமாகையினால் : மௌனம் அனுவதிக்கப்படுகிறது என்று பூர்வபக்ஷம். இதனை நிராகரிக்கிறார்.

**தத்வத:** = வித்யாவானுக்கு ஸஹகார்யந்தரவிதி: வேறு ஸஹகாரியான மௌனம் விதிக்கப்படுகிறது. ***விக்யாதிவத்*** = யஜ்ஞதானம் முதலிய ஆச்ரம தர்மங்களையும், ஆதி என்ற சொல்லால் ச்ரவண மனனங்களையும் குறிக்கிறது. ஆகவே, ஆச்ரம தர்மங்களும் ச்ரவண மனனங்களும் போல பாண்டித்யம் - பால்யம் இவற்றைவிட்டு வேறான மூன்றாவதான வேறு ஸஹகாரியாக மௌனம் விதிக்கப்படுகிறது. மௌனம் பாண்டித்யத்தையும் பால்யத்தையும் விட்டு வேறானதென்பது - ***பக்ஷேண*** = வேதாந்த பக்ஷத்தால்; **அத முனி:** என்று முனிசப்தத்திற்கு பிருந்த மனனமுடைய வ்யாஸாதியர் விஷயத்தில் பாக்ஷிகமான ப்ரஸித்தியிருப்பதால் கேட்டதை நிலைபெறுத்திக் கொள்ளல் என்னும் ரூபமான ஊஹாபோஹங்களுக்கு ஏற்றப்ரதிபை என்னும் பாண்டித்யத்தைவிட மேல்சொல்லும் மௌனம் த்யானத்திற்கு அவலம்பனமான சுபாச்ரய திவ்யமங்கள விக்ரஹாதிதாரண ரூபமாகையால் வேறுபட்டதென்று கருத்து. இங்குள்ள விசேஷம் ச்ரவணமும் மனனமும் தன் ஆசையாலேயே ப்ராப்தங்கள் ஆனாலும், வித்யைக்கு ஸஹகாரிகள் (உபகாரகங்கள்) ஆகையால், ஆதிசப்தத்தால் க்ரஹிக்கப்பட்டன.

## 465 (ஸூ-௪) க்ருத்ஸ்னபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார:

ஸர்வாச்ரமிகளுக்கும் வித்யை பொதுவானால், சாந்தோக்யத்தின் இறுதியில் ஸகல்வேவம் வர்த்தயன்யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே நசபுந ராவர்த்ததே நச புநராவர்த்ததே என்று க்ருஹஸ்த தர்மத்தைக் கொண்டு ஏன் உபஸம்ஹாரம் செய்தானென்றால் உத்தரமருளுகிறார்.

து சப்தம் வினாவை விலக்குவது, ***க்ருத்ஸ்னபாவாத்*** = எல்லா ஆச்ரமங்களிலும் வித்யையிருப்பதால்; ***க்ருஹிணா உபஸம்ஹார:*** = க்ருஹஸ்தர்களான உபாஸகர்களுமுண்டென தோன்றச்செய்ய க்ருஹஸ்த தர்மத்தைக்கொண்டு உபஸம்ஹாரம் செய்யப்படுகிறது. என்ற பூர்வபக்ஷம் நிரஸிக்கப்பட்டது.

## 466 (ஸூ) மௌநவதிதரேஷாமப்யுபதேசாத்

***மௌநவத்:*** *ஸர்வவித ஆசைகளையும் விட்ட ஸந்யாஸியின்ன பக்ஷாசரண பூர்வக மௌனோபதேசம்போல் இதரேஷாமபி மற்ற ஆச்ரமிகளுக்கும், உப- தேசாத்–யஜ்ஞாதிகளையும் ஸஹகாரிகளாக உபதேசிக்கையால்; இதனாலும் அதமுனி: என்ற வாக்யத்தில் பிக்ஷாசர்யம் சரதி என்று ஸந்யாஸாச்ரமத்திற்கே யுரிய தர்மத்தைக்கொண்டு உபஸம்ஹாரமும் ஸர்வ ஆச்ரம தர்மங்களையும் காட்டுபவையாம்.*

## 121 அநாவிஷ்காராதிகரணம்

## 467 (ஸூ) அநாவிஷ்குர்வந்நந்வயாத்

*''தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத்'' என்று மௌனரூபமான வித்யாங்கம் முன் சிந்திக்கப்பட்டது இப்போது பால்யமும் வித்யாங்கமென்று சிந்திக்கப்படுகிறது. என்று ஸங்கதி தஸ்மாத்ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத் என்னுமிடத்தில் பாலனின் விருப்பப்படியெல்லாம் நடப்பது என்பது வித்வானுக்கு ஏற்கத்தக்கதா அல்லது தன் புகழை வெளிப்படுத்தாத நிலையாகிற பால்யம் க்ராஹ்யமா என்று சம்சயம் பால்யேந திஷ்டாஸேத் என்னுமிடத்தில் பாலனின் காமசாராதிகள் யாவையும் ஏற்கத்தக்கவையென்று பூர்வபக்ஷம். வித்வானுக்கு விசேஷத்தை விதிக்கையால் வித்யையின் மஹிமையாலும் - வித்வத்விஷயத்தில் அனேக நியமங்களைச் சொல்லும் சாஸ்த்ரங்களின் விசேஷவிதியாலும் பாதிக்கப்படுகின்றன என்ற பூர்வ- பக்ஷத்தை நிராகரிக்கிறார்.*

## 468 (ஸூ) அநாவிஷ்குர்வந்நந்வயாத்

***அநாவிஷ்குர்வந்:*** *வித்வானும் பாலர்களைப்போல் தன் மாஹாத்ம்யத்தை வெளியிடாதவராய் இருக்கவேண்டும். **அன்வயாத்:** பாண்டித்யம் காரணமாகத் தன் மாஹாத்ம்யத்தை வெளியிடாமையே வித்யைக்கு அனுகூலமாக அன்வயிப்பதால் என்றவாறு. நாவிரதோ துச்சரிதாத் நாசாந்தோ நாஸமாஹித: என்றபடி பாலர்களைப்போல் வித்யோத்பத்திக்கு விரோதிகளாகத் தோன்றுகின்ற தன் உயர்குலப்பிறப்பு முதலிய பெருமைகளை வெளிப்படுத்தாமலேயிருக்கவேண்டும் என்பதாம்.*

## 122 ஐஹிகாதிகரணம்

## 469 (ஸூ) ஐஹிக மப்ரஸ்துத ப்ரதிபந்தே தத்தர்சநாத்

***இவ்வாறு*** *அங்கங்கள் பற்றி சிந்திக்கப்பட்டது. இதன்பின் அங்கி நிறைவேற சிந்தை செய்யப்படுகிறதென்று ஸங்கதி. இம்மையில் பலம்*

கிட்டுவதற்கான உபாஸனமானது தனக்குக்காரணமான ஸுக்ருதமோ துஷ்க்ருதமோ சித்தித்தபின் உண்டாகிறதா? அல்லது பின்னுலோ வேறு காலத்திலோ உண்டாகலாமென்று அநியமமா என்று சம்சயம். உத்பத்தி காரணம் பூர்ணமாயிருந்தால் விளம்பிக்கக் காரணமில்லாமையால் உடனே உண்டாகுமென்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர்.

***ஐஹிகம்*** = முக்தியைத்தவிர்த்த வேறு இம்மை பலன்களையுடையது உபாஸனம். ***அப்ரஸ்துதப்ரதிபந்தே*** = ப்ரபலமான கர்மாக்களால் பலத்திற்கு பிரதிபந்தம் இல்லாதபோது; ஆகவே, இப்போது அனுஷ்டித்த கர்மபலத்துக்கு ப்ரபலமான வேறு கர்மாக்களால் ப்ரதிபந்தமில்லையென்ருல், அடுத்துதானே ச்ரேயஸ்ஸிற்கான உபாஸனம் நிறைவேறுகிறது என்றும், ப்ரதிபந்தகம் இருந்தால் வேறுகாலத்தில் உபாஸனத்தின் நிறைவேற்றம் என்றும் அநியமம் என்பது கருத்து. எங்ஙனேயென்னில், யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம் பவதி என்று ச்ருதியில் உத்கீதவித்யாயுக்தனை புருஷனுடைய கர்மபலத்துக்கும் ப்ரபலமான வேறு கர்மாக்களால், ப்ரதிபந்த மேற்படாமையே பலனென்று கூறப்பட்டிருப்பதால் என்றபடி. மழை விரும்புபவன் காரீரி என்ற யாகத்தைச் செய்ய விதித்தபடி, வேறு ப்ரதிபந்தகம் இல்லாவிட்டால் உடனே பலனும், ப்ரதிபந்தகமிருந்தால் காலம் விளம்பித்தும் பயன் ஏற்படுமென்று அநியமம் உள்ளதே போல் இங்கும் அநியமம் சித்தம் என்று கருத்து.

## 123 முக்திபலாதிகரணம்

### 470 (ஸூ) ஏவம் முக்திபலாநியம: ததவஸ்தாவத்ருதே: ததவஸ்தாவத்ருதே:

பூர்வம் இம்மையில் பலன்தரும் வித்யைக்கு உத்பத்திகாலத்தில் அநியமம் சொல்லப்பட்டது. இப்படியே ப்ரஹ்மப்ராப்தி ஹேதுக்களான வித்யைக்கும் உத்பத்தியில் அநியமம் கூடலாமென்று அதிதேசத்தால் ஸங்கதி.

முக்திபலகங்களான உபாஸனங்கள் தமக்குக்காரணமான மிகுந்த புண்யமுள்ள கர்மாக்களுக்குப்பின் தோன்றுகின்றனவா? அல்லது முன்போல் அநியமமா என்று சம்சயம். முக்திபலகோபாஸனங்களைச் சாதிக்க வல்லவையும் பலனை எதிர்பாராதவையுமான புண்ய கர்மாக்கள் வேறு எல்லா கர்மாக்களையும் விட பலம்வாய்ந்தவையாதலின். துர்ப்பலமான கர்மாக்களால் அவற்றிற்கு பிரதிபந்தம் கூடாதாதலின், உடனேயே உபாஸனங்கள் உத்பத்தியாகின்றன என்று பூர்வபக்ஷம்.

***ஏவம்:*** = முன்போல், ***முக்திபலாநியம:*** = முக்தியைப் பலமாகக்கொண்ட உபாஸனங்களுக்கும் அநியமம் கூடும். ஏனெனில், ***ததவஸ்தாவத்ருதே:***

ப்ரதிபந்தகமில்லாத காலத்தில் தானே பல நிச்சயம் உண்டாவதால் என்றபடி இத்தால், இங்கும் வித்யாஸாதனமான கர்மம் ப்ரபலமானாலும் இதைவிட ப்பாகவதாபசாரம் ப்ரபலமாகையால் அதனால் ப்ரதிபந்தம் ஸம்பவிக்கலாம் ஆதலால், அநியமம் ஸித்தித்தது என்பதாம்.

**இங்குள்ள விசேஷம்.** உத்பத்திப்ரதிபந்தகமில்லாமை என்ற காரணத்தால் உண்டான உபாஸனத்திற்கும் முக்தியென்னும் கார்யம் உத்பத்தியாகும் விஷயத்திலும் – ப்ரதிபந்தகாபாவரூபமான விளம்பமோ அவிளம்பமோ உண்டு என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம். ந்யாயஸித்தாஞ்ஜனத்தில், நிஷ்பன்னோபாயஸ்ய என்று தொடங்கி, துல்யந்யாயதயானுஸந்தேயம் என்று முடியும் வாக்கியத்தால் உபாஸனம் சித்தித்தவனுக்கும் பாகவதாபசாரரூபமானப்ரபல ப்ரதிபந்தகம் வந்தால், பலவிளம்பம் ஏற்படுமென்று காட்டப்பட்டமையால் புத்ரகாமேஷ்டி, வித்யோத்பாதக கர்மாக்கள் இவற்றிற்கும் ஸமாதி நிலை நிறைவேறிய அதிகாரிகளுக்கும் ப்ரதிபந்தத்துக்கேற்றவாறு கால விளம்பம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால்,பூரணமானவித்யைக்கும் ப்ராரப்த கர்மாவிற்கேற்ற விளம்பம் ஏற்கவேண்டும். ப்ராரப்தத்தின் முடிவில். கடைசி நினைவை எல்லையாகக் கொண்டே உபாஸனம் சித்திக்கும் என்று நியமம் கூடாது. நியாய ஸித்தாஞ்ஜனத்தில் - அதசஜன்மாதிஹேதுரேவ என்று தொடங்கி. நிஷ்பலத்வப்ரஸங்காத் என்பது வரை வாக்யங்களிலே இதுபற்றித் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. அங்கு ஜன்மாதிக்குக்காரணமாக கர்மவிசேஷமோ சாபாதிகளோ மேல்விழுகின்றன. அப்போது அவ்விளம்பம் வரத்தான்வரும். ஆயினும், உபாஸனம் நிறைவேறியவனுக்குச் சிரமமில்லை. அவன் ப்ராரப்தத்தின் முடிவில் போலவே. இந்த உபாஸனத்தின் முடிவிலும் ஸம்ஸாரத்தை விட்டுவிடுகிறான். மேன்மேலும் கர்மாக்களைச் செய்தே வருவதால் ஸம்ஸாரம் நீங்காது என்று கூறலாகாது. சாஸ்த்ர விரோதம வருமாதலால், உபாஸனம் முடிந்தவனுக்குப் பயனில்லையென்ற நிலையும் வந்துவிடும்.

இங்கு ந்யாய பரிசுத்தியில் - உபாதிக்ரந்தத்தில் பக்ஷாவ்ருத்தி. வ்யாப்தி இவற்றுள் ஒன்றிற்காவது ஸந்தேஹம் ஏற்பட்டால் ஸந்திக்தோபாதியெனப்படும். அதில் முதலாவது - சர்ச்சைக்குரிய ஜீவன் இவ்வுடலின் முடிவில் முக்தி பெறுகிறான். உபாஸனம் நிறைவேறியமையால் சுகப்ரஹ்மம் முதலியவர்போல (என்றவிடத்தில்) கர்மா அடியோடு நீங்குவது உபாதி. இது முதலாவது பக்ஷாவ்ருத்தியைச்சேர்ந்தது.

ஸர்வவிதங்களிலும் ஸமாதி நிறைவேறியவனிடம் சர்ச்சைக்குரிய ஜீவனிடம் இருக்கிறது - இல்லை என சந்தேகப்படுவதால் சங்கிதோபாதியோகிகளுக்கும் பிந்தைய பாபம் ஸம்பந்திக்காது. முந்தைய பாபம் நசித்துப்போம். ஆயினும் ப்ராரப்தகர்மாக்கள் ஒரே சரீரத்தின் முடிவில் அழிகின்றன,

என்று நியமமில்லை. உபாயானுஷ்டானம் நிறைவேறியவனுக்கும் ப்ரதிபந்தக கர்மாக்களால் பலநாள் ஸ்திதியைப்போல பற்பல சரீரங்களைப் பெறுவதும் பொருந்துவதேயாகும்.

அவ்வாறே ஸூத்ரங்களும் போகேநத்விதரேக்ஷபயித்வா தஸம்பத்யதே என்றும். யாவததிகாரம் அவஸ்திதிராதிகாரிகாணாம் என்றும் இதே கருத்தினைக் கூறுகின்றன.

உபாஸனம் முடிந்தவனுக்கு அதே ஜன்மத்தில் முக்தியுண்டு என்பது போன்ற ஸ்ம்ருதி - உபாஸனம் முடியாதவனுக்கு வேறு சரீரம் என்ற நியமம் பற்றியதாதலால், ப்ராயிகமானவிஷயமாகும். ஆகவே, இதற்கு ஸாதனவ்யாபகத்வமில்லை என்பது போன்றவையும், உபாஸனம் நிறைவேறியவனுக்கு ப்ரதிபந்தகத்திற்கேற்ப பல விளம்பத்தைச் சொல்வதால் பல ஸ்ரீஸூக்தி விரோதத்தாலும் கூடாதென்று கருத்து. இதனால் வித்யை பிறக்கும் சரீரத்திலேயே வித்யை நிறைவேற்றம் என்பது தேறுகிறது.

## இந்த பாதத்தில் பதினைந்து அதிகரணங்களின் சாரம்

| *அதிகரண எண்.* | | |
|---|---|---|
| 1 | ஸ்துதிமாத்ராதிகரணம் | வித்யை கர்மாக்களை அங்கமாகக் கொண்டது என்றும் |
| 2 | உத்கீதாதிகரணத்தில் | உத்கீதத்தில் அப்ராப்தையான ரஸதமத்வாதி த்ருஷ்டி விதிக்கப்படுகிறது. |
| 3 | பாரிப்லவாதிகரணத்தில் | வித்யாவிதியுடன் கூடிய ஆக்யான சம்சனங்கள் வித்யாஸித்த்யர்த்தங்கள் |
| 4 | அக்னீந்தனாதிகரணத்தில் | அந்தந்த ஆச்ரமத்யததர்மங்களால் ஊர்த்வரேதஸ்ஸுகளுக்கு ஸாங்கவித்யைஉண்டென்றும் |
| 5 | ஸர்வாபேக்ஷாதிகரணத்தில் | க்ருஹஸ்தனின் வித்யையும், யஜ்ஞதானாதிகளை யபேக்ஷிப்பதென்றும், |
| 6 | சமாத்யதிகரணத்தில் | க்ருஹஸ்தனுக்கும் சாந்த்யாதிகள் தேவையென்றும், |
| 7 | ஸர்வான்னானுமத்யதிகரணத்தில் | ஆபத்தில்லாக் காலத்தில் வித்வானுக்கும் அன்னசுத்தியாலேயே யோகசித்தி யென்றும் |
| 8 | விஹிதத்வாதிகரணத்தில் | ஒருகர்மமே வித்யார்த்தமாகவும் ஆச்ரமார்த்தமாகவுமாகலாம் என்றும் |

| | | |
|---|---|---|
| 9 | விதுராதிகரணத்தில் | விதுரனுக்கும் வித்யாஸம்பந்தமுண்டென்றும். |
| 10 | தத்பூதாதிகரணத்தில் | ப்ரஹ்மசர்யமிழந்த நைஷ்டிகாதிகளுக்கு வித்யையில் அதிகாரமில்லையென்றும், |
| 11 | ஸ்வாம்யதிகரணத்தில் | க்ரத்வங்கங்களில் ரஸதமத்வாதிதர்சனம் ருத்விக் கர்த்ருகமென்றும் |
| 12 | ஸஹகார்யந்தர [illegible]ல் | த்யான ஸித்த்யர்த்தமாக சுபாச்ரய தாரணுரூபமான மௌனம் விதிக்கப்படுகிறதென்றும் |
| 13 | அனுவிஷ்காராதி-கரணத்தில் | பால்யமாவது தன் மஹிமையை மறைப்பதென்றும், |
| 14 | ஐஹிகாதிகரணத்தில் | காரணமான ஸுக்ருத துஷ்க்ருதங்கள் ப்ரபலகர்மாந்தரங்களால் தடைப் படாவிட்டால் இம்மையில் ப்ரஹ்ம வித்யை உண்டாகிற-தென்றும். |
| 15 | முக்திபலாதி கரணத்தில் | அப்ரஹ்மவித்யை போலவே ஸுக்ருதங்களும் பாகவதாபசாராதிகளால் ப்ரதிபந்தமேற்பட்டால் ப்ரஹ்மவித்யையை உண்டாக்கமாட்டா என்றும் ஸூத்ரகாரர் பதினைந்தர்த்தங்களை இப்பாதத்தில் விளக்குகிருர். |

மூன்றும் அத்யாயம் நான்காம் பாதம் முற்றியது.

# நான்காம் அத்தியாயம்

## 151 ஆவ்ருத்த்யதிகரணம்

ஸ்வர்க்ககாமோ யஜேத என்னுமிடத்தில் பலாவமர்சம் முதலில் ஏற்படுவதாலும் பலாவாப்தியென்பது ஸாதனேத்பத்தியை அங்கீகரிக்க வேண்டியிருப்பதாலும், இதில் உத்பத்திக்ரமத்தை யனுசரித்து முதலத்யாயத்தில் ஸாங்கமான வித்யை நிரூபிக்கப்பட்டது. இப்போது அந்த வித்யையின் பலத்தை நிரூபிக்கிருர் என்பது நான்காம் அத்தியாயத்திற்கான ஸங்கதி. அந்த வித்யா பலங்களாக உத்தராபம் ஒட்டாமையும், பூர்வபாபநாசமும் ஸ்தூல தேஹத்திலிருந்து உத்க்ராந்தி, அர்ச்சிராதிகதி, தேசவிசேஷம் சென்று புறப்படும் பரப்ரஹ்மானுபவம், என்ற நான்கு பொருட்கள் நான்கு பாதங்களால் முறையே காட்டப்படுகின்றன என்பது பாத ஸங்கதி. முன் இரண்டு பாதங்களில் ஸ்தூல தேஹத்திலிருக்கும் வித்வானுக்கு வித்யா